# எனது சிந்தை மயங்குதடி




அவளைச் சுற்றிலும் இருந்த கலகலப்பு, பரபரப்பு, குதூகலம் எல்லாமே எங்கோ தொலை தூரத்தில் நடப்பது போன்ற பிரமைதான், அப்போதும் மதுவந்திக்கு!

ஏதோ தெரு முனையில் இருக்கும் திருமண மண்டபத்தில், யாருக்கோ விழா நடக்கிறது. அவளது வீட்டில், அவளுடைய உடன் பிறந்த சகோதரியைப் போல, அவளோடு கூடவே வளர்ந்த சிந்தாமணிக்கு அல்ல என்பது போன்ற ஒட்டற்ற உணர்வு!

இது மட்டும் சிந்தாவுக்குத் தெரிந்தால், பாவம், அவள் எவ்வளவு வருத்தப்படுவாள்!

இத்தனைக்கும் சிந்தாவிடம் மதுவுக்கு அவ்வளவு பிரியம்!

சும்மாவே, தனக்கு யாருமே இல்லை., தன் மேல் பச்சா தாபப்பட்டுச் சித்தப்பா வீட்டினர் அவளை வளர்க்கிறார்கள் என்ற எண்ணம், அவளை வாட்டுவது, குடும்பத்தில் எல்லோரும் அறிந்த உண்மை!

அந்த வாட்டத்தைப் போக்குவதற்காக, மதுவந்தி, அவளுடைய பெற்றோர், தம்பி எல்லோருமே, பெரு முயற்சி செய்ய வேண்டியிருந்தது., செய்தார்கள்!

அவள் சொல், அந்த வீட்டில் வேதம்! அவளுக்குப் பிடித்த சாப்பாடுதான்! அவளுக்குப் பிடித்தமான பொழுது போக்குதான்!

இப்படிக் குடும்பம் மொத்தமும் பாடுபட்டு, அந்தத் தாழ்வுணர்ச்சியை அவளிடம் இருந்து விரட்டியும் விட்ட வர்கள் எனலாம்.

என்றாலும், திடுமெனச் சிந்தாமணி, சோகப் பதுமையாகி விடுவாள்.

அப்போதெல்லாம், காரணத்தை ஊகித்துவிட்டாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல், அந்த வருத்தத்தைப் போக்குவதில், எல்லோரும் சேர்ந்து, முழு மூச்சாக ஈடுபட்டு, அவளைக் குதூகலப்படுத்துவார்கள்!

எல்லோரையும் விட, அதில் முனைந்து செயல் படு கிறவள், மதுவந்திதான்!

ஆனால், இந்த மூன்று ஆண்டுகளாக, அதில் வெளியே தெரியாத ஒரு சின்ன மாற்றம்!

எதிலுமே, முன்னைப் போல முழு ஈடுபாடு மதுவந்திக்கு ஏற்படுவது இல்லை!

ஆனால், அது வெளியே யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில், இன்னமும் அதிகமாகப் பாடுபடுவாள்.



இப்படி தன்னை மறைத்து வாழ்ந்தவளுக்குச் சிந்தா மணியின் திருமணம் நிச்சயம் ஆனதில் இருந்து, அது மிகவும் கடினமாக இருந்தது!

சிந்தாவுக்குத் திருமணம் ஆவதில், அவளுக்குப் பொறாமையோ, வெறுப்போ, கொஞ்சமும் கிடையாது என்பது நிச்சயமே! ஆனாலும், மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய நினைவுகள் வந்து குமிவதை, அவளால் தடுக்க முடியவில்லை என்பது அதே அளவு நிச்சயம்தான்!

நெஞ்சக் கூட்டினுள் முட்டிக்கொண்டு வந்து குமிந்த அந்த நினைவுகளாலேயே, வீட்டில் முதல் முதலாக, மிகுந்த கோலாகலத்துடன் நடக்கும் அந்தக் குடும்ப விழாவில், அவளால் முழு மனதோடு ஈடுபடவும் முடியாது போயிற்று!

இந்த முதல் விழா அவளுடையதாக இருந்திருக்கக் கூடும்!

ஆனால், தனக்கு முதலாவதாக நடக்கவில்லையே என்பது, அவளது வருத்தம் அல்ல!

ஆனால், அந்தக் கனவு கலைந்த விதம்...!

அவன் அப்படிப்பட்டவனா?

எப்படி முடியும்? அவனால் எப்படி முடிந்தது?

இன்னமும், அப்படியொரு நிகழ்ச்சியை.... நிகழ்ந்தது என்பதற்கு அசைக்க முடியாத சான்று இருந்த போதும், அவளால் கற்பனையாக உருவகப்படுத்தக்கூட முடிவ தில்லை! அந்த அளவுக்கு, அவனைப் பற்றிய நம்பிக்கை, அவளது மனதில்... மூளையில்... உடம்பின் ஒவ்வொரு திசுவிலும் பதிந்து போயிருந்தது!

ஆனால், அது நடந்தும் இருக்கிறதே!

கடவுளே! இந்தத் தவிப்புகளில் இருந்து, அவளுக்கு என்றாவது விடுதலை கிடைக்குமா?

ஒருவேளை, அவனது குணத்தைப் பிரதிபலிக்கும் ஒரு செயலை நேரில் கண்டிருந்தால்.... நேரில்கூட வேண்டாம்., கற்பனையிலேனும் காண முடிந்தால், அவளது ஆழ்மனம் அவனை மறக்க முயன்று, வெற்றியும் பெற்றிருக்கக் கூடும்.

ஆனால், அப்படி ஒரு கற்பனையைச் செய்து பார்க்க அவள் முயன்றாலும், இன்னொரு பெண்ணின் அருகில் அவனை நிறுத்துவது கூட முடியாது என்று, அவளது மூளை 'ஸ்ட்ரைக்' செய்துவிடும்!

எனவேதான், தகுதியற்ற அவனை மனதில் இருந்து ஒதுக்க முடியாமல், மதுவந்தி இன்னமும், இந்த வேதனைப் படுகிறாள்!

பத்தொன்பது வயது என்பது, இன்றையச் சூழலில் திருமணத்துக்கு ஓரளவு சிறு வயதுதான்! அதனால்தான், அவனை இனம் கண்டுகொள்ள, அவளுக்குத் தெரியாது போயிற்றோ?

ஒரு பெண் பித்தன் எப்படி இருப்பான் என்று...

''மதூ... ஏ மது... சும்மாச் சும்மா எங்கேடீ போய் விடுகிறாய்? தொண்டை வலிக்க, நான் இப்படி அலற வேண்டியிருக்கிறதே!'' என்று சிந்தாமணியின் உரத்த குரல், மதுவந்தியைச் சுய நினைவடையச் செய்ய, ''இதோ வருகிறேன்!'' என்று குரல் கொடுத்துவிட்டு, அவசரமாக ஒன்றுவிட்ட சகோதரியை நாடிச் சென்றாள், அவள்.

பெட்டி அடுக்கிக் கொண்டிருந்தாள் சிந்தாமணி.



மதுவந்தியைக் கண்டதும், ''மது, மது, என் நீலச் சுரிதாருக்கு, உன்னுடைய கிறிஸ்டல் மாலைதான் பொருத்தமாக இருக்கும்! எடுத்துக்கொண்டு போகட்டுமா? நீதான், அது போலெல்லாம் இப்போது அணிவதே இல்லையே! அப்படியே வேண்டுமென்றாலும், இங்கே எளிதாக இன்னொன்று வாங்கிவிடலாம்! என்ன, தருகிறாயா?'' என்று கேட்டாள்.

எப்போதோ வாங்கியது!

''எடுத்துக்கொள்!'' என்று அனுமதியளித்த தங்கையின் மனம், மற்றவளின் பேச்சின் மற்ற பகுதியில் ஈடுபட்டு, மறுபடியும் எங்கோ சென்றது!

இந்த மாதிரி அலங்காரங்களில், இப்போதெல்லாம் அவளுக்குக் கொஞ்சமும் ஆர்வம் இருக்கவில்லைதான்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பானால், விஷயமே வேறு! சல்வார் செட்டுக்குச் சரியான பொருத்தமாக இருக்க வேண்டும் என்று, கைக்கு, காதுக்கு, கழுத்துக்கு என்று தேடித் தேடி அலைந்து செட்டாக வாங்குவாள்! நெற்றிப் பொட்டு, கால் கொலுசில் கூடக் கல்லும் எனாமலும் அதே வண்ணத்தில்தான், மதுவுக்கு இருக்க வேண்டும்!

அது... அப்போது!

இப்போதெல்லாம், கூந்தலைப் பின்னே தள்ளி ஒரு 'பாண்ட்' போட்டுவிட்டால், அதற்கு மேல் காது வளையத்தை மாற்றக்கூடத் தோன்றுவது இல்லை!

இந்தத் திருமணத்தின்போது கூட, மற்றவர்களுக்காகச் செய்த அலங்காரம்தான்!

இந்த அளவுக்குத் தன்னிடமே ஈடுபாடு குறைந்து போய்விட்டதே!

அன்றைக்குத் தாயார் கூட, அப்படிச் சொல்லித்தான் கோபப்பட்டாள். "அப்படி என்னதான் பெரிய வேலை பார்க்கிறாய்? உன்னைக் கூட ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளாமல், அப்படி என்ன உழைப்பு? சரி, வேலைக்குப் போகிற இடத்தில், அதிக அலங்காரம் செய்தால், நாலிலே இரண்டு பேர் தப்பாக நினைக்கக் கூடுமே என்று எளிமையாக இருக்கிறாய் என்று பார்த்தால், வீட்டிலும் இப்படியே இருந்தால் எப்படி? அழகில்லாத பெண் என்று யாருமே கிடையாது., அழகு படுத்திக்கொள்ளத் தெரியாத பெண்கள்தான் உண்டு என்று, உனக்கே தெரியும்தானே? உன்னில் பாதி அழகு இல்லாத பெண்கள் எல்லாம், என் னென்னமோ பண்ணிக்கொண்டு, ரதிகளாக ஜொலிக் கிறார்கள்! நீயானால், நானாக வாங்கி வைப்பதைக் கூட அணிவது இல்லை! வேலை, வேலை என்று உனக்காக அலங்காரத்தில் மனது போகவில்லை என்றால், நான் எடுத்து வைப்பதையாவது போட்டுக்கொண்டு நில்லு!" என்று ஆத்திரப்பட்டதோடு நில்லாமல், அப்படியே எடுத்துக் கொடுத்து அணியவும் வைத்தாள்.

அன்னை சொன்னபடி அணிமணிகள் பூண்டு, பொருத்த மாக லேசான முக ஒப்பனையோடு கண்ணாடியில் பார்த்த போது, முதலில் சந்தோஷமாகத்தான் இருந்தது!

ஆனாலும், அதையும் மீறிய ஒரு வெறுமை! மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகும் மறையவோ, குறையவோ மறுத்த வெறுமை!

எதற்காக இந்தக் கூத்தெல்லாம் என்ற அலுப்பு! அதை என்ன செய்வது?



சேச்சே! இப்படி இருக்கக்கூடாது! எவனோ ஒரு தகுதி யற்றவன் மீது நேசம் கொண்டது மடத்தனமாக இருக்கலாம்! ஆனால், அந்த ஒரு மடத்தனத்துக்காக, அவள் சன்னி யாசினி ஆக வேண்டுமா?

ஏன், இப்போது கண்ணாடியில் பார்த்தபோது, முதலில் மகிழ்ச்சியாகத்தானே இருந்தது?

பிறகுதானே, எதற்கு இது என்ற அலுப்பு வந்தது?

அவள் அழகிதான்! ரசிகையும் கூட! அழகைப் பார்த்தால், சந்தோஷமாகத்தானே இருக்கும்? பார்க்கப் பார்க்க, மகிழ்ச்சி அதிகமாகிவிடாதா, என்ன? அப்படியே, எல்லோரையும் போல, உண்மையான சிரிப்பும் உண்டாகக்கூடும்!

இந்த எண்ணத்தோடு, கண்ணாடியில் மீண்டும் பார்த் தால், ஏன் பார்த்தோம் என்று தவிப்பாகிப் போயிற்று மதுவந்திக்கு!

ஏனெனில், அவனும் ரசிகன்! அலையலையாகப் படிந்த கூந்தலில் இருந்து, நெற்றி, புருவம், கண், கன்னம், உதடு, தோள் என்று கடைசியாகப் பாதங்கள் வரை ரசனையோடு வர்ணிப்பான்!

கண்ணாடியில் பார்த்த ஒவ்வோர் உறுப்பாக, அவன் ரசித்ததும், புகழ்ந்ததும் நினைவு வந்து, மதுவந்தியை மேலும் துடிக்க வைத்தன!

அலங்காரத்தைக் கலைத்துவிடலாமா என்று மனம் நினைத்தது! ஆனால், தாயாருக்கு என்ன பதில் சொல்வது? இப்போதைக்கு அவளால் ஆனது, கண்ணாடியைப் பாரா திருப்பது!

அப்படியே, இயன்றவரையில் கண்ணாடிப் பக்கமே செல்லாமலே மதுவந்தி, சிந்தாவின் திருமணவிழா முடியும் வரை தள்ளிவிட்டாள்.

வரவேற்புக்கும், "நீங்களே செய்து விடுங்கம்மா!" என்று, கெஞ்சிக் கொஞ்சித் தாயாரையே செய்யவைத்துச் சமாளித்து முடித்தாள்.

சிந்தாமணிக்குப் பார்லரில் அலங்காரம்!

மதுவையும், "கல்யாணப் பெண்ணோடு, தோழியும் சேர்ந்து அலங்காரம் பண்ணிக்கொண்டு வந்து விடுங்கள்" என்று சொல்லத்தான் செய்தார்கள்!

"எவ்வளவோ செலவு செய்கிறோம்., கூடுதலாக ஓர் ஆயிரம், இரண்டாயிரத்தில் என்னடாம்மா, வந்துவிடப் போகிறது?" என்று, அவளுடைய தந்தை கேசவன் சொல்லத் தான் செய்தார். அண்ணன் மகளைத் தன் மகளாக வளர்த் தவர், பெற்ற மகளுக்கு கணக்குப் பார்க்கவா செய்வார்?

ஆனால், மதுவந்திதான் ஒரேயடியாக மறுத்துவிட்டாள்!

"இன்றையக் கதாநாயகி, சிந்தாதான்! அவள்தான் தனிப்படத் தெரியவேண்டும்! தங்க ரேக்கு பூசி, பளபளப் பான ஜிகினா பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் சாக்லேட் மாதிரி! நான் 'ஹோம் மெய்டு'. தட்டில் கொட்டி, வில்லை போட்டு வைத்த சாக்கலேட் போலத்தான் காணப்பட வேண்டும்! அந்த வேறுபாடு தெரிந்தால்தான், நன்றாக இருக்கும் அப்பா!"

ஆனால், அந்த 'ஹோம் மெய்டு' சாக்கலேட் தோற்றமும் பிடித்துப் போய், சிந்தாவுடைய புகுந்த வீட்டு உறவில் யாரோ பெண் கேட்டுப் பேச்செடுத்ததாகத் தெரியவரவும், மதுவந்தி ஆடிப் போனாள்!



மூன்று ஆண்டுகளாகப் பிரச்சினை இல்லாமல்தானே இருந்தது!

இப்போது சிந்தாமணிக்குத் திருமணம் ஆகிவிட்டதால், அடுத்து அவளுக்கும் செய்து விடுவார்கள் என்று எண்ணு கிறார்கள் போல!

சொல்லப்போனால், அவளுடைய அன்னை வித்யா வுக்கே, அதே எண்ணம்தான் என்பது, அவளது உற்சாகமான பேச்சில் நன்கு தெரிந்தது!

சிந்தா சந்தோஷமாக இருக்க வேண்டும்., குறையென்று யாரும் ஒரு வார்த்தை சொல்லும்படி விட்டுவிடக் கூடாது என்று அலசி ஆராய்ந்து, மாப்பிள்ளை தேர்ந்தெடுத்து, சிந்தாவுக்குத் திருமணம் செய்தார்கள்!

கிட்டத்தட்ட அதேபோல நல்ல படிப்பும், தோற்றமும், வேலையுமாக, அந்தக் குடும்பத்தில் இருந்தே பெண் கேட்கிறார்கள் என்ற மகிழ்ச்சி அவளுக்கு!

சிந்தாவுக்கும் ஆனந்தம்தான். இந்த மாதிரி விஷயம் என்று சொல்லிவிட்டு, ஏகப்பட்ட பூரிப்புடன் தேனிலவுக்குப் போய்விட்டாள்.

திரும்பி வரும்போது, நல்ல சேதி சொல்ல வேண்டும் என்று, மதுவந்தியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி விட்டுக் கிளம்பிப் போனாள்!

ஆனால், மதுவந்தி, அன்னைக்கே தெரியாமல், தந்தை யிடம் போய் நின்று, தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டாள்.

"ஒரு பெண்ணை இப்போதுதான் மணமுடித்து அனுப்பி யிருக்கிறோம். அதற்குள் அடுத்தவளையும் பிரிவது என் றால், வெறுமையும் தனிமையும் தாங்கமுடியாது! கொஞ்ச

காலம் போகட்டும், பிறகு பார்ப்போம்!'' என்று தன் விருப்பமே அது என்பது போலச் சொல்லிவிட்டார்!

''இன்னொரு கல்யாணத்துக்கு இப்போது இவ்வளவு எடுக்க முடியாதும்மா! அப்புறம், தொழிலில் பிரச்சனையாகிவிடும். அதற்காக மதுவுக்கு, அரையும் குறையுமாகச் செய்தால் நன்றாக இருக்குமா? அதுவும், அதே குடும்பத்துக்குள் கொடுக்கும்போது? ஒத்துப் பார்க்கத் தொடங்கினார்கள் என்றால், இரு பிள்ளைகளின் வாழ்வும் நரகமாகிவிடும்! அதனால்தான், வித்திம்மா, தள்ளிப் போடுகிறேன்!'' என்று மனைவியையும் சமாளித்தார்!

மகளின் விருப்பத்தை, அவளுக்கு தொல்லையின்றி நிறைவேற்றியபோதும், தன் கருத்தை அவளிடம் சொல்லாமலும், கேசவன் விட்டுவிடவில்லை!

''பாரம்மா, இந்த முறை, உன் விருப்பத்துக்கு நான் தலையாட்டியிருக்கிறேன். ஆனால், இதுவே எப்போதும் நடக்கக் கூடாது! மூன்று ஆண்டுகளுக்கு முன், நீ சின்னப் பெண்! அன்றைய உணர்ச்சிகள் மட்டுமே மிகப் பெரிதாகத் தோன்றக் கூடிய வயது! ஆனால், எப்போதும் அப்படியே இருக்கக் கூடாது! உன் எதிர்காலத்துக்கு நல்லது கெட்டது எது என்று யோசிக்கிற வயது வந்துவிட்டது. இன்னும், பழசிலேயே உழன்றுகொண்டு இராமல், அதை மறந்து, எதிர்காலம் பற்றி யோசிப்பதாக, எனக்கு உறுதி தர வேண்டும்! அந்த நம்பிக்கையில்தான் இந்த முறை, உனக்கு விட்டுக் கொடுத்திருக்கிறேன்!'' என்று சற்று அழுத்தமாகவே சொல்லியும் இருந்தார்!

உலக நியதிப்படி பார்த்தால், தந்தை சொல்லுவது சரியாகவே இருக்கலாம்! சரியேதான்! ஆனால், அவள் மனம்? அது, இன்னொருவனை எப்படி ஏற்கும்?



எப்படி, சதுவை இன்னொரு பெண்ணுடன் வரி வடிவாகக் கூட, அவளால் கற்பனை பண்ணவும் முடியவில்லையோ, அதே போல, இன்னோர் ஆண் அவளருகே நெருங்குவதையும், அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லைதான்!

அப்படியிருக்க, எதிர்காலம் பற்றி என்ன யோசிப்பது?

இப்போதைக்குப் பிரச்சனை இராது என்றாலும், மீண்டும், இந்தப் பேச்சு கிளம்பும்போது என்ன செய்வது என்று, அவள் மனம் கலங்கியது!

தேனிலவில் இருந்து திரும்பி வந்து அன்று இரவே சிந்தாமணி, கணவனோடு வெளிநாடு கிளம்புவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது! அதற்குமுன், மதிய உணவு முடித்ததும், அவளுடைய நாத்தனார் வீட்டுக்குப் போவதாகவும்!

ஊட்டியிலிருந்து வரும் வழியில், திருப்பூரில் இருக்கும் அவளுடைய அன்னை வழிப் பாட்டி வீட்டுக்குப் போய் வருவதாகத் திட்டம்!

முன்னெல்லாம், அந்தப் பாட்டி வீட்டுக்குச் சிந்தாமணி கிளம்பும்போதும் 'உம்' மென்று இருப்பாள்! அவளை மட்டும் வீட்டில் இருந்து, பிரித்து, எங்கோ அனுப்புவது போல, நாலு நாள் வருத்தப்படுவாள். அதற்காக அனுப்பாதிருக்கவும் முடியாது!

அன்பு மகளை இழந்து நிற்பவர்களிடம், பேத்தியும் வரமாட்டாள் என்று சொல்வதே பாவம் கேசவன், வித்யா தம்பதியின் கருத்து!

அதேபோலப் பாட்டி வீட்டிலிருந்து திரும்பி வந்த பிறகும், சில நாட்கள், சிந்தா உம்மணாமூஞ்சிதான்!

அம்மா, அப்பா பராமரிப்பில், மெல்லப் பழைய நிலை திரும்பும்!

இப்போதுதான் இரண்டு ஆண்டுகளாக, அந்த நிலை மாறியிருக்கிறது!

உம்மணாமூஞ்சித்தனம் மைனசாகி விட்டிருந்தது!

இப்போதும், வந்ததில் இருந்து 'சித்தி, சித்தி' என்று, வித்யாவை ஒட்டிக்கொண்டே அலைந்தாள். ''அந்தப் பையனை, ஏன் சித்தி, வேண்டாம் என்றுவிட்டீர்கள்.'' என்று குறையோடு கேட்டாள். ஆனால் அதேசமயம், மதுவந்தியை மட்டும், ஓரக் கண் பார்வை ஆராய்ந்து கொண்டே இருந்தது!

கடைசியாகப் பலகாரங்களை, அதற்கு உரிய மாதிரியில் எடுத்து வைப்பதில் வித்யா ஈடுபட்டிருந்த வேளையில், அவளுடைய கணவன் ஜெயந்தனும், வீட்டுக் கடைக்குட்டி வினுவுமாக ஷாப்பிங் சென்றிருக்கையில், கேசவனும் எங்கோ வெளியே சென்றிருந்த நேரம் பார்த்து, மதுவந்தி யின் அருகில் வந்து ''மது, என்னோடு வாயேன். உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்!'' என்று, யாருமற்ற ஓர் அறைக்கு, அவளை அழைத்துச் சென்றாள்.

அறையினுள்ளே சென்றதும், ''மது, இதை உன்னிடம் எப்படிச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை! ஆனால், சொல்லாமல் போனேன் என்றால், என் மனசாட்சி என்னைக் கொன்றுவிடும்!'' என்று பீடிகை போட்டாள்.

''என்ன விஷயம், சிந்தா? ஏன் இந்தத் தயக்கம்?'' என்று, பிரியமாகவே மதுவந்தி விசாரித்தாள்.



ஜன்னல் புறமாகத் திரும்பி நின்று, ''வந்து... வந்து, நா...ன்... நான் அன்று... வந்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்... சொன்னது எல்லாம் பொய்!'' என்றாள் சிந்தாமணி.

பார்த்த கண் பார்த்தபடி, பெரியப்பா மகளின் முதுகை வெறித்த மதுவந்தியின் இதயத் துடிப்பு சற்றுநேரம் நின்று போயிற்று!



## 2

மூன்று ஆண்டுகளுக்கு முன்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, நீ என்ன பொய் சொன்னாய் என்று, அதற்கான விவரம் ஏதும், மதுவந்தி கேட்கவில்லை!

ஏனெனில், அவளுக்குத் தெரிய, சிந்தாமணி சொன் னதும், அவள் அதைச் சொன்ன வினாடியில் இருந்து நம்ப முடியாமல் நம்பியதும், அவளது உலகத்தைத் தலைகீழாகப் புரட்டி, இன்றுவரை அவளை வாட்டி வதைத்துக்கொண் டிருப்பதும், இன்னமும் ஏற்க முடியாமல் தவிப்பதும், எல்லாமே, ஒன்றே ஒன்றுதான்!

அது பொய்யா?

காதுக்குள் 'ஹோ'வென்று, கடல் இரைச்சல் போல ஏதோ கேட்க, அதை மீறிக்கொண்டு, தொடர்ந்து சிந்தாமணியின் குரலும், அவள் காதில் விழுந்தது!

"நான் செய்தது, பெரிய தப்பு மது, ரொம்பப் பெரிய தப்பு! ஆனால், அதை நான் வயிற்றெரிச்சலிலோ, பொறாமையிலோ செய்யவில்லை என்று நீ புரிந்துகொள்ள வேண்டும், மது! அதுவும், சித்தப்பாவும், சித்தியும் எனக்குச் செய்திருக்கும் நன்மைகளை எண்ணிப் பார்க்கிறபோது... ஏன், நீயும், வினுவும்கூட, என்மேல் மட்டமான அன்பையா பொழிந்தீர்கள்? அதைப் பார்க்கிற போது, ரொம்பவும் நன்றிகெட்ட தனமாக, ரொம்பக் கேவலமாகத் தெரிகிறது, மது!

"ஆனால், நேற்றுக் காலை வரையிலும்கூட, நான் செய்தது தப்பு என்றோ, அந்தத் தப்பு மிகவும் பெரியது என்றோ நான் எண்ணியதே இல்லை! முழுமையான அன்பு இல்லாததால், நீங்கள் எல்லோருமாகக் கவனப் பிசகாகச் செய்ய இருந்த தப்பைச் செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியதாகவே எண்ணினேன்! இப்போதோ, உன் முகத்தை நிமிர்ந்து பார்த்து, நடந்ததைச் சொல்லக்கூட, எனக்கு அவமானம் தாளவில்லை!

"அன்றைக்கு... மது, அப்போதெல்லாம், என்மேல் பரிதாபப்பட்டு, இந்த வீட்டில் என்னை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்., மற்றபடி உண்மையான அன்பினால் அல்ல என்கிற எண்ணம், எனக்கு அடிக்கடி வரும்! என் திருப்பூர் பாட்டி, பாட்டி எப்போதும் சொல்வதுபோல, என் அம்மா, அப்பா வைத்துவிட்டுப் போன நகை, பணத்துக்காக என்று, அப்போதும் நான் நினைத்தது இல்லை! ஆனால், அன்பு என்பது அடியோடு வேறு அல்லவா?

"அப்போது, விடுமுறையின்போது நான் பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தேன்! நான் அங்கே இருந்தபோதுதான்,



உன்... உன் திருமண ஏற்பாடு பற்றிய செய்தி வந்தது! அதற்கு முன்பே, சைதன்யனை, நீ வீட்டுக்குக் கூட்டி வந்திருக்கிறாய்! நாலைந்து முறை வந்தபோதும் கூட, நான், அதைப் பெரிதாக நினைத்ததில்லை! உன் புராஜெக்ட் விஷயமாக அறிமுகமான மனிதர், பக்கத்தில் வீடு அல்லது அலுவலகம் இருப்பதால், பார்க்கிற நேரம் வருகிறார் என்றுதான் எண்ணியிருந்தேன்! அவரை நீ ஆவலாகப் பார்க்கும்போது கூட, எனக்குச் சிரிப்புதான் வரும்!

என்னைவிடச் சின்னப் பெண்! என்னமாய்ப் பார்க்கிறாள் என்று வேடிக்கையாக எண்ணுவேன்!

"அந்த விடுமுறையில், நான் பாட்டி வீட்டுக்குப் போயிருந்தபோதுதானே, உன் திருமண ஏற்பாடு பற்றிச் சித்தப்பா அங்கே, எனக்கு எழுதினார்! நீயும் மிஸ்டர் சைதன்யனும் சேர்ந்து வந்தது, பழகியது எல்லாம், அப்போது புரிந்தது! பிடித்தது, பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது! ஆனால் சிறு உறுத்தல்... ஏதோ எனக்கு மறைத்துச் செய்தது போல், என்னை ஏமாற்றிவிட்டது போன்ற உணர்வு! அது நிஜம்., என்னை அங்கே அனுப்பிவிட்டுத் திருமணப் பேச்சு வார்த்தைகளை உறுதி செய்தது, ஏமாற்று வேலையே தான் என்று, பாட்டி அடித்துச் சொன்னார்கள்.

"பெரியவள் ஒருத்தி இருக்கும்போது, அடுத்தவளுக்குத் திருமணம் செய்வார்களா? முறைப்படி, பெரியவளுக்குத் தானே முதலில் மணமுடிப்பார்கள்? மாறாக, மூத்தவள் இருக்க, அடுத்தவளுக்குத் திருமணம் செய்தால், பெரியவளுக்கு என்ன குறைவோ, என்ன தவறோ என்று எல்லோரும் தப்பாக எண்ணமாட்டார்களா? மூத்தவளுக்கு அப்புறம் திருமணம் எப்படி நடக்கும் என்று... அப்போதும்,

உனக்குத் திருமணம் செய்கிற அவசரத்தில், என்னைப் பற்றிய நினைவே, சித்தி, சித்தப்பாவுக்கு மறந்துவிட்டது என்று நினைத்தேனே தவிர, பாட்டி சொன்னது போல, வேண்டும் என்று என்னை அவமானப்படுத்தி, எனக்குக் கல்யாணமே நடக்காமல் கெடுக்கத் திட்டமிட்டதாக நான் எண்ணவே இல்லை, மது!

''ஆனால், உனக்கு முதலில் மணமானால், அப்புறமாக, எனக்கு ஆகவே, ஆகாது என்று மட்டும் மனதில் தோன்றி விட்டது!

''அதற்குச் சரியாக, என் பெரிய, சின்ன மாமாக்களுடைய மகன்களின் திருமண உதாரணமும் இருந்தது! இருவருடைய பெண்களுக்கும் அப்படித்தான், வரிசையாக, வயதுக் கணக்குப்படியேதான் நடக்கும் என்று, பாட்டி அடித்துச் சொன்னார்கள்...

''உன் திருமணம் முதலில் நடந்துவிட்டால், அப்புறம், நாற்பது வயதானாலும், நான் தனி மரம்தான்., அதனால், உன் கல்யாணம் நடக்கவிடாமல், எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி அனுப்பினார்கள்!

''இங்கே வந்து பார்த்தால், கிட்டத்தட்ட எல்லாம் முடிவாகி, நிச்சயவிழாவின் நாள் நெருங்கியிருந்தது! என்ன சொல்லி விழாவை நிறுத்துவது என்று ஒன்றும் புரியாமல், அழுகைதான் வந்தது!

''நான் அழுதால்தான், உங்களுக்கெல்லாம் தாங்காதே! என்ன என்ன என்று கேட்கக் கேட்க, இன்னும் அழத்தான் முடிந்தது! அப்போதுதான், சித்தி ஒன்று சொன்னார்கள்! எதையோ சொல்லப் பயந்து, அழுகிறாளோ என்றார்கள்!



சட்டென்று, வழி தெரிந்தாற்போல, சைதன்யன் நடத்தை மோசம்., என்னிடமே தப்பாக நடந்தார்... என்று சொல்லி விட்டேன்!

''நான் விரும்பியது போல, உன் திருமணம் நின்று போயிற்று! அப்பாடி என்று அப்போது இருந்த மனநிலையில், அதைப்பற்றி, நான் பெரிதாக நினைக்கவும் இல்லை! இந்தச் சைதன்யன் இல்லாவிட்டால், இன்னொரு நல்ல மாப்பிள்ளை, உரிய முறைப்படி, எனக்கு மணமானபின் தானாக நடக்கப் போகிறது என்று சாதாரணமாகத்தான் நினைத்தேன்!

''ஆனால், நேற்று, திருப்பூரில், எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி, மது! சின்னமாமா மகள், பெரியமாமா பெண்ணை விட, இரண்டு ஆண்டுகள் சின்னவளுக்கு, நேற்று திருமணம் முடிவாகிப் பூ வைத்துவிட்டுப் போனார்கள்! பாட்டியிடம் கேட்டால்,பையன் வீடு பணக்கார இடம், எப்படி விடுவது என்கிறார்கள்! முன்பு என்னவெல்லாம் சொன்னார்கள்? அதையும் கேட்டேன். உன் சித்தப்பா பொண்ணுக்கு, அந்தப் பையன் கொடுப்பினை இல்லை., கலைந்து போயிற்று., முடிச்சுப் போட்ட இடம் வந்தால், தானாக நடக்கும் என்று, சும்மா எதையோ சொல்லி மழுப்புகிறார்கள்!

''சரி, எங்கள் சின்ன மாமனார் பையன் நல்ல இடம் தானே, அதுவேனும் நடக்கும் என்று வந்தால், அதுவும் இல்லை என்றானது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது, மது! அத்தோடு, சித்தப்பா வெளியே என்ன காரணம் சொன்னாலும், அடிப்படை மறுப்பு உன்னிடம் இருந்து வந்ததை, என்னிடம் சொல்லிவிட்டார்! அப்புறம், ரொம்ப உறுத்தியது! ரொம்ப காலமாக... சுமாராக மூன்று ஆண்டுகளாக, நீ

பழைய மாதிரி சிரிக்காதது போலக் கூடத் தோன்றுகிறது! மது..." என்று ஒருவாறு திரும்பினாள் சிந்தாமணி.

சித்தப்பா மகளின் கைகளைப் பற்றி, "மூன்று ஆண்டு களுக்கு முன்பே, உன் திருமணம் நடந்திருக்க வேண்டும்! தட்டிக் கெடுத்துவிட்டேன்! அதற்காக என்னை மன்னிப் பாயா, மது? நிஜமாக வருத்தப்பட்டுக் கேட்கிறேன், மது, ப்ளீஸ்மா! அத்தோடு... யோசித்துப் பார், இந்த மூன்று ஆண்டுகளாக, அந்தச் சைதன்யன், உன்னை வந்து எட்டிக் கூடப் பார்க்கவில்லையே! அவரையே நினைத்து வாழ்க்கையை வீணடித்துக் கொள்ளாதேடா!

"முன்புகூட, எனக்குச் சரியாகத் தெரியவில்லை! ஆனால், இப்போது மணமான பிறகு, நமக்காகவே ஒருவர் அன்பே உருவாக இருப்பது எவ்வளவு சுகமாக இருக்கிறது என்று தெரிந்துவிட்டதா? உனக்கும் சீக்கிரமே மணமாக வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது! நடக்க இருந்ததைத் தடுத்தோமே என்று, தவிப்பாக இருக்கிறது! அதனால் இன்னொரு தரம் இப்படி மறுக்காமல், சித்தப்பா தேர்ந் தெடுக்கிற மாப்பிள்ளையை... சித்தப்பாவின் தேர்வு சிறந்ததாகத்தான் இருக்கும், மது! அதனால், அவர் சொல்கிற மனிதரை, உடனே மணந்துகொள்! என்ன, சரிதானே? ப்ளீஸ், ப்ளீஸ், ப்ளீஸ் மது! எனக்காக... என்னை மன்னித்து..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாயிலில் கார் வந்து நின்றது!

முன்புற ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தவளின் முகம் பூவாய் மலர்ந்தது!

"மது ஷாப்பிங் முடித்துக்கொண்டு, அவர் வந்துவிட் டார். நான் அவரிடம் போகிறேன். அவரது சாமான்களையும் பெட்டியில் அடுக்க வேண்டும் அல்லவா? ஆனால், நான் சொன்னபடி, நீ நடக்க வேண்டும்! என்ன?" என்று பேசிய படியே, கணவனிடம் விரைந்தாள் அவள்!



இருவருமாகப் பேசிச் சிரித்தபடி, சிந்தாமணியின் அறைக்குச் செல்வது தெரிந்தது!

ஆனால்... மதுவந்திக்குத்தான் சரியாக மூச்சுக்கூட விட முடியவில்லை!

அன்று அவன், சைதன்யன் எப்படிப் பார்த்தான்! திருமண ஏற்பாடுகளை நிறுத்தப் போவதாகக் கேசவன் அவனிடம் சொன்னபோது, அவன், அவர் முகத்தைப் பார்க்கவில்லை!

அவளையேதான்.. அவளையே, என்ன சொல்லுகிறாய் என்பது போலப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"என் இரண்டு பெண்களில், ஒருத்தியிடம் தவறாக நடந்துவிட்டு, இன்னொருத்தியை மணக்க முடியாது, சைதன்யன்! அப்படிப்பட்ட ஒருவனுக்குக் கொடுக்க என் வீட்டில் பெண்கள் இல்லை! நீங்கள் போகலாம். இனி இந்த வீட்டுக்குள் வராதிருப்பது, உங்களுக்கு நல்லது!" என்று முகத்தில் அடித்ததுபோல, அவளுடைய தந்தை சொல்லச் சொல்ல, அவர் முகத்தைப் பார்க்கவில்லையே! அவளையே தான்...

கண்ணால் அவளை மயக்கி, அவனுக்கு ஆதரவாகப் பேச வைக்க முயற்சிக்கிறான் என்றல்லவா, அப்போது எண்ணினாள்!

ஆனால், அந்தப் பார்வையின் பொருள் இப்போதல்லவா, தெளிவாக விளங்குகிறது!

நீயுமா, இதை நம்புகிறாய் என்று கேட்டிருக்கிறான்!

ஐயோ! இன்றுவரை, அவனை அப்படிப்பட்ட நிலையில் கற்பனைகூடப் பண்ண முடியாமல் தவிக்கிற புத்திசாலிக்கு, அன்று அந்த உண்மையை அறிந்துகொள்ளக் கொஞ்சமும் தெரிந்திருக்கவில்லையே!

"சித்தி, உங்கள் எல்லோரையும் விமான நிலையத்தில் சந்திக்கிறோம்! எல்லோரும் கட்டாயமாய் வருவீர்கள்தானே, சித்தி? இப்போது வரட்டுமா?" என்று ஒருவாறு கிளம்பி, காரில் ஏறினாள் சிந்தாமணி!

நல்லவேளையாக, விடை பெறுவதற்கு மதுவந்தியைத் தேடவில்லை! அதிர்ச்சி தீரட்டும் என்று எண்ணினாளோ, என்னவோ?

தீருமா? என்றேனும்?

செயற்கையறியாத தவிப்புடன் நிற்கையில், மெல்ல ஒரு கை, அவளது தலையை ஆறுதலாய் வருடியது!

கலங்கிய விழிகளால் திரும்பிப் பார்த்தால், தந்தை!

திகைத்த பார்வைக்குப் பதிலாக, "குளியல் அறையில் இருந்தேன்." என்றார் அவர் அமைதியாக. 'அட்டாச்டு பாத்ரூம்' எல்லாம் கேட்டிருக்கும்!

"அப்பா!" என்று, அவர் தோளில் சாய்ந்து, சத்தமின்றி விசித்தாள் பெண்!

மெல்ல வருடிக் கொடுத்தது தவிரக் கேசவன் பேசவில்லை!

ஓரிரு நிமிஷங்களின் பின், மதுவந்தி நிமிர்ந்தாள்.

கண்களைத் துடைத்துக்கொண்டு, "அப்பா, நான் வெளியே போகவேண்டும்! கொஞ்ச நேரம் வெளியே சுற்றிவிட்டு வருகிறேன். இ... இங்கே எனக்கு மூச்சு முட்டுகிறது!" என்றாள்.



"செய்மா. ஆனால், சிந்தா மீது கோபப்பட்டுக்கொண்டே ஓட்டாதே! மன முதிர்ச்சியில், அவள் உன்னைவிட, ரொம்பச் சின்னவள்! அதனால், போகட்டும் என்று விட்டுவிட்டு, மனதை அமைதியாக வைத்துக்கொள்ள முயற்சி செய்!" என்றார் கேசவன்!

வெறுமனே தலையை ஆட்டிவிட்டு, சாவியை எடுத்துப் போய், அவளது ஸ்கூட்டியைக் கிளப்பினாள், மதுவந்தி!

பெற்றவர் சொன்னது போலவே, பெரியப்பா மகள் மீது மதுவந்திக்குப் பெரிதாகக் கோபம் வரவில்லை! அவளது அசட்டுத்தனங்களைக் குற்றங்களாகக் கருதி,அந்த வீட்டில் யாருக்கும் பழக்கமில்லை! அவளது பேரிழப்பின் பிரதிபலிப்பு என்று எண்ணிப் பரிதாபம்தான், எப்போதும்!

இப்போதும், ஒன்றுவிட்ட சகோதரியைக் குறைப்பட, மதுவந்திக்குத் தோன்றவில்லை! வழக்கமான அசட்டுத் தனம். அவ்வளவே!

ஆனால், இந்த அசட்டுத்தனம், அவளை எப்படிப் பாதித்துவிட்டது! அவளது சொர்க்கம் அல்லவா, கைநழுவிப் போய்விட்டது!

தானாக மடியில் வந்து விழுந்த சொர்க்கத்தை உதறியது மட்டுமின்றி, அவள் அனுபவித்த நரக வேதனை!

இந்த மூன்று ஆண்டுகளில், அவன் வாழ்வில் என்னென்ன மாற்றங்கள் நேர்ந்தனவோ? மணமாகிக் குழந்தை கூட... நோ!

தன்னையறியாமல் பிரேக் போட்டு நிறுத்திய பிறகே, சுற்றுப்புறம், மதுவந்தியின் கண்ணில் பட்டு, அவளது கருத்தையும் எட்டியது!

இது, சைதன்யனின் வீடு இருக்கும் பகுதி!

அவள் நின்ற இடத்திலிருந்து வலப்புறமாக நேர்கோண மாகத் திரும்பிச் சாலையைக் கடந்தால், அவன் வீடு!

ஒரு காலைத் தரையில் ஊன்றி நின்று, தலையைத் திருப்பி, அவன் வீட்டைப் பார்த்தாள் அவள்.

ஒரு காலத்தில் அவளதாகக் கருதிய வீடு, இப்போது அடையாளமே தெரியாத அளவு மாறிப் போயிருந்தது!

அப்போதும், தனி வீடுதான். இடமும் பெரியதுதான். ஆனால், அதன் ஒரு புறமாக, ஒரே தளத்தில், சாதாரணமான இரட்டைப் படுக்கையறைகள் கொண்ட வீடாக, ஆனால் அதிலும் அழகுற அமைக்கப்பட்டிருந்தது! அவனது சின்ன மாருதி கார், வீட்டின் முன்னே நிற்கும்!

இப்போது, வீடு எடுத்துக் கட்டப்பட்டு இரண்டு தளங் களுடன் கம்பீரமாக உயர்ந்து நின்றது! பக்கவாட்டிலும் விரிவாக்கப்பட்டிருந்தது! உயரமான சுற்று மதில், வாஸ்து முறைப்படி அமைத்தது போன்று நடுவில் உயர்ந்த அகன்ற இரும்பு கேட், கேட் பில்லர்கள்., அவற்றின் மீது அலங்காரமான விளக்குகள்...

மதுவந்தி திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கனமான இரும்புக் கதவுகள் விரியத் திறந்தன!

உள்ளே... உள்ளே அவனுடைய தந்தையுடன் பேசியபடி, சைதன்யன்... அவனேதான், வந்து கொண்டிருந்தான்!

அதே சமயம், நீளக் கார் ஒன்று வந்து நிற்க, காரின் கதவைத் தந்தைக்காகத் திறந்துவிட்ட காரைத் தாண்டி, சாலையைத் தாண்டி, மதுவந்தியிடம் வந்து நிலைத்தது!



சில கணங்கள்... அது சில நிமிஷங்களாகவும் இருக் கலாம்.. மதுவந்திக்கு, உலகம் இயங்காமல் நின்று போயிற்று!

ஆனால், அவனுடைய தந்தை ஞானசேகரனின் கார் வெளியே வர, அதன் பின்னோடு சைதன்யனும் வெளியே வரவும், மதுவந்தி திகைத்தாள்!

என்ன தைரியம் இருந்தால் இங்கே வருவாய் என்று அவன் கேட்டால், என்ன பதில் சொல்வது?

ஒன்றும் புரியாத மலைப்புடன், வேகமாக ஸ்கூட்டியைக் கிளப்பிக்கொண்டு, வந்த வழியே ஓடிவிட அவசரமாகத் திரும்பினாள், பயங்கரமான பிரேக் சத்தத்துடன் ஏதோ அவளது வழியில் உரசி நிற்க, 'பாலன்ஸ்' பண்ண முடி யாமல், வாகனத்தோடு கீழே விழுந்தாள் மதுவந்தி!




அந்த வினாடியில், சைதன்யனை நேருக்கு நேர் எதிர்கொள்ள, அவளுக்குத் தைரியம் இல்லாததால், பயங் கொள்ளியாக ஓடுவது ஒன்றே நினைவாகத் திரும்பிய வளுக்கு மற்ற வாகனங்களும், அந்தச் சாலையில் செல்வது பற்றிய எண்ணமே இருக்கவில்லை!

நல்ல வேளையாகப் பின்னிருந்து வந்த காரில் பிரேக் நன்றாக இருந்ததோடு, அந்தக் காரோட்டியும் விழிப்புணர் வோடு உடனடியாகச் செயல்பட்டதால், ஒரு பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது!

என்ன மடத்தனமாக ஓட்டினாள் என்கிற ஆத்திரத்துடன், கீழே விழுந்துவிட்டவளுக்கு ஏதேனும் அடிபட்டிருக்குமோ என்ற கவலையுமாக இறங்கி வந்த காரோட்டிக்கு, அவள் அவசரமாக எழுந்து, அவளது வண்டியைத் தூக்கி நிறுத்த முயலவும், ஆத்திரமே மேலிட்டது!

"சும்மா, வண்டியை ஓட்டத் தெரிந்தால், எடுத்துக் கொண்டு வந்துவிடுவதா? சாலை விதிகளையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற அறிவில்லை? என்ன, இந்த ரோடு முழுவதையும் பட்டா போட்டு வாங்கிவிட்டதாக எண்ணமா? கொஞ்சம் பார்க்க நன்றாக இருந்துவிட்டால் போதும்! என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற திமிர்...!"

பின்னே வாகனமேதும் வருகிறதா என்று பாராமல், திடுமென வண்டியை திருப்பியதும், அதுவும் வந்த வழியே செல்ல முழுதாகத் திருப்பிச் செல்ல முயன்றது, அவளது பிழைதான்!

ஆனால், அவள் ஏதற்காக அப்படிச் செய்தாள் என்று, பாவம், இந்த மனிதனுக்கு எப்படித் தெரியும்? அதை விளக்கினாலும், யாருக்கும் புரியாது என்பதோடு, விளக்கிக் கொண்டிருக்க, அவளுக்கு அவகாசமும் இல்லையே! ஓடவேண்டுமே!

"சாரி... ரொம்ப சாரி" என்றவாறே, அவசரமாக ஸ்கூட்டியை நிறுத்திக் கிளப்ப முயன்றாள், கைகளின் உதறலில், ஸ்டார்ட்டரை அழுத்தக் கூட இயலாமல் கை வழுக்கியது!

ஆனால், காரோட்டிக்குச் சினம் அதிகரித்தது!



"ஆமாம், இது ஒரு வார்த்தை! தளுக்காக சாரி என்று, ஒரே வார்த்தையில் ஓட்டம் பிடித்து விடுவீர்களே! இப்போது, உனக்கு கொஞ்சம் பலமாக அடிபட்டிருந்தால், என்னை அல்லவா பிடிப்பார்கள்? நீ, பொம்பளை! அம்மா, தாயே என்று காலடியில் விழுந்து விடுவார்கள்! கடைசியில் நான் அல்லவா, தொங்க நேரும்...!"

ஸ்கூட்டியைக் கிளப்பவும் முடியாமல், கார்க்காரனுக்கு பதில் சொல்லவும் முடியாமல் மதுவந்தி தவித்தபோது, "போதும்! மிஸ்டர்! அதிகம் பேச வேண்டாம்!" என்று சைதன்யனின் குரல் அதட்ட, அவனது கை, ஸ்கூட்டியை நேராக நிறுத்தியது!

அவனை ஒரு தரம் பார்த்த கார்க்காரன், "ஆமாமாம், பெண்பிள்ளை தப்பு செய்தால்தான், வக்காலத்து வாங்க வரிந்து கட்டிக்கொண்டு வந்துவிடுவீர்களே! ஆனால், இந்தப் பெண், நாளையும் பின்னேயும் உயிரோடு இருக்க வேண்டுமானால், அந்த வண்டியைப் பிடுங்கி வைத்துக் கொண்டு, நடந்து போகச் சொல்லுங்கள்!" என்று வெறுப்புடன் கூறியவாறு, காரில் ஏறி அமர்ந்து, அவர்களைச் சுற்றிக்கொண்டு, காரை ஓட்டிச் சென்றுவிட்டான்.

திகைத்து நின்றாள் மதுவந்தி! இப்போதும் ஓடிவிடலாம் என்று பார்த்தால், அதற்கு வழியின்றி, வண்டி அவன் கையில் இருக்கிறதே!

"ரொம்பவும் அதிர்ந்து போயிருக்கிறாய்! வீட்டுக்கு வந்து, ஒரு கப் டீ குடி. அதிர்ச்சி குறையும். அப்புறம் போகலாம்!" என்றபடி, அவனது வீட்டுப் புறமாக நிமிர்ந்து பார்த்தான்.

அவனது கண்ணசைவில், சுற்றுமதில் கேட்டருகில் நின்ற காவலாள் ஓடி வந்தான்.

அவனிடம் ஸ்கூட்டியை உருட்டி வருமாறு சொல்லி விட்டு, "வா!" என்று அவளது கரத்தைப் பற்றி வழி நடத்திச் செல்லலானான், சைதன்யன்.

அவளுக்கு நிறைய அதிர்ச்சிதான்! பெரிய அதிர்ச்சி, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, திடுமென அவனைப் பார்த்ததில்தான்!

அவனும் அப்படித்தானே பார்க்கிறான்? அவனுக்கு மட்டும் அதிர்ச்சியே இல்லையா? சாதாரணமாகப் பேசு கிறானே என்று எண்ணும்போதே, அவள் மனம் சோர்ந்தது!

எந்தப் பாதிப்பும் ஏற்படுத்துகிற அளவுக்கு, அவள் இப்போது, அவனுக்கு முக்கியம் இல்லை! அதுதானே?

கேட்டைத் தாண்டி, உள்ளே காலடி எடுத்து வைக்கும் போது, டீ யார் தருவார்? அவனுடைய மனைவியா என்று, மறுபடியும் மதுவந்தி மனம் கலங்கினாள்!

இருக்காது., இருக்காது! மனைவி இருந்தால், அவளை இப்படிக் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல மாட்டான் என்று மதுவந்தி எண்ணுகையிலேயே, அவளது கையை விட்டுவிட்டு, "சோபாவில் உட்கார்!" என்று, அழகிய வைன் நிறத்து உறைகளுடன் கிடந்த சோபாக்களைக் காட்டிவிட்டு, உள்ளே சென்றான் அவன்!

அரையடி புதையும் சோபாக்கள்! சுற்றிலும் பணக்காரக் களை!

ஆயினும், ஒரு பெண்ணின் பிரசன்னத்தை அங்கே எதிர்பார்க்க அவளால் முடியவில்லை!

உச்சந்தலையில் அறைந்தால் போலக் கண்முன்னே கொண்டு காட்டினால்தான், இந்தப் பைத்தியக்கார மனது ஏற்குமா?



சற்று நேரத்தில், அவனோடு, டீயும் வந்தது!

கெட்டிலும், ஜக்குமாக, மேல் நாட்டு பாணியில், வேலை யாள் வைத்துவிட்டுப் போக, ஒரு கப்பில் டீயை ஊற்றி, அதிகமாக சர்க்கரை கலந்து, அவளிடம் கொடுத்தான் சைதன்யன்! "இனிப்பான டீ, அதிர்ச்சிக்கு நல்லது!"

குடிக்கக் குடிக்க, அவளது முகம் தெளிவடைவதைக் கவனித்துவிட்டு, அவள் டீயைக் குடித்து முடித்ததும், "சொல்லு, எதற்காக வந்தாய்?" என்று விசாரித்தான் அவன்!

என்னவென்று சொல்வது? அவனிடம் உண்மையைச் சொல்லித்தான் அவளுக்குப் பழக்கம்! அதாவது, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, அவனைக் கடைசியாகப் பார்த்தது வரை!

அவன் அப்படியில்லை என்று எண்ணினால், அவனும் அப்படித்தான் இருந்திருக்கிறான்! அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை!

அவன் பதிலுக்குக் காத்திருப்பது புரியவும், "நான் நான், இங்கே வர வேண்டும் என்று வரவில்லை!" என்று தொடங்கினாள்.

அவனது புருவங்கள் முன்னுச்சியை நோக்கி உயர்ந்தன. நம்பவில்லையாம்!

அதையே பேச்சிலும் காட்டி, "சரியாக வீட்டுக்கு நேர் எதிரில் ஸ்கூட்டியை நிறுத்தியிருந்தாய்! ஓ வீட்டுக்குள் வருவதாகத் திட்டம் இல்லையாக்கும்! சும்மா வேவு பார்த்துவிட்டு, அப்படியே திரும்பிப் போய்விடலாம் என்று வந்தாய் போல." என்றான் சைதன்யன் சாதாரணமான குரலில்!

சூரியன் உதிக்கிறது.. மறைகிறது என்பது போல, ரொம்பவும் சாதாரணமான, வெகு இயல்பான குரலில்!

அதைப் போலவே, மதுவந்தி அவனை வேவு பார்ப்பதும், அவன் அறியாமலே திரும்பிப் போய்விடுவதும், அவளது தினசரிப் பழக்க வழக்கம் என்பது போல!

ஏன் இப்படி சொல்கிறான்? இவனை எதற்காக வேவு பார்க்க வேண்டும்?

சற்றுத் திகைத்துவிட்டு, "அ... அப்படியில்லை! ஓ... ஓர் அதிர்ச்சியில்..." என்று மீண்டும் தொடங்கினாள் அவள்.

"அதிர்ச்சிதான். அதைத்தான் பார்த்தேனே! நான் கண்டுவிட்டேன் என்றதும், அதிர்ந்து ஓடப்போய், அடுத்த அதிர்ச்சி வேறு!"

"ஐயோ, அப்படியில்லை! எனக்கு அதிர்ச்சி, அதற்கு முன்பாக! வீட்டில்..." என்று மறுபடியும் தொடங்கியவள், அவன் முன் போலவே ஏதேனும் சொல்லி விடுவானோ என்றஞ்சி வேகமாகப் பேசினாள். "என் என் பெரியப்பா மகள் தெரியும் அல்லவா? சிந்தா! சிந்தாமணி. அவளுக்குத் திருமணம் ஆகி, இன்று வெளிநாட்டுக்குக் கணவனோடு கிளம்புகிறாள். கிளம்புமுன் இ.. இப்போதுதான், உண்மை எல்லாம் சொன்னாள்! அன்று சொன்னது எல்லாமே பொய் என்று, பொய் என்று, அதன்... அப்படிச் சொன்னதன் காரணத்தையும் சொன்னாள். அவள் பாட்டி வீட்டில், ஏதோ மடத்தனமாக.. மூத்த பெண் இருக்க, இளையவளுக்குத் திருமணம் செய்வது தப்பு.. அவமானம்... என்று இந்த ரீதியில் சொ... சொல்லியிருக்கிறார்கள்! இவள் அசட்டுத் தனமாக அதை நம்பி, நம் திருமணத்தைத் தடுப்பதற்கு



வேறு வழி தெரியாமல் பொய் சொன்னதாக... எல்லாமே சொன்னாள்..."

"அதனால் என்ன? ஓ.. அதுதான் அதிர்ச்சி என்றாயா?"

அவனது குரல் அவளுக்குப் புரியவில்லை!

கிட்டத்தட்ட உன் பிறந்தவள் போலக் கூட வளரும் பெண் என்ன காரணத்தினால் பெரிய பிழை புரிந்து விட்டாள் என்று விளக்கினால், சம்பந்தமே இல்லாததுபோல இருக்கிறானே!

ஆனால், சிந்தா குற்றம் சாட்டியது, அவனை!

"சாரி, சாரி, சாரி, சது. மன்னித்து விடுங்கள்!" என்று தவிப்புடன் வேண்டினாள்.

"மன்னித்துவிட்டு?"

இந்தக் கேள்வியின் பொருள் புரியவும், மதுவந்தி மேலும் திகைத்தாள்!

மன்னித்துவிட்டு, ஒன்றுமே நடக்காதது போலப் பழைய இடத்திலிருந்து தொடரச் சொல்கிறாயா என்று கேட்கிறான்! அது நடக்கிற காரியம் அல்ல என்று சொல்லாமல் சொல்கிற விதம்!

சைதன்யன் கோபப்பட்டு, மதுவந்தி பார்த்தது இல்லை! எப்போதும் சிரிப்பும் விளையாட்டும்தான்!

இப்போதும், அவன் முகத்தை வைத்து, அவனுக்குக் கோபம் என்று யாரும் நினைப்பதற்கில்லை!

ஆனால், கேள்வி? அது வேறு சொன்னது!

"உங்கள் கோபம் புரிகிறது, சது!"

"இல்லை. உனக்குப் புரியவில்லை! நாம் நேசித்தோம்! மணம் புரிந்துகொள்ளவும் முடிவு செய்தோம்! திருமணம் மதுவந்தி! திருமணம்! பத்தொன்பது வயது நீயும், இருபத்து மூன்று வயது நானும், தொடர்ந்து, ஐம்பது அறுபது ஆண்டுகளை, ஒருவருக்கு ஒருவர்தான் என்று சேர்ந்து கழிக்க முடிவு செய்தோம்! அந்த நேசம் உண்மையானதாக இருந்தால், அந்தப் பெண் சொன்ன பொய்யை... அவள் என்ன, உன்னைப் பெற்றவர்களே என்னைப் பற்றி ஏதேனும் தப்புத் தவறாகச் சொல்லியிருந்தாலும், அதை நீ எப்படி நம்பியிருப்பாய்? அவள் சொன்னது பொய் என்று, மற்றவர்களுக்கு இல்லாவிட்டாலும், உனக்குப் புரிந்திருக்க வேண்டாமா?"

ஓ! அவனது கோபம், அவள் மீது! சிந்தாவை நம்பிய தற்காக! ஏன் நம்பினாள் என்று விளக்க முயன்றாள் மதுவந்தி.

"சிந்தா என் கூடப் பிறந்தவள் மாதிரி, சைதன்யன்! பெரியப்பா, பெரியம்மா விபத்தில் இறந்த பிறகு, எங்கள் குடும்பத்தின் முக்கியம் அங்கம் ஆகிப்போனவள்! குடும்பத் தின் மூத்த பெண்ணாக..."

ஆனால், "கூடவே பிறந்திருந்தாலுமே, எனக்கு எதிரான ஒரு பேச்சை, நீ எப்படி நம்பலாம்? அவ்வளவு நம்பிக்கை இல்லைதான்?" என்று கேட்டான் அவன்!

அவள் பதிலறியாமல் திகைத்து விழிக்கையில், அவன் தொடர்ந்தான். "சற்றே உன் மனது அலைபாய்ந்திருந்தால் கூட, மிகக் குறைந்த பட்சமாக, என்னிடம் நீ கேட்டிருக்க வேண்டாமா? என்ன காரணமாக இவள் உன்னைத் தவறாக எண்ண நேர்ந்தது என்பதாக ஒரு கேள்வி?



"இல்லையே! உனக்குத் தோன்றக்கூட இல்லையே!"

"இவள் உளறுகிறாள் என்று என் பெற்றோருக்குப் புரிய வையுங்கள் என்று கேட்பாய் என்று எதிர்பார்த்தேன்! கேட்கவில்லை!

"தற்செயலாக கைப்பட்டு, உடம்பு உரசி, சிந்தாமணி தவறாக எண்ண நேர்ந்ததா என்று விசாரிப்பாய் என்று எண்ணினேன். அதுவும் நடக்கவில்லை!

"அவள் என்னவோ, அரிச்சந்திரனின் அடுத்த பிறவி., காந்திஜியுடைய நேர் வாரிசு என்பது போல, முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றாயே!"

"அப்போது, நான் அடைந்த அதிர்ச்சி எப்படி இருந் திருக்கும் என்று யோசித்துப் பார்!"

யோசிப்பதா? மூளை வேலை செய்தால் அல்லவா, யோசிப்பது சாத்தியம்? அதுதான், ஐயோ, ஐயோ என்று தவிப்பிலேயே மூழ்கி விட்டிருந்ததே!

அவள் பேச்சிழந்து பார்த்துக் கொண்டிருக்கையில், அவனே மீண்டும் தொடர்ந்தான். "ஆனால், சிந்தாமணி அப்படி ஒரு கதை கிளப்பி விட்டதும் நல்லதுதான். அதனால் தானே, உன்னைப் பற்றி முக்கியமான உண்மை எனக்குப் புரிந்தது!"

"எ... என்ன உண்மை?" என்று கேட்கும்போது, அவளது குரல் நடுங்கியது! இவன் என்னமோ, அவள் வருந்தச் சொல்லப் போகிறான்!

"உன் அன்பு பொய் என்கிற உண்மை!"

"ஐயோ, அப்படியில்லை, சது!"

''அப்படித்தான், மதுவந்தி! அதுதான் உண்மை! நீ என்னை உண்மையாக நேசித்ததே கிடையாது! அப் போதைக்கு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுக்கு, நான் மேல் என்று எண்ணி, என்னை மணக்கத் தீர்மானித் திருக்கிறாய்! ஒரு சின்னப் பிரச்சனை எழவும், அந்த அன்பு பூச்சு அழிந்து போய்விட்டது! அவ்வளவுதான்!''

''கடவுளே, மெய்யாகவே அப்படியில்லை, சது!'' என்று வலியுறுத்திச் சொல்ல முயன்றாள் அவள். ஆனால், அவன் காதில் வாங்கினால் அல்லவா?

''எவ்வளவு இலகுவாக 'சது' என்கிறாய்!'' என்று அவன் வியந்த பிறகுதான், அவன் தன் செல்லச் சுருக்கத்தைப் பயன்படுத்தவே இல்லை என்பது அவளுக்கு உறைத்தது!

''மதுவந்தி'' என்று, இவ்வளவு நீளமாக, உன்னை யார் அழைப்பது என்று சலிக்கிறவன்! ''என்னால் முடியாதுப்பா! எனக்கு நீ வேறுதான்'' என்று அழகாக வேறு பெயர் வைத்தவன்! கடவுளே, எத்தனை இழப்புகள்!

அவள் திகைத்து நோக்குகையிலேயே, ''இப்போது நீ வந்தது எதற்கு என்று கூட, எனக்குத் தெரியும்!'' என்றான் சைதன்யன்!

மறுபடியும், ஏதோ தப்பாகச் சொல்லப் போகிறான்! முதலிலேயே, வேவு பார்க்க வந்ததாகச் சொன்னானே! விரிந்த விழிகளால் பார்ப்பது தவிர, என்ன என்று கேட்கக்கூட, அவளுக்கு வாயெழவில்லை!

''வீட்டைப் பார்த்தாயல்லவா? வெளியேயும் விசாரித் திருப்பாய்! இப்போது நான் பெரிய ஆள் ஆகிவிட்டேன் அல்லவா? பழைய உறவைத் தொடர்வது லாபகரமாகத்



தோன்றியிருக்கும்...! என்ன எழுகிறாய்? எங்கே கிளம்பி விட்டாய்?

''வீட்டுக்கு... எங்கள் வீட்டுக்குப் போக வேண்டும்!''

வீட்டுக்குப் போய்விட்டால், அங்கே, அவளுக்கு என்று ஓர் அறை உண்டு! அங்கே போய், மனம் ஆறுமட்டும் அழலாம்!

ஆனால், ஆறுமா? அதுவும் இப்போது?

முதலில், இவன் முன்னே அழுதுவிடாமல் கிளம்ப வேண்டும்! அன்றி அழுதால், அதற்கும் மோசமாக ஏதேனும், தனி விளக்கம் கொடுப்பான்!

தானும் எழுந்து, ''வீட்டை வேண்டுமானால் சுற்றிப் பார்த்துவிட்டுக் கிளம்புகிறாயா? வெளியே இருந்து அரைகுறையாகப் பார்த்ததுதானே? இட்டாலியன் மார்பிள், ஷாண்டிலியர் என்று, மாடி., இன்னும் அழகாக இருக்கும்!'' என்று வேண்டுமென்றே பதவிக போலக் காட்டிக் கேட்டான் சைதன்யன்.

முன்பொரு காலத்தில், அவர்கள் இருவரும் மனதில் இருப்பதையெல்லாம் பரிமாறிக்கொண்ட காலத்தில், தன் பெயரை யாரும் சுருக்கிக் கூப்பிட்டால், பதில் சொல்வது கிடையாது என்று அவன், அவளிடம் சொல்லியிருக்கிறான். சைதன்யனைச் சுருக்கினால், 'சைதன்' என்று வருமாம்! அது மருவி, 'சைத்தான்' என்று ஆகிவிடுமாம்!

ஆனால், அதற்கொரு வழி கண்டுபிடித்து, 'சது' என்று அவள் அழைத்தபோது, அவன் அவ்வளவு சந்தோஷப் பட்டான்!

ஆனால், இப்போது அவன் மனதில் இருப்பது, சைத்தான் மட்டுமே என்று, மதுவந்திக்குத் தோன்றியது!

ஆனால், மொழியோ, அதன் வார்த்தைகளோ, அவனுக்கு மட்டும் சொந்தம் இல்லையே!

"நான் சாதாரண மத்திய தரக் குடும்பப் பெண், சைதன்யன்! உங்கள் மார்பிளுக்கும், ஷாண்டிலியருக்கும் மதிப்புப் போடக்கூடத் தெரியாதவள்! அதெல்லாம் தெரிந்து, அதற்கு மட்டுமே மதிப்புக் கொடுப்பவர்கள் வருவார்கள்! அவர்களுக்குக் காட்டுங்கள்!" என்று அவனுக்குப் பதில் சொன்னவள் அதற்கு மேல், ஒரு வினாடிகூட நில்லாது வேகமாக வெளியே நடந்தாள்.

நல்லவேளையாக, வீட்டு வாயிலுக்கு நேரேதான் ஸ்கூட்டி நின்றது!

உதைத்துக் கிளப்பத் தேவையில்லாத பட்டன் ஸ்டார்ட்டர்.

வண்டியைக் கிளப்பியவள் வந்த வேகத்தைப் பார்த்து, வாயில் காவலன் அவசரமாகக் கேட்டைத் திறக்க, பாதி திறக்குமுன்னரே கிடைத்த இடைவெளியில் வாகனத்தை செலுத்திக் கொண்டு, அங்கிருந்து வெளியேறிவிட்டாள் அவள்.

அங்கே, எங்கேனும் நிற்க நேர்ந்திருந்தால், கண்ணீரை அடக்க முடியாமல், அழுது, மிகவும் கேவலமாகிப் போயிருக்கும்!

நல்லவேளை! குறைந்த பட்சமாய், அதிலிருந்தேனும் தப்பினாள்!





# 4

சென்றது போலவே, வந்தது எப்படி என்றும், மதுவந்திக்குத் தெரியாது! கல்லூரியில் சேர்ந்ததில் இருந்து, இந்த வாகனத்தை ஓட்டிப் பழகிய பழக்கம், எந்த வித விபத்துக்கும் ஆளாகிவிடாதபடி, அவளைப் பத்திரமாகக் கொணர்ந்து சேர்த்தது எனலாம்!

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால், தாயார் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "என்ன சுட்ட கத்திரிக்காய் மாதிரி, முகம் வதங்கிக் கிடக்கிறது? சொன்னால் கேளாமல், காடோ, மேடோ என்று வெயிலில் அலைவது! போய் முகத்துக்கு ஏதாவது க்ரீம் போட்டுக்கொண்டு படுத்திரு! இரவு, விமான நிலையத்துக்குப் போக வேண்டும்., நினைவிருக்கட்டும்!" என்று கூறினாள்.

சிந்தாமணியுடைய கணவன் வழி உறவினர் பலர், மணமக்களை வழியனுப்ப வருவார்கள். அந்தக் குடும்பத்தினர் நல்ல குணத்தோடு பெரும்பாலும் ஓரளவு உயர்ந்த நிலையிலும் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் மகள் பளிச்சென்று தெரிய வேண்டும் என்பது தாயின் ஆசை!

உடனே நடப்பதற்கு இல்லையென்று அவளுடைய கணவர் சொல்லிவிட்டாலும், அடுத்து, அந்தக் குடும்பத்தில் ஒரு திருமணத்துக்கு முயற்சி எடுக்கும்போது, மதுவந்தியின் நினைவு வருமல்லவா என்ற எண்ணம் வித்யாவுக்கு!

ஒரு பெண்ணின் திருமணம் நடந்தது போல, அடுத்த வளுக்கும் நடந்துவிட்டால், நிம்மதியாகவே இருக்கலாமே!

பெற்றவளின் மனக்கோட்டை அது!

ஆனால், பெண் மனம் தீயாய் எரிந்து கொண்டிருந்தது!

சிந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம், அவளுக்கும் பெரும் அதிர்ச்சி!

அப்போதும், அவள் சொன்னதை எடுத்துக் கொண்டு, நேராக சைதன்யனிடம் செல்ல வேண்டும் என்று, மதுவந்தி திட்டமிட்டுச் செல்லவில்லை! அனிச்சைச் செயல் போலத் தானாக நடந்தது, அது!

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, சைதன்யனைப் பார்த்தது, அவளை ரொம்பவே பாதித்துவிட்டது!

ஆயினும், அவனைப் பார்த்த பிறகு, உண்மையை தெரிவிப்பதில், தயக்கம் தோன்றவில்லை! சொல்லாதிருக்க, அவசியமும் இல்லையே! அவனோடு அவள் பழகியிருந்த விதம் அப்படி!

உடனே அதை ஒத்துக்கொண்டு, பழைய மாதிரி அவன் கொஞ்சலும், குழைவதுமாக மாறிவிடுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லைதான்!

ஆனால் மூன்று ஆண்டுகளாக அவள் தவித்த தவிப்பு, அவனுக்கும் இருந்திருந்தால், இப்படி எப்படிப் பேசுவான்?

அவளை, எவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டான்!

அவளும், அவனைத் தவறாக நினைத்தாள்தான்! ஆனால் அவள் அப்படி நினைப்பதற்கு ஆதாரமாக, அவளுடைய சகோதரியின்... கிட்டதட்டக் கூடப் பிறந்தவள் போன்றவளின் வாக்குமூலம் இருந்தது!



ஆனால் அவன்? எந்தவிதமான அடிப்படையும் இல் லாமல், அவளைப் பற்றி, இவ்வளவு மட்டமாக மதிப்பிட் டிருக்கிறானே, இவனது நேசத்தைப் பற்றி என்ன சொல்வது?

சைதன்யனின் பேச்சு, திரும்பத் திரும்ப நினைவு வந்து, அவளை வாட்டி வதைக்க, கண்ணீரிடம் சரண் புகுந்தாள் மதுவந்தி!

சில மணி நேரம் கழித்து, விமான நிலையத்துக்கு அணிந்து போக நகை ஏதும் வேண்டுமா என்று கேட்க வந்த வித்யா, மகளைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள்.

அந்த அளவுக்கு, கண்ணும் முகமும் சிவந்து போய், மதுவந்திக்கு உடம்பே சுடத் தொடங்கியிருந்தது!

"உலகமே ஒரு 'குளோபல் வில்லேஜ்' என்கிறார்கள்! சிந்தா வெளிநாடு போகிறாள் என்று, நீ இப்படி அழுதா யாக்கும்! அவள் அமெரிக்காவுக்குத்தானே போகிறாள்! அமேசான் காட்டுக்கு அல்லவே!" என்று மகளைக் கடிந்து கொண்டாள் அவள்.

கூடவே வளர்ந்த சிந்தாவின் பிரிவுக்காக அழுததாகத் தாயார் எண்ணுகிறாள் என்று புரியவும், அப்படியே நினைக்கட்டும் என்று விட்டுவிட்டாள் மதுவந்தி!

அதையே வளர்த்து, 'அங்கே வந்தால்கூட, எல்லோர் முன்னிலையிலும் அழுது, நன்றாகவே இராதும்மா! தலை வேறு, ரொம்பவும் வலிக்கிறது! நான் வராமல், வீட்டிலேயே இருந்து விடுகிறேனே, அம்மா?" என்று கெஞ்சலாக கேட்டாள்.

அவளுக்கு விமான நிலையத்துக்கு போக.மனமில்லை! ஒன்று, சிந்தாவைப் பார்த்தால் அவளது மடத்தனத்தால்

நேர்ந்த விபரீதம் பற்றிய நினைவில் வேதனை உண்டாகுமே என்பது! அடுத்தது, புதிதாக வாழ்க்கையைத் தொடங்கக் கிளம்புகிறவள் சிந்தா! இவள் தன் இழப்பை நினைத்துப் பார்த்து, அவளுக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்து விடக் கூடாதே என்பது! போகாமல் இருந்துவிட்டால், அந்தப் பிரச்சனைக்கு வழியிராதல்லவா?

ஆனால், "ஓ!" என்று திகைத்தாள் தாய்!

உடனேயே, அவளுக்கும் இதுதான் சரியென்று தோன்றி விட்டது!

இதற்கு மேல், மதுவந்தி குளித்து, அலங்கரித்துக் கிளம்புவது, கடினம்! அதுவும், உடம்பே சுடும்போது, குளிப்பதும் சரியில்லை! சும்மாவே மகள் நன்றாகத்தான் இருப்பாள் என்றாலும், இந்த வாட்டமும் சோர்வும் குறைத்துக் காட்டக்கூடும்! எதற்காக, அப்படிப் போய் நிற்க வேண்டும்? திருமணத்தின்போது பார்த்த அழகிய தோற்றமே, எல்லோர் மனதிலும் நிற்கட்டும்! உடம்பு சரியில்லாதவளைக் கஷ்டப்படுத்தவும் வேண்டாம்!

"ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதாம்மா? ஒரு குரோசின்.. ஏதாவது மாத்திரை போட்டுக் கொள்கிறாயா? அல்லது... வருகிறாயா, டாக்டரிடம் காட்டி விடலாம்." என்று அழைத்தாள்.

அழைக்கும்போதே யோசித்து, "சீக்கிரமாகப் போய் விட்டு வர வேண்டும், மது! சிந்தாவுக்காக மசாலப் பொடிகள் தயார் பண்ணி வைத்திருக்கிறேன். எதெது, எப்படியெப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி, அவளிடம் கொடுக்க வேண்டும். அதனால், சீக்கிரமாக வா!" என்று அவசரப்படுத்தினாள்.



"டாக்டர் எல்லாம் வேண்டாம்மா..." என்று மதுவந்தி மறுத்துக் கொண்டிருக்கும்போதே "மதுவுக்கு வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன், வித்யா. நீயும் வினுவும் சிந்தாவைப் போய்ப் பாருங்கள். அவளிடம் அம்மாவாய்ச் சொல்ல, உனக்குத்தான் நிறைய இருக்கும்! இங்கே, இவளுக்குக் காய்ச்சல் என்று சொன்னால், அவளும்.. அங்கே எல்லோருமே புரிந்துகொள்வார்கள்! நீ சீக்கிரமாகக் கிளம்பி, அங்கே போய்வா!" என்று, மனைவி, மகள் பேச்சைக் கவனித்திருந்த கேசவன் கூறினார்.

"நான் தனியாகவே...." என்று தொடங்கிய மதுவந்தி தந்தையின் பார்வையில் அடங்கி வாயை மூடிக் கொண்டாள்.

அவளைத் தனியாக விட, அவருக்கு விருப்பமில்லை! அல்லது, அவளுடன் தனியே பேச, அவர் விரும்புகிறார்.

பேசுவதற்கு என்ன இருக்கிறது என்று அலுப்புடன் கண்களை மூடிக் கொண்டாள் மகள்.

பிரச்சனைக்கு இது நல்ல தீர்வாகத் தோன்றிவிட்டது. வித்யாவுக்கு. "ஆமாம். அதுதான் சரி! நான் எப்படியும், சிந்தாவோடு பேச வேண்டியிருக்கிறது! ஆனால், இவள் சோம்பேறியாய் வர மறுத்தாலும், விடாமல் டாக்டரிடம் கூட்டிப் போய்விடுங்கள்! சின்னப் பிள்ளை மாதிரி அழுது, உடம்பை எப்படிக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள், பாருங்கள்! அதே போல, டாக்டரும் வேண்டாம் என்பாள்! விடாதீர்கள்! அப்போது நான் கிளம்பட்டுமா? வினு காரைப் பத்திரமாக ஓட்டுவான்தானே? எதற்கும், அவனிடம் ஒரு வார்த்தை சொல்லி அனுப்புங்கள்! என்ன, நாங்கள் கிளம்பவா? கூடவே, நீங்களும் கிளம்புகிறீர்களா?

டாக்டரிடம் விட்டுவிட்டுப் போகிறோம்!'' என்று பரபரத்தாள்.

''இல்லையில்லை! இப்போது டாக்டரிடம் ரொம்பக் கூட்டமாக இருக்கும்! மதுவால் உட்கார்ந்து காத்திருக்க முடியாது! நாங்கள் மெள்ளப் போய்க் கொள்ளுகிறோம். நீ கிளம்பு!'' என்று கேசவன் சொல்லிவிட, மகளுக்குக் கொஞ்சம் நிம்மதியாயிற்று!

வித்யா முகம் கழுவிக் கிளம்பச் சென்றபோது, விக்னேஷ் வந்து நின்றான். ''அப்பா, நான் காரை ஓட்ட வேண்டும் என்றால், ஆ, ஓ என்று ஏதாவது சொல்லிக்கொண்டே இருக்கக் கூடாது என்று, அம்மாவிடம் சொல்லி வையுங்கள்! இல்லாவிட்டால், ஏதாவது ஆட்டோவிலேயே போய்க் கொள்ளலாம்!'' என்றான்.

''ஷ்! என்னடா நீ! அம்மாவைத் தெரியாதா? அவள் சொல்லுவதை சொல்லட்டும். நீ பேசாமல் இந்தக் காதில் வாங்கி, அந்தக் காதின் வழியே விட்டுவிட்டு, உன் வழியே காரைக் கவனமாக ஓட்டு! அது போதும்! நன்றாகத்தான் ஓட்டுவாய்!'' என்றார் கேசவன் நம்பிக்கையோடு.

அமைதியுற்று, ''சரிப்பா!'' என்று காரை எடுக்கச் சென்றான் பிள்ளை!

இதுதான் அப்பா! அனாவசியத் தலையிடல்கள் இல்லாமல், ஆனால், வேண்டியதைச் செய்வார்! இவராலும், சிந்தாவின் பொய்யைக் கண்டுகொள்ள இயலவில்லைதான். ஆனால், இப்போது, அவளுக்கு என்ன சொல்லப் போகிறார்?

தந்தை என்ன சொல்லக்கூடும் என்று யோசிக்கும் போதே, எதுவும் பயன் இல்லையே என்று நிராசையும்



தோன்றிவிட, மூடிய இமைகளுக்குள் மதுவந்திக்குக் கண்ணில் கரித்தது!

அவள் எதிர்பார்த்தது போலவே, தாயும் தம்பியும் கிளம்பியதும், சூடாக ஒரு கப் காபி போட்டு எடுத்துக் கொண்டு, மகளிடம் வந்து அமர்ந்தார் கேசவன்.

''இதைக் குடி. தெம்பாக இருக்கும்!'' என்று காபியைக் கொடுத்துக் குடிக்கச் செய்துவிட்டு, ''என்னம்மா, சைதன்யனைப் போய் பார்ப்போமா?'' என்று வினவினார்.

மதுவந்தியின் கண்கள் மீண்டும் கலங்கின.

''என்னடாம்மா.''

''பார்த்துப் பயனில்லை, அப்பா!''

அவளை ஒரு கணம் கூர்ந்துவிட்டு, ''அங்கேதான் போனாயா?'' என்று கேட்டார் கேசவன்.

''போகவேண்டும் என்று போகவில்லை...'' என்று தொடங்கி, நடந்தது முழுவதையும் சொன்னாள் மகள்.

எப்போதுமே அப்படித்தான். பெற்றவளாக இருந்தும், சிந்தாமணி அளவிற்கு, மதுவந்திக்கு வித்யாவிடம் நெருக்கம் கிடையாது! ஆனால், தந்தையிடம் வெளிப்படையாகப் பேசுவாள்.

அதேபோல, இன்றும் அவள் எதையும் மறைக்கவில்லை!

சில வினாடி யோசித்துவிட்டு, ''அவருக்கு நடந்தது, பெரிய அநியாயம், மது. உன் அம்மா என்னை நம்பாமல் பேசினால், எனக்கு எப்படி இருக்கும் பார்! இத்தனை ஆண்டுகள் குடும்பம் நடத்தி வளர்த்து வைத்திருக்கும் நம்பிக்கை அவருக்கு அப்போதே இருந்திருக்கிறது! பெரிய

கொடுப்பினை, அது! அதையே, உன்னிடமும் எதிர்பார்த் திருக்கிறார்! அது, இல்லாமல் போன ஆத்திரம்! ஆனால், இப்படி ஒரு பொய்யைச் சித்தா சொல்லக் கூடும் என்று யாரால் நினைக்க முடியும், சொல்லு? இதை எடுத்துச் சொன்னால், புரிந்துகொள்ள மாட்டாரா?'' என்று கேட்டார் அவர்!

''நீங்களே அவரைப் பற்றித் தவறாகச் சொல்லியிருந் தாலும் கூட, நான் அதை நம்பியிருக்கக் கூடாது என்கிறார், அப்பா!''

''ஓ!'' என்றவர், மகளின் சோர்ந்த முகத்தைப் பார்த்து விட்டு, ''உனக்கு இன்று, அதிர்ச்சி மேல் அதிர்ச்சி, கண் ணம்மா! இப்போது, எதையும் கோர்வையாக எண்ணிப் பார்ப்பதுகூடக் கடினம்! பொறுமையாக இரு! என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று எல்லாமே நாளைக்கு நிதானமாக யோசிப்போம்!'' என்று, அப்போதைக்கு மகளை அமைதிப்படுத்த முயன்றார், கேசவன்.

நம்பிக்கையற்றுத் தலையசைத்தாள் மதுவந்தி. ''ஒன்றும் பிரயோஜனம் இல்லை அப்பா. அவர் என்னை அடியோடு வெறுத்துவிட்டார்!'' என்றபோது, அவளது குரல் உடைந்தது!

முன்பும், சைதன்யனின் இழப்பு, மதுவந்திக்குப் பெரும் பாதிப்பாகத்தான் இருந்தது!

ஆனால், அப்போது, நியாயமான காரணம் இருப்பதாக எண்ணியதால், அவளால், அதைத் தாங்கிக்கொள்ள முடிந்தது!

இப்போதும், அந்தக் காரணமும் இல்லாமல் போய்விட, ஒரு வித முகாந்திரமும் இல்லாமல், வெறும் இழப்பு,



மட்டுமே நிச்சயம் என்று ஆனதை, அவளால் தாங்கவே முடியவில்லை!

மகளின் மனநிலை புரிந்தபோதும், கேசவனுக்கும், அப்போது என்ன பண்ணுவது என்று புரியவில்லை!

எல்லாம் சரியாகிப் போகும் என்று சும்மாச் சொல்லி வைக்கவும், அவருக்கு மனமில்லை! அப்படியே வாய் வார்த்தைக்கு அவர் சொன்னாலும், அதை ஏற்று அமைதி யாகிற அளவுக்கு, மதுவந்தி முட்டாளும் அல்ல!

செய்வதறியாது அவர் திகைப்புடன் நின்றபோது, வாயில் மணி ஒலித்தது!

''இந்த நேரத்தில் யார்'' என்று சலிப்புடன், யாரென்று பார்க்க, அவர் சென்றார்!

ஆனால், அவருடன் உள்ளே வந்த மனிதரைப் பார்த் ததும், தந்தையோடு சேர்ந்து, மதுவந்தியும் திகைத்துப் போனாள்.

''வா வாருங்கள், அங்கிள்!'' என்று தடுமாறியவளை ஒரு தரம் நன்றாகப் பார்த்தவர், ''நன்றாக இருக்கிறாயா என்று கேட்டுப் பயனில்லை! ஏனெனில், நன்றாக இல்லை என்பது, நன்றாகவே தெரிகிறது! என் மகன் உன்னிடம் அப்படி என்ன சொன்னான்?'' என்று விசாரித்தார் அவர்!

அவள் மீண்டும் திகைக்கவும், ''வீட்டுக்கு எதிர்ப்புறத் தில், நானும் உன்னைப் பார்த்தேன், அம்மா! பாதி வாக் கியத்தில், என் பையனின் பேச்சு நின்று போகவும், அவன் பார்வை போன திசையை, நானும் திரும்பிப் பார்த்தேன்! எனக்கு விடை கொடுப்பதைக் கூட மறந்து, அவன், உன்னை நோக்கி வந்ததையும், உன்னை வீட்டுக்கு அழைத்துப்

போனதையும், பின்னே திரும்பிப் பார்த்தபடி தான் காரில் போனேன்! ஆனால் அப்புறமாக, நல்ல சேதி ஒன்றும் வரவில்லை! பிள்ளைக்கு போன் செய்தால், உன் பெயரைக் கூடச் சொல்லக் காணோம்! கூடவே, எதையும் பேசப் பிடிக்காத பாவனை! நானாகக் கேட்டால், கொம்பேறி மூக்கனாகி விடுவான்! அதனால்தான் இங்கே வந்தேன்! மனைவி, குடும்பம் என்று சைதன்யன் வாழ வேண்டும் என்பது, என் விருப்பம்! அந்த மனைவி நீயாகத்தான் இருக்க முடியும் என்றும் தெரியும்! அவன் ஒரு மாதிரிப் பிடிவாதக்காரன் என்பதும் தெரியும்! இனிமேல், எதையும் மறைக்காமல் என்னிடம் சொல்லலாம் இல்லையா?" என்று வினவினார் ஞானசேகரன். சைதன்யனுடைய தந்தை!

அவரது பேச்சு தோற்றுவித்த எத்தனையோ கனவுகள் அடிப்படையே இல்லை என்று அறிந்திருந்த காரணத்தால் அடியோடு கலைய, "நீங்கள் நினைப்பது தப்பு, அங்கிள். அவர் என்னை அடியோடு வெறுத்துவிட்டார்!" என்று, வருத்தத்துடன் கூறினாள் மதுவந்தி!

"என்னது? வெறுத்தானா?" என்றார் அவர் நம்பாத குரலில்! "ஏன், நான் இருப்பதையே மறந்து, பாதிப் பேச்சில் இருப்பதையும் மறந்து, அவன் உன்னை நோக்கி வந்தான்! அவன், உன்னை வெறுத்து விட்டானா? என்ன கதை, இது" என்று கேட்டார், பெரியவர்!

"நான் சாரிடம் எல்லாம் சொல்கிறேன். நீ அவருக்குக் காபி..." என்றபடி கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "ஒரு கப் பால் சூடு பண்ணி எடுத்து வாம்மா!" என்று மகளை அனுப்பினார் கேசவன்.

தந்தையை நன்றியுடன் பார்த்துவிட்டு, உள்ளே சென்றாள் மகள்.



"மது ரொம்பவும் கலங்கிப் போயிருக்கிறாள். இன்னொரு தரம் எல்லாம் சொல்ல நேர்ந்தால், இன்னமும் உடைந்து போவாள். அதனால்தான் அனுப்பினேன்!" என்று விளக்கம் கொடுத்துவிட்டு, மகள் சொன்னது முழுவதையும், சைதன்யனுடைய தந்தையிடம் தெரிவித்தார் கேசவன்.

"ஓகோ!" என்று யோசித்த ஞானசேகரன், மதுவந்தி பாலுடன் வரவும், அவளை உட்காரச் சொல்லி, மேலே பேசினார். "பாரம்மா, அவன் பிடிவாதக்காரன். அவனது பேச்சு நம்பிக்கை அளிப்பதாக இல்லைதான். ஆனால், இந்த மூன்று ஆண்டுகளாக... எந்த மூன்று ஆண்டுகள் என்பது உனக்குத் தெரியும்., அவன் இன்னொரு பெண்ணை... வேறொரு பெண்ணின் பக்கமாகப் பார்த்தது கூடக் கிடையாது! விழித்திருக்கும் நேரம் எல்லாம், உழைப்பு, உழைப்புதான்! முன்பு நாங்கள் என்ன நிலையில் இருந்தோம் என்பதும், உனக்குத் தெரியும். அவனது இந்த மூன்றாண்டு காலத்து அயராத, அசுர உழைப்புதான், எங்களை இவ்வளவு உயர்த்திருக்கிறது! அந்த உழைப்பின் அடிப்படை, உன் மீது, அவன் வைத்திருக்கும் அன்புதான். இவ்வளவு அன்பு வைத்திருக்கும், என்னைப் போய்த் தவறாக நினைத்தாளா என்கிற கோபம்தான்!...

"அதற்காக, இந்தக் கோபத்தை அப்படியே வைத்திருந்து, அவன் இன்னமும் நிறைய நிறையச் சம்பாதிக்கலாமே என்று நான் எண்ண மாட்டேன்! ஏனெனில், அது மனித உடம்பால், இயலுகிற காரியம் அல்ல! எவ்வளவு நேரம் முழு வேகத்தில் ஓடிக் கொண்டே இருக்க முடியும்? இடையிடையே கொஞ்சம் ஓய்வு, பொழுதுபோக்கு வேண்டாமா? உடம்பின் இறுக்கம் தளர வேண்டும்!

மற்றபடி, இன்னும் அதிக காலம், இந்த வேகத்தை அவனால் தாக்குப் பிடிக்க முடியாது! இப்போதே, இந்த மூன்று ஆண்டுகளிலேயே, அவன் பத்தாண்டு மூத்துத் தெரிகிறான். அவனுக்குக் காதோரம் லேசாக நரைக்கத் தொடங்கியிருக்கிறதே. பார்த்தாயா? ஒரேயடியாக அவன் உடைந்து விழுமுன், அவனைக் காப்பாற்றியாக வேண்டும்! அது உன்னால்தான் முடியும்!'' என்றார் பெரியவர்!

கவலையுடன் அவரை நோக்கி, ''என்னால் முடியாதே அங்கிள்!'' என்றாள்.

இரு பெரியவர்களும், அவளைத் திகைப்புடன் நோக்கினர்!



திகைப்பைச் சமாளித்து, முதலில் பேசியவர் கேசவன், ''என்னம்மா, என்ன சொல்லுகிறாய்? யோசித்துப் பேசு!'' என்றார் குரலில் பதற்றத்துடன்.

''யோசித்துதான் சொல்லுகிறேன், அப்பா! இன்றைய நிலையில், சைதன்யனை அணுக நான் ஓர் அடி எடுத்து வைப்பது, அங்கிள் அஞ்சுகிற அழிவு நிலை நோக்கி, அவரைப் பத்து அடி எடுத்து வைக்கத் தூண்டுவது போல ஆகிவிடும்! அந்த அளவுக்கு, அவர் என்மேல் வெறுப்பை வளர்த்து வைத்திருக்கிறார்! என்னைப் பார்க்கையில் ஆத்திரம் இன்னும் அதிகமாகி, அந்தக் கோபத்தில், இன்னும்



அதிகமாகி அந்தக் கோபத்தில் இன்னும் அதிகமாக உழைக்கத் தொடங்கி விட்டால்? அவருக்கு இன்னும் அதிக ஆபத்தாகி விடுமே! அதனால்தான், அவரைக் காப்பாற்றுவது என்னால் ஆகாத காரியம் என்றேன்!'' என்றாள் அவள், வேதனையோடு!

''ஓ! இதுதானா?!'' என்றார் ஞானசேகரன், ஆறுதலுற்ற குரலில்!'' அவனது கோபம், வெறுப்பு எல்லாம், சும்மா, அம்மா! அவனளவு நீ பிரியம் வைக்கவில்லை. வைக்காததால்தான் அவனைத் தப்பாக எண்ணி விட்டாய் என்ற எண்ணம்...''

''அது மட்டுமல்ல, அங்கிள். அவர் அளவுக்கு நான் அன்பு வைக்காததற்குக் காரணம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்! அதுதான், அவரைப் பிசாசாக வேலை செய்ய வைத்திருக்கிறது! அவர் பெரிய பணக்காரராக அப்போது இல்லாததால்தான், அவ்வளவு இலகுவாக அவரைத் தப்பாக நினைத்துக் கழட்டி விட்டு விட்டேனாம்! அதனால் தான், பணக்காரர் ஆவதில் அவருக்கு அவ்வளவு வேகம்!'' என்று, நம்பிக்கையற்றுப் பெருமூச்சு விட்டாள் மதுவந்தி.

ஆனால், ''அதைத்தான் நானும் சொல்லுகிறேன்! உன் காரணமாகத்தான். பேயாய், பிசாசாய் அலைந்து, பணத்தைப் பெருக்கினான்! உனக்குப் பெரிதாகக் காட்டிக் கொள்ளத்தான், அல்லவா? அதனால்தான், அவனது அடி மனதில், இன்னமும் நீதான் இருக்கிறாய் என்பது, தெளிவாகி விட்டது என்கிறேன்!'' என்றார், ஞானசேகரன்!

மதுவந்தி கசப்புடன் லேசாகச் சிரித்தாள்.

''என்னம்மா?''

தலையசைத்து, ''அங்கிள்,'' ஒரு காலத்தில், உங்கள் மகன் என் மேல் மிகுந்த அன்பு வைத்திருந்தார் என்பது

உண்மைதான், அங்கிள். அந்த அன்புக்கும் அவரது பிடிவாதத்துக்கும் மதிப்புக் கொடுத்தே, நீங்கள் என்னை மருமகளாக ஏற்க ஒப்புக் கொண்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்! ஆனால், இப்போது அவர் என்னை அடியோடு வெறுத்துவிட்டார், அங்கிள். அங்கே, உங்கள் வீட்டில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்பதே, எனக்கு மனதில் பதியவில்லை! பத்தோ, பதினைந்தோ நிமிஷங்கள்! அந்தச் சிறு அவகாசத்தில் சைதன்யன் எனக்கு முழுமையாக உணர்த்தியது. அவரது வெறுப்பை மட்டும்தான்!'' என்றாள் அவள் சோர்வுடன்!

இவர்களுக்கு ஏன் புரியமாட்டேன் என்கிறது என்றிருந்தது, அவளுக்கு!

அவள் சொல்வதை ஒத்துக்கொண்டு, அவளைத் தனியே விட்டுப் போய்விட்டால், அவள் நிம்மதியாக அழுது தீர்ப்பாளே!

அதற்குக்கூட விடாமல்...

ஆனால், ஞானசேகரனின் முகத்தில் மலர்ச்சி பரவியது!

''இப்போதுதானம்மா, எனக்கு ரொம்பவே நம்பிக்கை வருகிறது! அந்தச் சிறு அவகாசத்தில், உன்னை இவ்வளவு வருத்தப்படுத்தி விட்டான், பார்! உள்ளே எவ்வளவு கோபம் இருந்தால், இது சாத்தியம்? அந்த வேகத்தின் அடிப்படை, உன் மீதுள்ள அன்புதான், மதுவந்தி!''

''அன்பு நோகடிக்காது! வெறுப்புதான் அழ வைத்துப் பார்க்கும்!''

''மூன்று ஆண்டுகளுக்கு முன், அவனை வருந்த வைத்தாயே! அவன் மீதிருந்த வெறுப்பினாலா?''



அவள் பேந்த விழிக்கவும் இரங்கி, ''பாரம்மா, உனக்கும் எனக்கும் ஒரே குறிக்கோள்தான்! சைதன்யா நல்லபடியாக, சந்தோஷமாக வாழ வேண்டும்! அவனது சந்தோஷத்தை, உன்னாலன்றி, வேறு யாராலும் அவனுக்குக் கொடுக்க முடியாது! அதற்கு, உன்னால் ஆனதைச் செய்ய நீ தயாரா, இல்லையா? அதைச் சொல்லு!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டார், அவர்!

பிரச்சனையை இந்தப் பெரியவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று யோசித்து, ''பாருங்கள், அங்கிள்! சைதன்யனின் மகிழ்ச்சி எனக்கு மிகவும் முக்கியமே! செய்த பிழைக்குப் பரிகாரமாகவும், நான் எவ்வளவோ செய்ய வேண்டும்தான்! ஆனால், நான் என்ன செய்தாலும், சைதன்யன் அதை ஏற்கப் போவதில்லை என்பதுதான் அங்கிள் பிரச்சனையே. தயாரா, தயாரில்லையா என்பது அல்ல!'' என்றாள் பெண், வேதனையை அடக்கிய குரலில்.

'சதுவிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்ப்பா...' என்று கண்ணீர்க் குரலில் கூறியது நினைவு வந்து, கேசவனுக்கு உள்ளே வலித்தது! ஆனால், இதில் தலையிடுவது, ஒரு நல்ல தீர்வைக் கெடுத்து விடுமோ என்றஞ்சி, பேச்சின்றி, பார்த்துக் கொண்டிருந்தார்!

''நீ சொல்வதைப் பெருமளவு நானும் ஒத்துக் கொள்கிறேன்., மதும்மா!'' என்றார் ஞானசேகரன்! ''நீ என்ன செய்தாலும், சைதன்யன் ஒன்றும், அதை 'ஆஹா' என்று ஆனந்தமாக உடனடியாக ஏற்றுக் கொள்ளப் போவது கிடையாதுதான்! முரட்டுப் பிள்ளைக்கு மருந்து கொடுப்பது போலக் கஷ்டப்பட்டுத்தான் செய்ய வேண்டும்! இந்தப் பதினைந்து நிமிஷங்கள் போல, உன் மனம் நோகும்படி, இன்னும் எத்தனையோ நடக்கக் கூடும்! ஆனால்,

கடைசியில், ஒரு நல்லது நடக்க வேண்டுமானால், இதைத் தவிர, வேறு வழியில்லை...''

''ஆனால்...''

''ஆனால், இப்போது, அங்கே உன் உதவிக்கு நான் இருப்பேன்! நாம் இருவருமாகச் சேர்ந்து, அவனை வழிக்குக் கொண்டு வருவோம்!'' என்று முடித்த ஞானசேகரன், அப்போதுதான் மதுவந்தியுடைய தந்தையும் அங்கே இருப்பதை உணர்ந்தவரைப் போல, ''சாரி மிஸ்டர் கேசவன்! மது, உங்கள் பெண்! உங்கள் அபிப்பிராயத் தையும்... அதைத்தான் முதலில் கேட்டிருக்க வேண்டும் தான்! ஆனாலும், நீங்கள்... தடுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்!'' என்றார்.

''மாட்டவே மாட்டேன் சார்!'' என்றார் கேசவன். ''மூன்று ஆண்டுகளாக, உங்கள் பையனைப் பற்றிச் சொன்னீர்கள்! நானும், என் பெண்ணைப் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன்! மதுவும், கொஞ்சமாகக் கஷ்டப்படவில்லை! இவள் முகத்தில், முழுமையான சிரிப்பை நான் கண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன, தெரியுமா? எனவே, மது முகத்தில் பழைய மலர்ச்சி மறுபடியும் வருவதற்கு, நீங்கள் என்ன செய்தாலும், எனக்குச் சம்மதமே!'' என்றார் அவர்!

ஆனால், ''நீ வேலைக்குப் போவதாகக் கேள்விப் பட்டேன். முதலில், அந்த வேலையை விட்டுவிட்டு, நம் நிறுவனத்தில் சேர்ந்து விடு!'' என்று ஞானசேகரன் கூறவும் திகைத்து, ''மதுவுக்கு இப்போது மாதம் இருபது ஆயிரம் வருகிறதே!'' என்றார் கேசவன்!

''நம் நிறுவனத்திலும், இப்போது சிலருக்கு இருபதிற்கு மேல் சம்பளம் கொடுக்கிறோம் என்றாலும், எடுத்த எடுப்பில், மதுவந்திக்கு, அவ்வளவு கொடுப்பது கடினம். ஏனென்றால், சும்மாவே இரட்டைச் சம்பளம்...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மதுவந்தி குறுக்கிட்டு, ''இந்தப் பணி, வருமானத்துக்காகச் செய்வதல்லவே, அப்பா!'' என்று மெல்லிய குரலில் அவருக்கு நினைவு படுத்தினாள்.



''ஸ்ஸ்ஸ்... ஆமாம்மா! மறந்துவிட்டேன்! இப்போது, உங்கள் திட்டம் என்ன, சார்?'' என்று வினவினார் அவர்!

''முக்கியமானது, இவர்கள் இருவரையும் அடிக்கடி சந்திக்க வைப்பது! வேலையெல்லாம் சைதன்யன்தான் செய்வது என்றாலும், நிறுவனத்து சேர்மன் நான்தான். முதலில் தொடங்கும்போது, ஏற்படுத்திய அமைப்பை, இவ்வளவு வளர்ந்த பிறகும், பையன் மாற்றவே இல்லை! எனக்குச் செயலாளராக வேலை பார்க்கிற பெண்ணுடைய கணவன் வெளிநாட்டில் இருக்கிறான். ஊரில் இருக்கும் அவனுடைய பெற்றோருக்கு, கிராமத்து வீட்டில் ஏதோ வசதிகள் செய்து கொடுக்கும்படிச் சொல்லிப் பணம் அனுப்பி இருப்பதாக, ஒரு நாள் கூறினாள். யாரோ ஆள் வைத்துச் செய்யப் போவதாகச் சொன்னாள். அவளுக்குச் சம்பளத் தோடு லீவு கொடுத்து, மராமத்து வேலைகளை நேரிலேயே பார்த்துவிட்டு வா என்றால் சந்தோஷமாகப் போவாள்! எப்படியும், மூன்று அல்லது நாலு மாதங்கள் பிடிக்கிற வேலை அது! அந்த இடத்துக்கு, மதுவை நியமிக்கப் போகிறேன்! அவன், மதுவை அடிக்கடி பார்க்கட்டும்! பார்க்கப் பார்க்க, அவளது மேன்மை புரியட்டும் என்று, நாம் கடவுளை வேண்டிக் கொள்வோம்!'' என்றார் ஞானசேகரன்!

''ஆனால், உங்கள் நிறுவனத்து வேலை முறைகள் பற்றி, எனக்கு ஒன்றும் தெரியாதே, அங்கிள்!'' என்று கவலைப்

பட்டாள் மதுவந்தி!" சும்மாவே என்னை எப்படி விரட்டுவது என்றுதான் சைதன்யன் வழி தேடிக் கொண்டிருப்பார். காரணமும் கிடைத்துவிட்டால், அப்புறம் அவ்வளவுதான்!"

"சும்மாவே ஆடும் பேய், கொட்டுக் கண்டால் விடுமா, என்கிறாய்!" என்று ஒரு சின்னச் சிரிப்பலையை உருவாக்கி, நிலைமையின் இறுக்கத்தை, ஞானசேகரன் சற்றுத் தளர வைத்தார்!

அவரைத் தொடர்ந்து, "சேச்சே! சதுவை நான் அப்படி யெல்லாம் மோசமாகச் சொல்ல மாட்டேனாக்கும்!" என்று முறுவலோடு தலையசைத்து மறுத்தாள் மதுவந்தி!

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டுக் கேசவன் சும்மா யிருக்க, அதைக் கவனித்து, "சும்மா சொல்லுங்கள், கேசவன்! வார்த்தை மட்டும் கிடைத்தால், அதைவிட மோசமாகச் சொல்லுவாள் என்றிருப்பீர்கள்! அதுதானே? அவன்தான், இன்னமும் உங்கள் மருமகன் ஆகிவிட வில்லையே! அதுவரை லைசன்ஸ் உண்டுதானே?" என்று ஞானசேகரன் கூற, கேசவன் சிரித்தார்.

"ஆனால், அவர் கோபப்படுவதைத் தப்பு சொல்லவும் முடியாதுதானேப்பா!" என்று மதுவந்தி, சைதன்யனை நியாயப்படுத்திப் பேசவும், இரு பெரியவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்து, சற்றுப் பெருமையாக முறுவலித்துக் கொண்டனர்!

அவள் அதற்குள், அவனுக்கு வக்காலத்து வாங்கு கிறாளாம். அவ்வளவு அன்பாம்!

ஆனால், சைதன்யனின் கோபத்தின் காரணமும் அன்பு தான் என்கிறாரே! அது மெய்யாக இருக்குமா? அவ்னது



முகமும் பேச்சும் எண்ணிப் பார்க்கையில், மதுவந்திக்கு நம்பிக்கை வர மறுத்தது!

ஆனால், ஒரு வகையில், பிரிவுக்குப் பெரும் காரணம் அவள்!

சிந்தாமணி ஏன் இப்படிச் சொல்லுகிறாள் என்று, அதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும்! காரணம் அறிந்து, அவளைச் சமாதானப்படுத்தியும் இருக்கலாம்! அதை விட்டு, அவள் பேச்சை அப்படியே நம்பிச் செயல் பட்டதில், எல்லோருக்கும் தவறு செய்து விட்டாள்! தான் உட்பட!

எனவே, சீர் செய்ய வேண்டியதும் அவள்தான்!

"என் வேலை என்னவென்று, இன்னமும் சொல்ல வில்லையே, அங்கிள்?" என்று மீண்டும் வினவினாள் மதுவந்தி!

"பொதுவாக ஒரு நிறுவன சேர்மனுடைய செகரட் டரியின் வேலைதான். எனக்கு வரும் கடிதங்களைப் படித்து, அவற்றின் முக்கியத்துவப்படி வரிசைப்படுத்தி என்னிடம் காட்டி... என் தினசரி வேலை அட்டவணை தயாரிப்பது, பார்க்க வேண்டியவர்கள், பார்க்க வருகிறவர்கள்... எல்லாம், சாந்தி விடுமுறையில் செல்லுமுன், இரண்டு நாள் கற்றுத்தரச் சொல்லுகிறேன்! அது போக, மற்றதை என்னிடம் கேட்டுக் கொள், இன்னும் பத்து நாட்களில், சைதன்யன் தெற்கு மாவட்டங்களுக்கு ஒரு பிசினஸ் டூர் போகிறான். அவன் திரும்பி வரும்போது, அலுவலகத்தில் உன் இடத்தை உறுதிப் படுத்திவிட வேண்டும்! அதற்குள், உன் பழைய இடத்திலிருந்து விலகிவிடு. ஒரு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது தகராறு பண்ணினால் என்னிடம்

சொல்லு! அந்த நாளைக்குரிய பணத்தைக் கட்டி, விலகி விடலாம்! இப்போது, நான் கிளம்புகிறேனம்மா! நம் நிறுவனம் பற்றிய பொதுவான குறிப்புகளை, உனக்கு அனுப்பி வைக்கிறேன். அதையும், மனதில் பதித்துக் கொள்! வரட்டுமா?'' என்று எழுந்தார் ஞானசேகரன்.

ஏதோ நினைவு வந்தது போலச் சுற்று முற்றும் பார்த்து விட்டு, ''வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் எங்கே? துறுதுறு என்று, எங்கள் சைதன்யனைப் போலவே, உங்களுக்கு ஒரு பையன் உண்டில்லையா? மது அம்மா, உங்கள் அண்ணன் மகள்... ஒருவரையும் காணோமே! எல்லோரும் எங்கே?'' என்று விசாரித்தார்!

'உண்மை அறிந்ததும்' விசாரித்தாரே தவிர, மதுவந்தி அந்த உண்மையை எப்படி, எப்போது அறிந்தாள் என்று ஞானசேகரனுக்குச் சொல்லவில்லை என்பது நினைவு வர, அதைப் பற்றியும் கேசவன் சுருக்கமாகத் தெரிவித்தார். ''பிரியமான பெண்தான்! ஊரில், அவளுடைய அம்மா வழிப் பாட்டி வீட்டார் ஏதேதோ சொன்னதில் குழம்பிப் போய்ச் சிந்தா அசட்டுத்தனம் பண்ணி விட்டாள்!'' என்று முடித்தார்.

விவரம் அறிந்ததும், லேசாகத் தலையை ஆட்டி, ''என்னவோ, எல்லாம் சரிவர நடக்கும் என்கிற நம்பிக்கை உண்டாகி இருக்கிறது. மிஸ்டர் கேசவன்! மற்ற மூவரில் யார் வீட்டில் இருந்திருந்தாலும், நாம் இவ்வளவு வெளிப் படையாகப் பேசியிருக்க முடியாது! நாம் பேசுவதற்கு வாய்ப்பு அளிப்பதற்காகவே, எல்லாமே, இன்றே நடந் திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது! அது மட்டுமல்ல, அந்தப் பெண் சிந்தா, இந்த விவரம் சொல்லாமலே



கிளம்பியிருக்கலாமே! அப்படிக் கிளம்பியிருந்தால், மது அதிர்ச்சியில் இப்படி எங்கள் வீடு வரை வந்திருக்கப் போவது இல்லை. என் பையனும் இவ்வளவு தெளிவாக தன்னைக் காட்டிக் கொண்டிருக்க மாட்டான்! ஏதோ, போதாத காலம் முடிந்து, கடவுள் கண் திறந்திருக்கிறார் என்று நம்பிக் காரியத்தில் இறங்குவோம்! வெற்றி கிடைக்கும்! இப்போது வரட்டுமா?'' என்று விடை பெற்றுக் கிளம்பினார் அவர்.

ஞானசேகரன் சொன்ன விதமோ, அல்லது, அவளது அடிமனத்து ஆசையோ, எல்லாம் நன்றாக நடக்கும் என்று, மதுவந்திக்கும் மனதில் நம்பிக்கை உண்டாயிற்று!

அதற்கேற்ப, ஞானசேகரனுடைய செயலாளராக இருந்த சாந்தியும், அலுவலில் ஒளிவு மறைவு வைத்துக் கொள் ளாமல், வேலை தொடர்பான அனைத்தையும், மதுவந் திக்குக் கற்றுக் கொடுத்தாள்!

''இவ்வளவு ஆர்வத்துடன் பயில்கிறாய். நாலு மாதம் கழித்து, நான் வரும்போது, இடத்தைக் காலி பண்ண முடியாது என்றுவிட மாட்டாயே? என்னால், முழு நேரமும் வீட்டில் இருக்க முடியாது! அவரும் வெளி நாட்டில் இருப்பதற்கு, அப்புறம் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்!'' என்றாள் அந்த சாந்தி!

''கவலை வேண்டாம். அங்கிளின் அனுமதி, நாலே மாதங்களுக்குத்தான். அதற்கு மேல், எனக்கு இந்த வேலை கிடையாது!'' என்றாள் மதுவந்தி!

வேறு பணி என்ன என்று, மனதுள் கற்பனை விரிந்தது.

'காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கைகொடுக்கிற' விதமாகத்தான் மதுவந்தி இந்தப்

பணியை எண்ணினாள்! அதனாலேயே, முழு ஈடுபாட்டுடனும் அதைப் பயின்றாள்.

வேலை முறையோடு சேர்த்து, ஞானசேகரன் தந்த புள்ளி விவரங்களைப் பார்க்கையில், மதுவந்திக்குப் பிரமிப்பாக இருந்தது!

விளையாட்டுப் போட்டிகளில், தடகளப் போட்டி என்று ஒன்று உண்டு! உயரம் தாண்டுதல், அகலத் தாண்டுதல், வேக ஓட்டம் எல்லாவற்றிலும் ஜெயிக்க வேண்டும்! அதே போல, சைதன்யனும், அகலக்கால் வைத்து, அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு வேகமாக வளர்ந்திருந்தான்!

தன் எலக்ட்ரானிக் இஞ்சினீயர் படிப்பை வைத்துக் கொண்டு, யாரிடமும் வேலை பார்க்கப் பிடிக்காமல், முன்பே 'ஞானா எலெக்ட்ரானிக்ஸ்' என்று தந்தையின் பெயரில், டீவி, ஏசி, ஃபிரிட்ஜ், ஹீட்டர் போன்ற பொருட்களை விற்கும் கடை ஒன்றைத் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தான். பராமரித்துப் பழுது பார்ப்பதையும், தன் நேரடிப் பொறுப்பில் ஏற்றிருந்தான். அதில் கிடைத்த நல்ல பெயரால், ஏற்கனவே, அவனது கடைசி சிறப்பாக வளர்ந்து கொண்டு தான் இருந்தது!

பெரிய பந்தாவாக இல்லை என்றாலும், இரட்டைப் படுக்கையறை வீடு, சின்னதாய் ஏசி கார் என்று, வசதிக்குக் குறைவில்லாத வாழ்க்கைதான். அதைப் பார்த்துவிட்டுத் தான், காதல் என்று வந்ததும் நின்றதும், கேசவன் மறுக்காமல் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தது!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நடந்திருக்க வேண்டிய திருமணம் என்று பெருமூச்சுடன் எண்ணியவள்



பிடிவாதமாக அதிலிருந்து மனதைச் சைதன்யனின் சாதனைக்குத் திருப்பினாள்!

அன்றைய ஒரு கடை, இப்போது மூன்று, நாலு தளங்களில், நகரின் முக்கியமான நாலு வர்த்தகப் பகுதிகளில், கம்பீரமாக நிமிர்ந்து நின்றது! விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த பொருட்களிலும், ஏகப்பட்ட தினுசுகள்! சின்னதிலிருந்து மிகப் பெரியது வரை, பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்புகளும், வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன!

இவற்றுள் பலவற்றுக்குத் தமிழ்நாடு முழுமைக்கும் விற்பனை உரிமையும் பெற்றிருந்தான்! பலதில், அந்தந்த ஆண்டுகளில் அதிக விற்பனை செய்தவன் என்று பரிசுகளும், பாராட்டும் பெற்றிருந்தான்!

"திட்டம், உழைப்பு, எல்லாம் அவனதுதான், மதுவந்தி! படித்த படிப்பைக் கொண்டு, 'டீலர்ஷிப் எடுக்க எண்ணிய பொருட்களின் தரத்தைத் துல்லியமாக நிர்ணயிக்க முடிந்தது என்பது. அவனது வெற்றிக்கு இன்னொரு காரணம்! ஆனால், என்னிடம் சொல்லாமல் செய்ய மாட்டான். அபூர்வமாக, நானும் ஐடியாக்கள் கொடுப்பேன்! இப்போதுகூடப் பெரிதாக ஓர் இடத்தைச் சொந்தமாக வாங்கி, இன்னொரு கிளையைத் தொடங்கலாம் என்ற திட்டம் வைத்திருக்கிறோம்! இரண்டு மூன்று இடங்களும், வந்திருக்கின்றன! போய், நேரில் பார்த்து முடிவு பண்ண வேண்டும்!"

ஞானசேகரன் இப்படியெல்லாம் மகனைப் பற்றிச் சொல்லச் சொல்ல, மதுவந்தியின் மனதுள் சைதன்யனிடம் அவள் கொண்டிருந்த நேசம் மேலும் மேலும் பொங்கியது!

எப்போதுமே இருந்த நேசம்தான் என்றபோதும், கிரகணம் பிடித்தது போலச் சிந்தாமணியின் பொய்யான

குற்றச்சாட்டு. அதை மறைக்க முயன்று கொண்டிருந்தது! இப்போது கிரகணம் விலகிய சூரியனாக அந்த அன்பு ஒளி வீசிப் பிரகாசிக்கலாயிற்று!

அவளாக மட்டும் யோசித்திருந்தால், கடைசியாகச் சந்தித்த அன்று, சைதன்யன் பேசிய பேச்சை நினைத்து, நினைத்து, மனம் சோர்ந்து, அவனோடான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை அடியோடு கைவிட்டிருப்பாள்!

ஆனால், மகனைப் பற்றி ஞானசேகரன் சொன்ன விதத்தில், அந்தக் கலக்கம் குறைந்து, மறைந்தும் போய் விடவே, அவள் மனதில் நம்பிக்கை துளிர் விட்டுத் துளிர் விட்டுப் பெருமரமாய் வளர்ந்து போயிற்று!

ஆனால், பத்து நாட்களில், தென் மாவட்டங்களில் தன் தொழில்துறைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வந்த சைதன்யன் நடந்து கொண்ட விதம், அந்த நம்பிக்கையை அடியோடு அழித்தது!




**சை**தன்யன் அன்று திரும்பி வருவான் என்று ஞானசேகரன் சொன்னதில் இருந்தே, மதுவந்திக்கு உள்ளே சற்றுப் படபடப்புதான்!

வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் படபடப்பது போல என்பார்களே, அது போன்ற படபடப்பு!



ஆனால், மனது முழுவதும் நிறைந்திருந்த நேசத்தினால், அவளைப் பார்க்கும் ஆவல் அதிகமாக இருந்ததால், அதுவும், அவளுக்கு இனிமையாகத்தான் இருந்தது!

அவன் வீட்டில், அன்று அவன் பேசிய கொடிய வார்த்தைகள், அவளுக்கு நினைவு வரத்தான் செய்தன! ஆனால், அவற்றின் பாதிப்புதான், இத்தனை நாட்களில் வெகுவாகக் குறைந்து போயிருந்தது!

ஞானசேகரன் வண்ணம் தீட்டியிருந்த விதத்தில், மூன்றாண்டு காலமாக உள்ளே அடக்கி வைத்திருந்த வேதனையின் பிரதிபலிப்பாக வெளிப்பட்ட குமுறல் அது! ஒரு தரம் வெளியே கொட்டி விட்டதால், அவனுள்ளும், அந்த வேகம் குறைந்திருக்கும், மீதம் இருப்பதைப் பேசிப் போக்கி விடலாம் என்று, அவரைப் போலவே, அவளும் கருதத் தொடங்கியிருந்தாள்!

அதனால், சைதன்யனின் வரவை, மிகவும் ஆவலாகவே, மதுவந்தி எதிர்பார்த்தாள் என்றே சொல்லலாம்!

சீக்கிரமாக வந்தால்தானே, மிச்சம் மீதி இருக்கும் தூசு தும்புகளையும், அதே அளவு சீக்கிரமாகக் களைய முடியும்?!

இப்படி எண்ணி, சைதன்யனின் வரவை அவள் ஆவலாக எதிர்பார்க்க சற்றும் எதிர்பாராமல், தனது அலுவலகத்தில் மதுவந்தியைப் பார்த்ததும் அவன் திகைத்தான்.

அவன் அலுவலகத்துக்குள் நுழையும்போது, ஞானசேகரன் கேட்டிருந்த ஒரு தகவல் பற்றித் தலைமைக் கணக்கரிடம் அவள் விசாரித்துக் கொண்டிருந்தாள்!

அவர் சொல்லச் சொல்ல, அவள் குறிப்பெடுத்தது, அவளுக்கு என்னவாகத் தோன்றியதோ, அருகில் வந்து,

"எல்லோரும் நல்லபடியாக ஒத்துழைக்கிறார்களா?" என்று விசாரித்தான்.

அவன் அருகில் வரவர, எல்லாரும் மரியாதையாக எழுவதைக் கண்டு திரும்பி, அவன் வருவதைப் பார்த் திருந்தவளுக்கு, சைதன்யன் அவளிடமே வந்து பேசவும் வியப்போடு மகிழ்ச்சியாகவும் இருந்தது!

வேலை விவரத்தை, ஞானசேகரன், மகனுக்குத் தெரி வித்து விட்டிருக்கிறார் என்று ஊகித்து, அவனது கேள்விக்கு, "ஆமாம்..." மகிழ்ச்சியோடு பதிலளித்தாள்!

"என்ன விவரம்?" என்று வாங்கிப் பார்த்துவிட்டு, "இது பற்றி இன்னும் துல்லியமான விவரங்கள் என் அறையில் இருக்கிறதே! என்னோடு வா. எடுத்துத் தருகிறேன்!" என்று அழைத்தான் அவன்.

அவளுக்குக் கணக்கர் கொடுத்த விவரமே போதும்! இவன் தனியே கூப்பிட்டு, அவளிடம் என்ன சொல்லப் போகிறான்?

ஒரு வேளை, அன்றைய அவசரப் பேச்சுக்கு வருத்தம் தெரிவிக்கப் போகிறானா?

ஏதேதோ கற்பனைகளுடன், சைதன்யனைப் பின் தொடர்ந்து சென்றால், அறைக்குள் சென்று, அந்த ஏசி அறையின் தானியங்கி கதவுகள் சாத்திக் கொண்டதுமே, அவன் ஆள் அடியோடு மாறி விட்டான்!

முகமும் கடுமையாக மாறி, "அலுவலகத்துக்குள்ளும் வேவு பார்க்க வந்து விட்டாயா? எல்லா விவரமும் சேகரித்து விட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். விட்டு விட்டோமே என்று ரொம்பவும் தோன்றுமே! எப்படியாவது, மறுபடியும்



பிடித்துவிட வேண்டும் என்றும்தான்! ஆனால், என்ன செய்வது? எனக்கு, உன் சுயரூபம் முழுசாகத் தெரிந்து போய் விட்டதே! அதனால், பயனற்ற உன் நடிப்பை மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு, இங்கிருந்து, வெளியேறுகிற வழியைப் பார்! போ!" என்று விரட்டினான்.

மதுவந்தி ரொம்பவே திகைத்துப் போனாள்.

அவள் என்னவோ நினைத்தால், அவன் என்னென்னவோ பேசுகிறானே! அவனது தப்பான அபிப்பிராயம், அணு வளவும் மாறவே இல்லை போலிருக்கிறதே!

மாறவும் இல்லை. வெறுப்பு குறையவுமில்லை! சொல்லப் போனால், பெருமளவு அதிகரித்திருப்பதாகத்தான் தோன்று கிறது மாறி விட்டிருக்கும் என்று நினைத்து, என்னென்ன மனக்கோட்டை கட்டிவிட்டாள்!

அவ்வளவு நேரமாக அவள் மனதில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த நம்பிக்கை, அவனது பேச்சில் சட்டென மடிந்து, முணுக்கென்று எரியும் முட்டை விளக்கின் அளவு ஒளி பரப்பவும் சக்தியற்று, இருண்டு போயிற்று!

எல்லாம் முடிந்ததா?

இனி என்ன செய்வது?

ஒன்றும் செய்யத் தோன்றாமல், அவள் திகைத்து நின்ற கோலமும் அவனுக்கு ஆத்திரமூட்டியது போலும்!

"எதற்காக, அப்படி விழித்துக் கொண்டு நிற்கிறாய்? இதையெல்லாம், அறியாத்தனம் என்று எண்ணி ஏமாந்த காலம், எப்போதோ முடிந்து போயிற்று! அதனால், உடனே நடையைக் கட்டு! இந்தக் கட்டிடத்துக்குள், இன்னொரு தரம் உன்னைப் பார்க்க நேர்ந்தால்... நேரக் கூடாது! அவ்வளவு

தான்! உடனே வெளியே போ!'' என்று அதிகாரக் குரலில் உத்தரவிட்டான்!

அவன் அத்துடன் நிறுத்தியிருக்கலாம்! ஆனால், அவளைக் குத்திக் குதறிவிடும் வெறி அவனுக்கு!

மிகுந்த ஏமாற்றத்துடன், மனம் ஒடிந்து திரும்பி, சோர்ந்து நடந்தவளைப் பார்த்து, 'வந்து விட்டாள், கண்ணை அகல விரித்துக் கொண்டு! வெட்கமின்றி இந்த நிறத்தில் உடையும் சிங்காரமும் வேறு! இதைப் பார்த்து மயங்கி விடுவேனாக்கும்? சே! பார்க்கவே வெறுப்பாக இருக்கிறது! சீக்கிரமாகப் போய்த் தொலை!' என்று தனக்குத்தானே முணுமுணுப்பது போலத் தொடங்கி, மேலும் உதாசீனமாகப் பேசினான்.

அவளை வருத்தவென்றே பேசிய பேச்சு!

என்னவோ, அளவு மீறி அலங்கரித்துக் கொண்டு, அலுக்கி பிலுக்கி, மட்ட ரகமாக அவனை மயக்க முயல்வது போலவும், அதற்காகவே அவள் அங்கே வந்திருப்பது போலவும்... அவள் என்ன, அப்படி வருகிறவளா?

மனம் வேதனையோடு எண்ணமிடும்போதே, சட்டென அவளுக்கு உறைத்தது!

உண்மை, அப்படி இல்லையே!

அவளாக இங்கே, எங்கே வந்தாள்? இல்லவே இல்லையே!

அவனுடைய தந்தை, இந்த நிறுவனத்தினுடைய சேர்மன், தலைமைப் பீடத்தில் இருப்பவர் அழைத்து, அவருடைய செயலாளராக அல்லவா, மதுவந்தி இந்தக் கட்டிடத்துக்குள்ளே காலடி எடுத்து வைத்திருப்பது?

அதுவும், அவர் வற்புறுத்தி அழைத்ததால்தானே?



தலைமைப் பொறுப்பில் இருப்பவர், பதவி கொடுத்து அழைத்து வந்தவளை, இவன் என்ன விரட்டுவது? அவளும்தான், எதற்காகப் புழுவாகச் சுருண்டு ஓடுவது?

நின்று, நிமிர்ந்து, அவனைத் திரும்பிப் பார்த்தாள் மதுவந்தி.

என்ன நிமிர்வு என்று எரிச்சல் வந்தது, அவனுக்கு.

''நான் உன்னைப் போகச் சொன்னேன்! நிற்கச் சொல்ல வில்லை!'' என்றான் அதட்டலாக.

''அதுதான் விஷயமே!'' என்றாள் அவள், குரலில் ஓர் அழுத்தத்துடன். ''நீங்கள் சொல்லி, நான் நிற்கவோ, போகவோ தேவையில்லை...''

''என்னது? இங்கே நான் யார் என்று தெரியும் அல்லவா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் சைதன்யன். ''நான் சொல்லாமல், வேறு யார் சொல்வதாம்?'' என்றபோது, குரலில் ஏளனமும் விரவியிருந்தது!

''உங்கள் அப்பா சொல்ல வேண்டும்!'' என்றாள் அவள் சாவதானமாக! ''அவர்தானே இங்கே சேர்மன்! தலை இருக்க வால் ஆடக்கூடாது, சார்! அத்தோடு, இந்த லெமன் மஞ்சள், எனக்கும் பிடித்த நிறம்! இந்த நிறத்தில் மட்டுமல்ல, எந்த நிறத்திலுமே நான் உடையணிவதும், அதற்கேற்ப அலங்காரம் செய்வதும், என் விருப்பம்! அதைப் பற்றிப் பேச, அன்னியருக்கு அதிகாரம் கிடையாது! இதையும் கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றவள், அதற்கு மேல் நில்லாமல் வேகமாக அங்கிருந்து வெளியேறி விட்டாள்.

ஏனெனில், அங்கேயே நின்று, அவனோடு வார்த்தைக்கு வார்த்தை போராட, அவளுக்குத் தெம்பு இல்லை!

முக்கியமாக, அவளது கால்களுக்கு!

முழங்கால்கள் நடுங்குவதை உணர்ந்தவளுக்குப் பயம்! அதற்கு மேல் நின்றால், எங்கே கால்கள் மடிந்து, அவன் முன்னேயே விழுந்து கேவலப்பட்டு விடுவோமோ என்ற பயம் வந்துவிடவே, அதற்கு மேல் நின்று, அவனோடு வார்த்தையாடாமல், விரைந்தோடிச் சென்று விட்டாள்!

ஆத்திரத்துடன், கதவை முறைத்தான் அவன்.

மதுவந்தி விஷயத்தை, சைதன்யன் அத்தோடு விட்டு விடவில்லை!

தந்தையிடம் சென்று, அவளைப் பற்றிப் பேசினான்.

"அவள் யார், எப்படிப்பட்டவள் என்று எல்லாம் தெரிந் திருந்தும், அவளை நம் தொழில் இடத்துக்குள் வரவிட்டால் என்ன அர்த்தம்? அவளானால், பெரிதாக உரிமை பேசுகிறாள்! அவளை வெளியேற்ற, இங்கே உங்களுக்கு மட்டும்தான் உரிமை உண்டாம்!" என்று எரிச்சல் பட்டான்!

"அப்படியா சொன்னாள்?!" என்று ஆச்சரியப்பட்டார் ஞானசேகரன்!

"ஆமாம்ப்பா! என்ன திமிர் பாருங்கள்!"

"நான் அதைச் சொல்லவில்லை! உன்னிடம் நேருக்கு நேர் திருப்பிக் கொடுக்க, அவளுக்குத் தைரியம் இராது என்று நினைத்தேன்! ஆனால், சரியென்று பட்டதைத் துணிந்து சொல்லியிருக்கிறாளே!" என்று வியந்தார் அவர்!

"என்னப்பா சொல்லுகிறீர்கள்? அவள் என்னிடம் பேசிய விதம், சரியா?" என்று கண்கள் இடுங்கக் கேட்டான் மைந்தன்!



"பேசிய விதம்... பொதுவாகப் பார்த்தால், அது அவ் வளவு சரியில்லைதான் ஆனால், ஒரு நிறுவனத்தின் தலைவர் பார்த்து நியமித்த செயலாளரை, மகனே என் றாலும், வெளியே போகச் சொல்லுவது சரியில்லை தானேப்பா?" என்று அவனிடம் கேட்டார் அவர்!

"நினைத்தேன்!" என்றான் மகன். "இப்படி ஏதோ வில் லங்கம் இருக்கக் கூடும் என்றுதான் எனக்குத் தோன்றியது! மற்றபடி அன்று, அப்படி ஓட்டம் பிடித்தவள், இன்று, உரக்க யோசிப்பது போலக் கூறிவிட்டு, "செயலாளர் என்றீர்கள், இல்லையா? திடீரென்று, புதிதாக ஒரு செயலாளருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? சாந்தி என்ன ஆனாள்?" என்று தந்தையிடம் விசாரித்தான்.

"அவளுக்கு ஊரில் ஏதோ வேலை வந்து விட்டதாம்! மாமியார், மாமனாருக்கு வசதியாகக் கிராமத்து வீட்டை, மராமத்து செய்து கொடுத்துவிட்டு வருவதாகப் போயிருக் கிறாள்! பாரேன் பையா, இப்படி ஒருமகள் வீட்டுக்கு வந்து, மாமனாருக்காகப் பொறுப்பெடுத்து வேலை செய்வதைப் பற்றி, நினைக்கவே மிகவும் சந்தோஷமாக இருக் கிறதில்லையாப்பா?" என்று வாழைப்பழத்துக்குள் ஊசி நுழைத்தார் ஞானசேகரன்.

"வயிற்றுக்குச் சாப்பாடுகூடப் போடாமல், மாமனாரை வீட்டை விட்டே துரத்தும் மருமகள்தான் இப்போது பெருகி விட்டார்களாம்! கணக்கெடுப்பு சொல்கிறது, என்கிறார்கள்!" என்று கோலத்துக்குள் புகுந்தான் மகன்.

மேற்கொண்டு மருமகள் பற்றிப் பேச இடம் கொடாமல், "மதுவந்தி செயலாளர் ஆனது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அதை விட்டுத் தேவையற்ற ஊர்க்கதை

நமக்கு எதற்கு? அதைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்று எடுத்துக் கொடுத்தான்.

மகனிடம் என்ன மாதிரி சொல்வது என்று அவர் திட்ட மிடுகையில், ''ஒருவேளை, மராமத்து வேலைதான் முக் கியம் என்று சாந்தி வேலையை விட்டுப் போய் விட்டாளா? ஆனால், அவள் அப்படிப்பட்டவள் இல்லையே!'' என்று, சந்தேகக் குரலில் அவனே தொடர்ந்து வினவினான்!

''ஊரில் வேலை முடிந்து திரும்பி வருவதற்கு, நான்கைந்து மாதங்கள் பிடிக்கும், லீவு தர முடியுமா என்று கேட்டாள்! மாமனார் மாமியாருக்காக, ஒன்று செய்ய எண்ணுகிற பெண்! மாட்டேன் என்று சொல்ல, எனக்கு மனம் வரவில்லை! அதுவரை, ஆளே இல்லாமல் இருப்பதும் முடியாது! தற்செயலாக மதுவைப் பார்த்தேன்! முக்கியமான பதவி! யாரோ தெரியாத ஆட்களை வைப்பதைவிட, அவளையே வரச் சொல்லி விட்டேன்!'' என்று முடித்தார் அவர்!

அவரைக் கீழ்க் கண்ணால் பார்த்து, ''தெரியாத கன வானுக்குத் தெரிந்த திருடன் மேல் என்பார்களே, அது போலவா?'' என்று சற்று உரத்த குரலில் கேட்டுவிட்டு, அறையினுள் வந்து கொண்டிருந்த மதுவந்தியை ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனான் சைதன்யன்!

வாடிய முகத்துடன் உள்ளே வந்த மதுவந்தி சோர்வுடன் அமர்ந்தாள்.

''என்னம்மா, பையனுக்கு நன்றாக ஒரு போடு போட்டாய் போல!'' என்றார் பாராட்டும் முகமாக.

''அதன் பலனாகத்தான், திருடன் பட்டம் தந்திருக்கிறார்!'' என்று அலுத்துக் கொண்டாள் அவள்.



''ஏதோ கோபத்தைக் காட்டும் வழி! வேறு என்ன எதிர்பார்க்கக் கூடும் என்று, நீயே சொல்லேன், பார்ப்போம்!''

''எதுவாக இருந்தாலும், இப்படிக் கடுமையாக அல்ல!''

''ஏன்?''

என்ன ஏன்? 'சேம் சைடு கோல்' போடுகிறாரா, என்ன? மகனை நேரில் பார்த்ததும், இவருக்கும் மனம் குழம்பு கிறதா? இருக்கிற வேதனைக்கு, அது ஒன்றுதான் பாக்கி!

அன்றைக்குப் பணத்தாசை என்றான், இன்று திருடன் என்கிறான்! அவருக்குத் தெரியாது என்றாலும், ஆள் மயக்கி என்றும், அவளைச் சொல்லியாயிற்று!

அடுத்து கொள்ளைக்காரி, கொலைகாரி என்று, பட்டியல் நீளும்! சைதன்யன் அப்படியெல்லாம் சொன்னாலும், பெற்ற பிள்ளையாயிற்றே. அந்தப் பிள்ளைப் பாசம் உந்த, அவன் ஏன் சொல்லக் கூடாது என்றுதான் இவரும் கேட்பார் போலும்!

வேண்டாம், வேண்டாம் என்றவளை, என்னென்னவோ சொல்லிக் கூட்டி வந்துவிட்டு, இப்போது மகன் பக்கம் சாய்கிறாரா?

சும்மாவே சைதன்யனின் பேச்சில், மனம் சோர்ந்திருந்த வளுக்கு, இப்போது சுருசுருவென்று எரிச்சலும் வந்தது!

இந்தக் கோபத்தை அடக்கினால், சுருண்டு போய்விடு வோம் என்று தோன்றவும், ''ஏன், நான் திருடியதை அவர் பார்த்தாராமா?'' என்று எரிச்சலுடன் பதிலுக்குக் காட்டமாகக் கேட்டாள் மதுவந்தி!

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''சைதன்யன் தப்பு செய்ததை, நேரில் பார்த்து விட்டுத்தான், நீ திருமணத்தை

நிறுத்தினாயா?'' என்று கேள்வியாலேயே, அவளுக்குப் பதில் கொடுத்தார் ஞானசேகரன்!

அடிபட்ட பறவையாகச் சுருண்டு விட்டாள் மதுவந்தி!

''இல்லையே அங்கிள்! இல்லவே இல்லையே! பார்க்கவே இல்லையே! ஆனால், சிந்தாவின் மீது, சிந்தா சொன்னால் அது நானே சொன்ன மாதிரிதான் எங்கள் வீட்டில், எனக்குமே, அப்படித்தான். என்னை நானே நம்பாதிருப்பது எப்படி? எங்கள் வீட்டில் பொய் சொல்லிப் பழக்கம் இல்லை, அங்கிள்! அதனால், அவள் பேச்சைச் சந்தேகப்படவே தோன்றாமல் போயிற்று...''

''ஆனாலும், செய்தது தப்புதான் இல்லையா? உன் அன்பில் அழுத்தம் இல்லை என்று அவன் நினைத்ததிலோ, இப்போது அதையே காரணமாகக் கொண்டு உன்னை நிராகரிக்க முயல்வதிலோ, என்ன குற்றம் காண முடியும், சொல்லு!''

முடியாதுதான்!

இவர் கொஞ்சம் நாசூக்காகச் சொல்லுகிறார்! அவன்தான், அவளுக்கு அன்பே இல்லை என்றே சொன்னானே! பணம் மட்டும்தான் குறி என்றும், அதற்காகவே வந்ததாகவும் கூட!

சோர்வுடன் அவரைப் பார்த்து, ''பின்னே ஏன் அங்கிள், இந்த முயற்சியெல்லாம்? உங்களுக்கே, அவரது நிராகரிப்பு நியாயம் என்று தோன்றினால், அப்படியே விட்டு விடுவது தானே சரியாகும்? நானும் இந்தப் பிரிவு வேதனையோடு வாழப் பழகி விட்டேன் தானே? என்னை இங்கே வர வழைத்து... வீணாக, எதற்கு இந்த அதிகப்படித் துன்பம்?'' என்றாள் மதுவந்தி, உள்ளிருந்த வலி உந்த.



''அவனைக் குற்றம் சொல்ல முடியாது என்றால், அவன் செய்வது எல்லாம் நியாயம் என்று அர்த்தமாகுமா, மதுவந்தி? உன் சகோதரியை நீ நம்பியது குற்றமல்லதான், ஆனால், அதுவே, சைதன்யனைக் குற்றவாளி ஆக்கியதே.. அது நியாயமில்லைதானே? அவனுக்கு, அது பெரிய அநியாயம் அல்லவா? ஆனால், அவனும்தான், என்னடி உளறல் இது என்று அதட்டிக் கேட்டிருக்கலாம்! நீ அதிர்ச்சியில் இருப்பதைப் புரிந்துகொள்ள, அவனுக்கும் தெரியவில்லை! அந்த வகையில், அவனும்...''

''என்ன அங்கிள், குழப்புகிறீர்கள்'' என்று சலித்தாள் அவள்.

''ஆமாம்மா! பெரும் குழப்பம்தான்! இருவரிடமும் தப்பு இருக்கிறது! ஆனால் இரண்டு பேர் மீதும், என்னால் தப்பு சொல்லவும் முடியவில்லை! தப்பு செய்யாதவர்கள் மீது, குற்றம் சுமத்தினால், அவர்களுக்குக் கோபம் வரும்! அந்தக் கோபமும் இருவருக்கும் இருக்கிறது என்பதால், இரு வருமே தப்பென்று அறிந்து செய்யாதவர்கள் என்பதும் தெளிவாகிறது! ஆனால், அவனது கோபத்தில், கூடக் கொஞ்சம் நியாயம் அதிகம்! அதனால், நீ சற்றுப் பொறுத்துப் போவதுதான் சரி என்பது என் கருத்து! அத்தோடு, முதல் தப்பு, உன்னுடையது! அதனால், அதைத் திருத்திச் சீர் செய்யவும், நீதானே அதிக முயற்சி எடுக்க வேண்டும் என்பது என் கருத்து! அதனால்...''

''நான் மாட்டேன் என்று சொல்ல வில்லையே! அவரை நம்பாதிருந்த அந்தப் பிழையை நேர் செய்ய, அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கவும் நான் தயார்! ஆனால், பாறையில் நெல் விளைக்க முடியாது என்று ஒரு பொன்

மொழி இருக்கிறது! நான் என்னதான் கெஞ்சினாலும், அவர் காது கொடுத்துக் கேட்பதாக இல்லையே, அங்கிள்! இந்த முயற்சியில் என்ன பயன்?''

''இருக்கிறது! சைதன்யனைப் பற்றி, உனக்குத் தெரியும் அல்லவா? எதிர்மறை உணர்ச்சிகளை வெளியில் காட்டுகிறவன் அல்ல அவன். உன்னிடம் கத்தியிருக்கிறான். அத்தோடு, விடாமல், பள்ளிப் பிள்ளை போல, என்னிடம் வந்து புகார் செய்தான் என்றால், அவனது மனம் அமைதி கெட்டு அலைபாயத் தொடங்கி விட்டது என்பது, என் கருத்து! உன்னால் ஏற்பட்ட பாதிப்பு!

முதல் தடவை, உன்னை வருந்த வைத்தான். ஆனால், கட்டுப்பாட்டை இழக்கவில்லை! ஆனால், அதுவே அவனை உள்ளூரப் பாதித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இப்போது, உள்ளேயே வந்திருப்பது. இன்னமும் தடுமாற வைத்திருக்க வேண்டும்! அதனால்தான், உன்னை விரட்ட முயற்சிக்கிறான்! இந்தத் தடுமாற்றம், பாதிப்பு எல்லாவற்றையுமே, நம் வெற்றியின் படிகளாகத்தான் நான் கருதுகிறேன்!'' என்றார் ஞானசேகரன்.

அவரைக் கூர்ந்து பார்த்தாள் மதுவந்தி.

அவளைத் திருமணம் செய்து கொண்டு, சைதன்யன் குடும்ப வாழ்வு வாழ வேண்டும் என்று, அவளைப் போலவே, அவரும் மிகவும் ஆசைப்படுகிறார்! அந்த ஆசையின் விளைவுதான் இந்த விளக்கம்!

இந்த விளக்கம், முழுக்க முழுக்கத் தவறாகவும் இருக்கக் கூடும்!

பரிதாபத்துடன் அவரைப் பார்த்தாள் மதுவந்தி!






மதுவந்தியின் பார்வையில் இருந்த பரிதாபமும், நிராசையும், ஞானசேகரனுக்குப் புரியாமலில்லை!

ஆனால், அதன் காரணத்தைக் கண்டு கொள்ள முடியாமல், ''என்னம்மா, அப்படிப் பார்க்கிறாய்?'' என்று வினவினார்.

''நீங்கள் சொன்னதெல்லாம், வெறும் ஊகம்தானே, அங்கிள்? அது சரியே என்று, உங்களுக்கு என்ன நிச்சயம்? ஆசை கொண்ட மனதின் பாதிப்பாகவும் இருக்கலாம் தானே?'' என்று மனதில் இருந்ததைத் தெரிவித்தாள் மதுவந்தி!

''இருக்கலாம்'' என்று, உடனே ஒத்துக் கொண்டார் அவர். ''ஆனால், நல்லதையே நினைப்போம் என்பதோடு, நமக்கு இருக்கும் ஒரே வழியும் இதுதானே, மது? வலிக்கிறதே என்று ஒதுங்கிப் போய், யாருக்கு என்ன லாபம், சொல்லு? சும்மா இருந்து விட்டோமே என்று, பிற்பாடு மறுகுவதற்கு, இந்த முயற்சி செய்து பார்த்து விடுவது மேல் அல்லவா?''

''அது சரிதான்!'' என்று, அவளும் ஒத்துக் கொண்டாள். ''ஆனால், பார்த்தாலே, பாய்ந்து குதறுகிறாரே, அங்கிள்! மோசமாக... தரக் குறைவாகப் பேசுகிறாரே! மனதுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது, அங்கிள்!''

''பட்டுத்தான் ஆக வேண்டும்!'' என்றார் அவர்!

அவள் திகைத்து நோக்கவும், "அன்று, அவனும் இதே துன்பம்தானே பட்டிருப்பான்? பட்ட துன்பத்தைத் திருப்பித் தருகிறான் என்றா அதை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்? உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிக்கிற மாதிரி என்று எண்ணிக்கொள்! ஆனால் ஒன்று யோசி! அவன் நினைத்தால், பிடிவாதமாக உன்னை வெளியேற்ற முடியாதா? பதவியைப் பொறுத்தவரையில், நான்தான் சேர்மன் என்றாலும், இதை முழுவதுமாக நடத்துவது, பையன் தானே? நீ நினைப்பது போல, அவன் உன்னை முழுமை யாக வெறுத்திருந்தால், உடனே வெளியேற்றியும் இருப்பான்! ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லையே! உன்னைத் தன் பார்வையில் வைத்திருக்கவே விரும்புகிறான் என்றுதானே, இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டும்?" என்றார் பெரியவர்.

"அங்கிள்...!" என்றாள் அவள் ஆவலும் பயமுமாக!" ஆனால் இதுவும் ஊகம்தானே?"

"ஆமாம்மா! ஆனால், சற்று முன் சொன்னது போல, நாம் நல்லதையே நினைப்போம்! தொடர்ந்து முயற்சிப்போம்!"

முயற்சிப்போம்!

சாதாரணமாகச் சொல்லிவிட்டார்!

ஆனால், என்ன முயற்சி செய்வது?

இதை அவரிடம் கேட்பதற்கே, அவளும் அசுசியாக இருக்க, எழுந்து, தன் வேலையைப் பார்க்கப் போனாள்.

ஆனால், மனதின் ஒரு பகுதி இதிலேயே உழன்றது!

முயற்சி என்றால், சினிமாக்களில் வருகிற மாதிரி, படு கவர்ச்சியாக உடையணிந்து, போஸ் கொடுத்து ஆட்டம் போடுவதா?



சாதாரண உடைக்கே இந்தப் பேச்சு பேசியவன், அப்புறம் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியே விடுவான்!

அணிந்திருந்த சல்வாரைக் குனிந்து பார்த்தாள் மதுவந்தி.

இந்த எலுமிச்சம்பழ நிறம், அவனுக்குப் பிடித்ததுதான்! அவனுக்குப் பிடிக்கவும், அது, அவளுக்கும், மிகவும் பிடித்துப் போயிற்று! அவன் இன்று வருகிறான் என்றதும், உள்ளூர ஆவலும் மகிழ்ச்சியுமாக, இந்த சல்வாரையும், பொருத்தமான அணிமணிகளையும் எடுத்து அணிந்தாள்! எப்போதுமே, அணிமணிகள் ஒன்றுக்கொன்று பொருந்தும் படியே, தேர்ந்தெடுத்து அணிவதும், அவளுக்குப் பழக்கமே!

எல்லோருமே, அப்படித்தானே அணிகிறார்கள்?

தன் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகத்தான் அவள் அந்த ஆடையை அணிந்தது! ஆனால், அவன் அதற்கு என்ன பலன் கிடைத்தது!

என்னவோ, கீழ்த்தரப் பெண்களைப் போல, அவனை மயக்குவதற்காக அவள் அலங்கரித்துக் கொண்டது மாதிரியல்லவா பேசிவிட்டான்!

இந்த சல்வார் செட்டுக்காக, சைதன்யன் அவளைத் தரமிறக்கிப் பேசியதில் இருந்து, எப்போது வீட்டுக்குப் போய் உடையை மாற்றுவோம் என்று இருந்தவளுக்கு, இப் போது ஞானசேகரனிடம் பேசிய பிறகு, வேறு தோன்றியது.

சைதன்யனுக்கு, அவளைப் பழி வாங்க வேண்டும்! அதைப் பழைய கற்காலம் போல, அடிதடியில் செய்ய முடியாது! 'கண்ணுக்குக் கண்., பல்லுக்குப் பல்' என்கிற மௌரியர் பழக்கம் போல, அவளது பாணியிலேயே திருப்பிக் கொடுக்கிறான்!

அத்தோடு, அவளது தோற்றம், அவனைப் பாதித்தும் இருக்கிறது! அதே சமயம் அவளை ஒரேயடியாக விரட்ட, அவனுக்கு மனமும் இல்லை!

எனவே, மேலும் இளகி விடாது இருப்பதற்கான தற்காப்பு முயற்சியாகவும், அதே சமயம் அவளை நோகடித்துப் பழி வாங்குவதற்காகவும், இப்படியெல்லாம் பேசுகிறான்!

இதுவும் ஊகம்தான்! என்றாலும், மனம் லேசாகி ஆறுதல் அடைவதை அவளால் தவிர்க்க முடியவில்லை!

மூத்த தலைமுறை! அனுபவஸ்தர்! பெரியவர் சொல்வதைப் போல, நல்லதையே நினைக்கலாமே!

மனமறிந்து, அவள் பிழை செய்யவில்லை! அவளும் வேதனைப்பட்டிருக்கிறாள்! அவளது நிலைமை, சைதன்யனுக்கு ஒரு நாள் புரியாமல் போகாது!

மனதில் அன்பு இருக்கும்போது, மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை., நடந்ததை விளக்கினாலே போதும் என்று, எதிலோ படித்த நினைவு, அவளுக்கு வந்தது!

அவள் விளக்கி விட்டாள்!

அவனது அடிபட்ட வலி, அதனால் விளைந்த ஆத்திரம் மறைந்து, அன்பு வலுப்பெறும்போது, அவனாகப் புரிந்து கொள்வான்! அவளைப் பார்க்கப் பார்க்க, அன்பும் வலுப் பெற்றே தீரும்!

அதுவரை, அவள், அவளாகவே இருந்தால் போதும்! அவன் அறிந்த, பழைய மதுவந்தியாகவே இருப்பதை, அவனுக்குக் காட்டிக் கொண்டால் போதும்!

மறுநாள் அலுவலகத்துக்கு அணிந்து செல்ல உடை தேர்ந்தெடுக்கையில், அவளுக்குச் சிறு குழப்பம்!



கொஞ்சம் பளிச்சென்று இராமல், மங்கிய நிறத்தில் எதையாவது அணிவது, நல்லதோ? சைதன்யன், அவளை மட்ட ரகமாகப் பேச இடம் கொடாத விதமாக?

ஆனால், அந்த மாதிரியாக இருக்கும் எழிலைக் குறைத்துக் காட்டும் விதமாக, அவளிடம் எதுவும் இருப்பது, கடினம்!

கடந்த மூன்று ஆண்டுகளாக, ஆடை, அணிமணிகளில் அவளுக்கு ஆர்வம் குறைந்திருந்த போதும், அன்னையும், சிந்தாவுமாக அதை ஈடுகட்டியிருந்தனர்! அவளுக்கு எது நன்றாக இருக்கும் என்று, சல்லடை போட்டுச் சலித்துதான் வாங்குவார்கள்!

"சித்தி, மதுவுக்கு நீங்கள் பழைய டிசைனில் வாங்கி விட்டீர்களே! நான் கல் ஒட்டி, அதைப் பிரமாதப்படுத்து கிறேன், பாருங்கள்!" என்று, சொல்வதோடன்றி, மணிக் கணக்கில் உட்கார்ந்து கல்லும் சம்கியும் ஒட்டி, மதுவந்தியின் ஆடைகளைச் சிந்தாமணி அழகு படுத்துவாள்!

அல்லது, வித்யாவைக் கடைக்கு மீண்டும் இழுத்துப் போய், மாற்றி வாங்க வைப்பாள்!

அவ்வளவு பிரியமான சகோதரி, இந்த மாதிரி அநியாயம் செய்வாள் என்று, எப்படி நினைப்பது? சைதன்யனிடம் சொன்னால், அவனை நம்பவில்லை என்று, அது மட்டும் தான் அவனுக்குத் தெரிகிறது! சிந்தாமணியை நம்பா திருப்பது எப்படி என்று புரியவில்லை!

பெருமூச்சுடன், கைக்கு அகப்பட்ட ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு கிளம்பினாள் அவள்!

அலுவலகத்துக்குப் போனால், அவளைப் பார்த்ததும், புருவம் உயர்த்தித் தோளைக் குலுக்கினான் சைதன்யன்!

''இது அலுவலகம், தாயே! வேலை செய்கிற இடம்! ஆள் மயக்கிகளுக்கு, இங்கே அவசியம் கிடையாது. அவர் களுக்கு இங்கே இடமும் கிடையாது! அப்படியே யாரும் மயக்க முயன்றாலும், மயங்குவதற்கு, இங்கே எந்த முட்டாளும் தயாரில்லை என்பது நினைவிருக்கட்டும்!'' என்றான் அடிக்குரலில், அழுத்தமாக!

அவள் பேச்சிழந்து நிற்கையில், ''அல்லது... வேறு எந்த முட்டாளேனும் ஏற்கனவே மாட்டியாயிற்றா?'' என்று, மேலும் தாக்கினான் அவன்.

தனிப்பட்ட செலவுக்கான வவுச்சர் ஒன்றில் கையெழுத்து வாங்கி வருமாறு, ஞானசேகரன், மதுவந்தியை, மகனிடம் அனுப்பியிருந்தார்!

மணியை அடித்தால், ஆபீஸ் பையன் வந்து, ஃபைலை வாங்கிப் போய் சைதன்யனிடம் கையெழுத்து வாங்கி வந்து தருவான்! அதுதான் பழக்கம்!

அப்புறம், மகன் கண்ணில், மதுவந்தி பட்டுக் கொண்டே இருப்பது எப்படி நடக்கும்? ஏதோ, அவரால் ஆனது, என்ற எண்ணம், அவருக்கு!

மதுவந்தியும் மறுக்கவில்லை! அவளுக்கும் அதே எண்ணம் என்பதோடு அவளுக்கே அவனைப் பார்க்கும் ஆவலும் கூட!

பக்கத்தில் நின்று பார்க்க வேண்டும். அவனோடு பேச வேண்டும்... என்றெல்லாம் ஆசை! இடைப்பட்ட மூன்று ஆண்டுகள், அவனைப் பாராமலே வாழ்ந்தது எப்படி என்று ஆச்சரியம்கூட!

ஃபைலை வாங்கிக் கட்டிக் கொண்டு, ஆசையாக வந்து நின்று, அவனிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டாள்!



கைக்குக் கிடைத்ததை எடுத்து, அணிந்தது தவிர, மதுவந்தி, அப்போது உடையில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. ஆனால் இப்போது குனிந்து பார்க்கையில், பளீரென்று மஜந்தா வண்ண உடையும், பொருத்தமாக அதில் ஆங்கில 'வி' வடிவத்தில் சிந்தாமணி செய்திருந்த அலங்கார வேலையும், கண்ணைப் பறித்தன!

அதிலும், அந்த ஆழமான 'வி' இன்னும் கவர்ச்சிகரமாகத் தோன்றி இருக்கும்! 'உனக்கு நல்ல அழகான இடுப்பு, மது! இந்தப் பூவேலை, அதை இன்னமும் எடுத்துக் காட்டும்!' என்று, சிந்தா தைத்தது!

முன்னே, இதே போன்ற அவளது ஆடைகளை, அணு அணுவாக ரசித்துப் பாராட்டி, மகிழ்ந்தவன்தானே? இப்போது, யார் யார் ரசிக்கிறார்களோ, பாராட்டுகிறார்களோ என்று மனம் கலங்குகிறது போல!

அதற்காக என்ன வார்த்தைதான் பேசுவது என்று இல்லையா?

முன்பாவது, அவுனைப் பிடிக்க வந்ததாகச் சொன்னான்! இப்போது, எவனையோ பிடித்தாயிற்றா என்று கேள்வி!

யாரைப் பார்த்து என்ன கேள்வி என்று ஆத்திரப்படும் போதே, இவன் வெறுத்து விட்டால், முக்காடிட்டு, மூலையில் ஒதுங்கிவிட வேண்டுமா என்று கோபமும் வந்தது!

வேறு எநத முட்டாளோவா? அவளை, இன்னொருத்தன் பாராட்டினால், அவன் முட்டாளாமா? தனக்கு வேண்டாம். ஆனால் யாரும் கண்ணால்கூடப் பார்க்கக் கூடாதாக்கும்?

வைக்கோல் போர் என்னவோ என்பார்களே! அதுபோல வயிற்றெரிச்சல்! பொறாமை!

'அழுக்காறு என ஒரு பாவி...' என்று வள்ளுவரே எழுதி வைத்திருக்கிறாரே! அது போல, உள்ளூரத் தவிக்கட்டும்! மனசுக்குள் உருட்டி, புரட்டட்டும்! நன்றாகத் திண்டாடு! இந்தப் பேச்சுக்கு, நீ பட வேண்டும்தானே?

உள்ளே கறுவியவாறே, சைதன்யன் கையெழுத்திட, ஃபைலில் பக்கம் திருப்பி வைத்துவிட்டு, "என் உடை, என் சொந்த விஷயம் என்று, ஏற்கனவே, உங்களிடம் சொல்லியிருக்கிறேன், சார்! மீண்டும் மூக்கை நீட்டுகிறீர்களே, எதற்காக சார்?" என்றாள் அவள், சற்று ஏளனமாக! "உடை படுவதற்கா?"

அவள் முகம் சிவப்பாயிற்று!

கையெழுத்திட்டு, ஃபைலை மூடிக் கொடுத்துவிட்டு, "பையனிடம் கொடுத்து அனுப்பியிருக்கலாமே! அழைத்ததும், அவன் வராதிருந்தான் என்றால் சொல்லு. நடவடிக்கை எடுத்து விடலாம்!" என்று முதலாளியாகக் கன அக்கறையோடு, விசாரித்தான் சைதன்யன்.

என்ன பதில் சொல்லுவாள்?

அவள் திகைக்கையிலேயே, "அவனை அழையாமல், அன்ன நடை நடந்த, நீயே ஃபைலை எடுத்து வந்ததற்கு, என் ஊகம் தவிர, வேறு காரணம் இருக்கிறதா?" என்று விசாரணையைத் தொடர்ந்தான் அவன்!

என்ன காரணம் என்று தான், அவள் எதைச் சொல்வாள்!

கால் கட்டை விரலை அழுத்தி, முகம் சிவப்பதைத் தடுக்க முயன்றபடி, "எ... எனக்குத் தெரியாது, சார்! பெரியவர் அனுப்பினார்... வந்தேன்! தேவையென்றால், நீங்கள் அவரையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று, அவனுடைய தந்தை மீதே பழியைப் போட்டாள் அவள்.



அதுவும் உண்மைதான். ஓரளவுக்கு!

அவர்தான், மகனின் கையெழுத்து வேண்டும் என்று, ஃபைலை அவளிடம் கொடுத்தது!

அவள், சைதன்யனைச் சந்திப்பதற்காக, அவர் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்புதான்!

ஆனால், அவள் அலுவலகப் பையனைக் கூப்பிட்டு, அவனிடம் அனுப்பியிருந்தால், அதற்கும், ஒன்றும் சொல்லியிருக்க மாட்டார்...

அவர், இன்னோரன்ன வார்த்தைகளைப் பயன்படுத்தாமலே, தனக்கிட்ட கட்டளையாகக் கருதி, அவளும், அதே ஆசையாகவே செயல்படுத்த விரும்பி வந்ததுதான்.

ஆனால், உண்மை என்பதால், அதைச் சைதன்யனிடம் ஒத்துக் கொண்டு விட முடியுமா? அப்புறம், இன்னும் இளப்பமாகி விடுமே!

அத்தோடு, பெற்றவரிடம் போய், தன் மட்டமான ஊகத்தையெல்லாம் வெளிப்படையாக ஒருவன் சொல்லி விடுவானா என்கிற தைரியத்தில்தான், மதுவந்தி, ஞானசேகரன் மீது பழி போட்டது!

ஆனால், அவன் சொன்ன பதிலில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"இன்னும் அரை மணி நேரத்தில், வந்து பார்க்கிறேன் என்று, அவரிடம் சொல்லு" என்று அவன் கூறவும், சில கணங்கள் திணறித் திண்டாடிப் போனாள் அவள்.

அப்படியென்றால் என்ன, அர்த்தம்? ஞானசேகரனிடம் எல்லாவற்றையும் சொல்லியே, விளக்கம் கேட்பானா? உடை பற்றிய குற்றச்சாட்டு உட்பட?

தாயில்லாத காரணத்தால், தந்தைக்கும் மகனுக்கும் இடையே நெருக்கம் அதிகம் உண்டு என்று மதுவந்திக்குத் தெரியும்!

அவர்களது காதலைப் பற்றிக்கூட, அவன்தான், அவனுடைய தந்தையிடம் முதலிலேயே சொன்னவன்! மதுவந்தியுடைய தந்தைக்கு விஷயம் தெரிய வந்ததே, ஞானசேகரனின் மூலமாகத்தான்!

இருவருக்குமே சிறு வயது, இந்தச் சின்ன வயதிலேயே எதற்குத் திருமணம் என்று தந்தை ஆட்சேபித்ததாகவும், மகன் மிகவும் ஆசைப்படுவது புரியவும், அதன்பின் உடனே சம்மதித்து, அவரே திருமணப் பேச்சைத் தொடங்க முன் வந்ததாகவும், சைதன்யன் முன்பு அவளிடம் சொல்லியிருக்கிறான்.

அந்த அளவுக்குத் தந்தை, மகனுக்கிடையே அன்னியோன்யம் இருந்தது! ஆனால், அதற்காக, மோகினி போல அலங்காரம் செய்து கொண்டு மயக்க முயற்சிக்கிறாள் என்றெல்லாம் சொல்வானா? அப்புறம், அவள் எப்படிப் பெரியவரைத் தலை நிமிர்ந்து பார்த்துப் பழகுவது?

என்னவென்று சொல்லப் போகிறானோ என்று மதுவந்தி கலங்கினால், சொன்ன நேரத்துக்குத் தந்தையின் அறைக்கு வந்த சைதன்யன், அவளைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை!

அவள் அந்த அறையில் இருக்கிறாள் என்று, கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை! அங்கே கிடந்த மேஜை, நாற்காலிகளைப் போல அவளும் ஒரு ஜடப் பொருள் என்பது போல அலட்சியப்படுத்தி விட்டு, நேராகத் தந்தையுடன் பேசத் தொடங்கினான்!



அவனுக்காக, அவள் எழுந்து நின்றதை, அவன் லட்சியமும் செய்யவில்லை!

வேண்டும் என்று செய்கிறான்., இதற்கெல்லாம் வருத்தப் படக்கூடாது., அவனது ஒவ்வொரு செயலுக்கும், பல்வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்டிருந்தால், வேறு எதற்கும் நேரமிராது என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டு மதுவந்தி, ஞானசேகரனைப் பார்த்தாள்!

மகன் செயலுக்குப் பரிகாரம் செய்கிறவர் போல, "உட்காரம்மா! முக்கியமான விஷயம் பேசப் போகிறோம்! கவனித்துக் கேள்! நல்லதாக உனக்கு ஏதாவது ஐடியா தோன்றினால், அதையும் சொல்லு!" என்றார் அவர்!

ஏளனமாக உதட்டைப் பிதுக்கியது தவிர, சைதன்யனும், மறுப்பேதும் சொல்லவில்லை!

பேசிய விஷயம், மேற்கொண்டு தொழிலை விரிவு படுத்துவதுதான்!

இப்போது இருக்கும் நான்கு கிளைகள் போக, இன்னொன்று தொடங்குவது பற்றிய பேச்சு!

இந்த நான்கின் போதும் இல்லாதபடி, இப்போது இடத்தை வாங்கி வசதிக்கேற்றபடி கட்டி, அதில் கடையை வைக்கலாம் என்று ஒரு திட்டம் தோன்றியிருந்தது! அதற்கு ஏற்ற சில இடங்கள் பற்றிப் பேசுவதற்காக, சைதன்யன் வந்திருந்தான்!

அவளை வெளியே போகச் சொல்லாமல் அவன் சும்மா இருந்தது. மதுவந்திக்கு ஆச்சரியமே!

ஆனால், அதன் காரணம் விரைவிலேயே தெரிந்தது!

அவன் பார்த்து வைத்திருந்த சில இடங்களின் அளவையும், விலையையும் ஒரு முறைக்கு, இரு தரமாக அவன் எடுத்துச் சொல்லவுமே, அவளுக்குப் புரிந்து போயிற்று!

எவ்வளவுக்கு உயர்ந்து விட்டான் என்று, அவளுக்கு எடுத்துக் காட்டுகிறானாம்! இவனைப் போய், அன்று கை நழுவவிட்டு விட்டோமே என்று, அவள் மறுக வேண்டுமாம்! சிந்தாவின் பொய்க் குற்றச்சாட்டு மட்டுமே மதுவந்தி பிரிந்ததின் காரணம் என்பதை, அவன் ஒத்துக் கொள்ளப் போவதாகவே இல்லை!

பணத்தாசையால், அவனைவிடப் பெரிய நிலையில், இருப்பவன் தன் கணவனாகத் தகுந்தவன் என்று எண்ணி, அவனைக் கழற்றி விட்டு விட்டதாகவேக் கருதுகிறான்!

இவன் இப்படித் தொழிலில் வெற்றி அடையாமல் தோற்றிருந்தால் தன்னை நிரூபிப்பது இலகுவாக இருந்திருக்குமே என்று, ஒரு கணம் தோன்றிற்று மதுவந்திக்கு!

சேச்சே! அசுர உழைப்பு உழைத்து உயர்ந்ததை, இப்படி நினைக்கக் கூடாது என்று தன்னையே கடிந்து கொண்டு, மேலே பேச்சைக் கவனித்தாள் அவள்!

நாலு இடங்களின் நிறை குறைகளைப் பற்றி, இருவருமாக அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர்! ஞானசேகரன் ஒரு தடவை சொன்னது போலப் பெரும்பான்மைப் பேச்சு, சைதன்யனுடையதாகவே இருந்தது!

அனைத்து இடங்களைப் பற்றிய விவரங்கள் தெளிவானதும், "நீ என்ன மது, சொல்கிறாய்? இவற்றுள் எது மேல்?" என்று திடுமென மதுவந்தியிடம் அபிப்பிராயம் கேட்டார் ஞானசேகரன்!



ஒரு கணம் திணறிப் போனாள் அவள்!

மெல்ல சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால், சைதன்யனின் முகத்தில் ஏளனம் பரவியிருந்தது! அவள் ஏதாவது உளறுவாள் என்று கூறு கிழிக்கத் தயாராகக் காத்திருக்கிறான்!

இவள், அவனது கருத்தை மறுத்துப் பேசினால், இன்னமும் வெறுத்துவிட மாட்டானா?

திகைப்பை ஒதுக்கி, வேகமாக யோசித்து, "நான் சொன்னால், தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டீர்களே, அங்கிள்?" என்று மெல்லப் பீடிகையோடு தொடங்கினாள் மதுவந்தி!

## 8



மதுவந்தியின் கேள்வி, அங்கிருந்த இரு ஆண்களையும் சட்டெனத் திரும்ப வைத்தது!

என்ன உளறப் போகிறாளோ என்பது போலச் சிறு எரிச்சலும், இதில் இவளுக்கு என்ன தெரிய முடியும் என்ற எண்ணமுமாக, எரிச்சலோடு ஏளனத்தையும் விரவி, சைதன்யன் நோக்கினான்!

"தப்பாக எடுப்பானேன்? நான்தான் கேட்கிறேன், சொல்லு!" என்று ஊக்கினார் பெரியவர்!

"அங்கிள், இதுவரை, தொடங்கிய நான்கிலும், ஏற்கனவே கட்டப்பட்டிருந்த இடத்தை வாடகைக்கு எடுத்து, உள்ளே கொஞ்சம் மாற்றி அமைத்து, அப்புறமாகக்

கடையைத் தொடங்கியிருக்கிறீர்கள்! வெற்றியாகத்தானே முடிந்திருக்கிறது? இப்போதும், அதையே கடைப்பிடித்தால் என்ன? எதற்காகப் புதிதாக இடமே வாங்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''இதுவரை இப்படி மொத்தமாகக் கொடுத்து வாங்குவதற்கான பணம் புரட்டுவது இலகுவாக இருந்தது இல்லை! இப்போது, நிலைமை அப்படி அல்ல! அதாவது, விலை கொடுத்து இடத்தை வாங்குகிற அளவுக்கு, நாம் உயர்ந்திருக்கிறோம்! அதனால், இன்றைய நிலைமையைப் பயன்படுத்தி, இடத்தை முதலிலேயே வாங்கி விடுவது நல்லது என்று நினைத்தேன்! ஆனால், இதில் உனக்கு ஆட்சேபனை இருப்பதாகத் தெரிகிறதே...'' என்று கவலை காட்டிக் கேட்டான் சைதன்யன்.

என்னவோ, அவளது ஆட்சேபனைக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப் போவது போல! அவள் ஆட்சேபிக்கிறாளே என்று கலங்குவது போல! எல்லாம் நடிப்பு! நடிப்பு என்று தெளிவாகக் காட்டிக் கொண்டே நடிப்பது! அவ்வளவு இளக்காரம்!

ஆனால், நினைத்ததைச் சொல்லாதிருக்க அவளால் முடியவில்லை!

அவன் புறம் இருந்து அடியோடு திரும்பி நின்று கொண்டு, ''பாருங்கள் அங்கிள், நீங்கள் புதிதாக ஓர் இடத்தை வாங்கி அதில் வேண்டியவாறு கட்டி முடித்து அதில் அடுத்த 'ஷோ ரூ'மைத் திறப்பது என்றால், அதற்குக் குறைந்தது ஓர் ஆண்டு காலம் பிடிக்கும்! ஓரிரு மாதங்கள் முன்னே... பெரும்பாலும் பின்னேயும் ஆகக் கூடும்! அவ்வளவு காலமும், உங்கள் பணம் பெரும் தொகை,



அதில் முடங்கிக் கிடக்கும்! கூடவே, கட்டடம் கட்டும்போது, தொழிலில் முழுக் கவனம் செலுத்துவது கடினம்! இப்போது நகரத்தில் பல பெரிய 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்'கள் இருக்கின்றன! புதியதாகவும் கட்டப்பட்டு வருகின்றன. எல்லாமே மக்கள் எளிதாக வந்து போகக் கூடிய இடங்களில் இருக்கின்றன. இவற்றுக்கு, மக்கள் வந்து போய்ப் பழகியும் விட்டார்கள்! அத்தோடு, அவர்களே விளம்பரமும் செய்கிறார்கள்! இவைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்தால், இரண்டே மாதங்களில், விற்பனையைத் தொடங்கி விடலாமே!'' என்றாள் மதுவந்தி!

''அந்த இடங்களில், நமக்குத் தேவையான அளவு இடத்துக்கு வாடகை என்னவென்று, உங்கள் செயலாளருக்குக் கொஞ்சமாவது ஐடியா இருக்கிறதா என்று கேளுங்கள், அப்பா! அத்தோடு, பகடி, முன் பணம் என்று, அது வேறு இருக்கிறது!''

மதுவந்தியும், பெரியவருக்கே பதில் சொன்னாள்!

''நிச்சயமாக இருக்கிறது! எப்படியும், இடத்தைச் சொந்தமாக வாங்குவதைக் காட்டிலும், மிகமிகக் குறைவாகவே பகடி, முன் பணத்துக்கு ஆகும்! அப்புறம் வாடகை! இடம் வாங்கச் செலவு செய்யும் பணத்திற்கான வட்டி வீதத்தை விட, வாடகை கொஞ்சம் கூடுதலாக ஆகக் கூடும்! அத்தோடு, இந்த காம்ப்ளக்ஸ்கள் எல்லாவற்றிலும், ஒரே மாதிரியாக வாடகையை வாங்குவது இல்லை. அங்கிள்! பில்லில் குறிப்பிட்ட சதவீதம் என்று வாங்குவதும் உண்டு! அப்படிக் கொடுக்கும்போது, லாபத்தில் ஒரு பங்கு மட்டும் தான் குறையும்! உங்கள் புதிய பொருட்களுக்கு, உங்களுக்கு வரும் கமிஷன் எவ்வளவு என்று உங்களுக்கே தெரியும்!

மற்றதிலும் விற்க விற்க, போனஸ் அது இதென்று எவ்வளவோ வரும்! அங்கிள், நான் மேல் படிப்பாக தொழில் நிர்வாகம் பற்றித்தான் படித்தேன். இதையெல்லாம், புராஜெக்டில் செய்தும் இருக்கிறேன்! அதனால் சொன்னேன். இடத்தை வாங்கிப் போட்டால், 'ரியல் எஸ்டேட்' மதிப்பு கூடலாம்! ஆனால், உங்கள் விற்பனைக் கணக்கைப் பார்க்கும் போது, அதிலேயே, அதிகப் பணம் போட்டால், வருமானம் பயங்கரமாகக் கூடும் என்பது என் கணிப்பு! ஆனால் இதெல்லாம் என் கருத்துக்கள்தான், அங்கிள்! தோன்றியதைச் சொல்லிவிட்டேன்! அதுவும் நீங்கள் கேட்டதால்தான்! தவறாக இருந்தால், மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்று உணர்ச்சியற்ற குரலில் மடமடவென்று கூறி முடித்தாள் அவள்.

''அதும்மா...'' என்று மகன் என்ன சொல்லுவானோ என்று, ஞானசேகரன் யோசனையோடு அவனைப் பார்த்த போது, அதிசயிக்கத்தக்க விதமாக, ''மதுவந்தி சொல்லுவது சரியாகத்தான் தோன்றுகிறது. அப்பா!'' என்றான் சைதன்யன்!

சட்டென மதுவந்தியின் கண்களில் நீர் திரையிட்டது!

இவன்தான், அவள் அறிந்த சைதன்யன்! தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்தான் என்கிற மூர்க்கத்தனம், அவனுக்கு இருந்தது கிடையாது!

'சால்புக்குக் கட்டளை யாதெனில், தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்' என்று வள்ளுவர் சொன்னது போல, அவனது கருத்து தவறு என்று தெரிந்தால், யாரிடமும், அதைக் கௌரவம் பாராமல் ஒத்துக் கொள்ளுவான்! சொல்லுகிறவர், தனக்குப் பலபடிகள் கீழ் நிலையில் வேலை செய்கிறவர், வயது குறைவு என்றெல்லாம். தயங்குவதே கிடையாது!



இப்போது, அவளது கருத்தை ஒத்துக் கொண்டது போல!

இதைப்போல, சொந்த வாழ்விலும், அவளது விளக்கத்தை அவன் ஏற்றால், எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆனால், அவன் அதைப் பார்க்கும் விதமே வேறாக இருக்கிறதே!

பெருமூச்சை அவள் அடக்க முயற்சிக்கையிலேயே, 'ரியல் எஸ்டேட்' பற்றியும், மதுவந்தி சொன்னது சரியே! நான், அதற்காகத்தான் இடத்தை வாங்கிவிட நினைத்தேன்... ஆனால், உங்கள் செயலாளர் சொல்வது போலச் செய்தால், கடையை ரொம்பப் பெரிதாக வைக்கலாம்! கஸ்டமர்களைப் பிரமிக்க வைக்கும் அளவு பிரமாண்டமாய் வைத்தால், விற்பனையிலும் பணம் கொட்டும்! அப்போது, முதல் பணத்திலும் மீதி இருக்கும். அந்த மீதியோடு, பாங்கில் கொஞ்சம் கடனையும் வாங்கி, மற்ற கடைகள் இருக்கும் இடங்களில் எதையாவது வாங்க முயற்சிக்கலாம்!'' என்று சைதன்யன் மேலே பேச, அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது!

அவளது கருத்துக்களை ஏற்றிருக்கிறானே!

அந்த மகிழ்ச்சியில், 'மதுவந்தி' மீண்டும் 'செயலாளர்' ஆனதுகூட, அவளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை!

இந்த அளவுக்கு வந்தபின், ஞானசேகரன் விடுவாரா?

''இது பற்றிப் படித்தே இருக்கிறாள்! இடம் பார்க்கச் செல்லும் போது, மதுவந்தியையும், உடன் கூட்டிப் போ, மகனே! அது பற்றியும் நல்ல ஐடியா ஏதாவது சொல்லுவாள்!'' என்று மகனிடம் சிபாரிசு செய்தார்!

சைதன்யனுக்கும் அதே எண்ணம் இருந்ததோ, என்னவோ, அவனும் மறுக்கவில்லை!

இந்த விதமாகத்தான், மதுவந்தி, சைதன்யனோடு வெளியே செல்லத் தொடங்கியது!

அவன் கடுமையாக எதுவும் பேசுவானோ என்று அவளுக்கு முதலில் சற்றுத் தயக்கம்தான்!

ஆனால், ''பார்க்கப் பார்க்கத்தான், பழகு நினைவு வரும்., இந்த மாதிரிப் பேசப் பேச என் பையனுக்கு உன் அருமையும் புரியும்!'' என்றார் ஞானசேகரன்.

ஆனால், ஆண் பெண் பாகுபாடின்றி, எண்ணமும் உணர்வும், எல்லோருக்கும் ஒன்றுதானே? அவளுக்கும் பழகு நினைவு வருமல்லவா? வந்தது!

அவ்வப்போது, இடைப்பட்ட மூன்று ஆண்டுகள் இல்லவே, இல்லாதது போன்ற உணர்வில் அவனை ஒட்டி நடக்கத் தோன்றும்!

ஆனால், அவனது கடுமையான வார்த்தைகளை மறப்பதும், அப்படி ஒன்றும் எளிதல்லவே!

தன்னை மறந்து, அவனை நெருங்கினாள் என்றாள், இருக்கவே இருக்கிறது, அவனது ஏளனப் பார்வை!

அவன் முகம் மாறுவது போலத் தோன்றும்போதே, தன்னை அறியாமல், அவனை விட்டு, இரண்டெட்டு தள்ளிப் போய் விடுவாள் அவள்!

நல்ல வேளையாக, அடுத்தவர் முன்னிலையில், சைதன்யன் அதிகப்படியாக எதையும் சொல்வது இல்லை! சொந்த விஷயமும் பேசுவதே கிடையாது! அலுவலகத்தில் முதல் நாள் பார்த்தபோதும், தனியாகக் கூப்பிட்டுத்தானே, வெளியேறச் சொன்னான்! அந்த அளவுக்கு மற்றவர் முன்னிலையில், மட்டு மரியாதையோடு பழகினான்!

அலுவலகத்திலிருந்து கிளம்புகையில், காரிலும், அலுவலகத்தைச் சேர்ந்த காரோட்டியே காரை ஓட்டியதால்,



அவனது சொல்லம்புகளில் இருந்து, அவள் தப்பினாள் என்று சொல்லலாம்!

ஆனால், இப்படிச் சைதன்யனோடு வெளியே சென்று வந்தது, அவனை நெருங்குவதற்கு, நல்ல வாய்ப்பை மட்டுமின்றி, அதற்கான துணிச்சலையும் அவளுக்குத் தந்தது!

அன்று, புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஒரு 'ஷாப்பிங் காம்ப்ளக்'சில் இரண்டாவது தளத்தை, இருவருமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

நகரில், கிட்டத்தட்ட, அவர்கள் விரும்பிய மாதிரியான மையப் பகுதி அது! இரண்டாவது தளத்தில், விரும்பிய இடத்தை எடுத்துக் கொள்ளலாம் என்கிற நிலை!

எஸ்கலேட்டரைப் பார்த்தாற்போல, அதன் எதிரில், பார்வையில் இருப்பதைப் போல அமைந்திருந்த இடம், மற்றதற்கு மேல் என்றாள் அவள்!

எஸ்கலேட்டரில் மேலே வந்ததுமே, எதிரே பெரியதாக இருக்கும் கடைக்குள் நுழையத் தானாகத் தோன்றும் என்றாள் மதுவந்தி!

ஆனால், சைதன்யன் 'லி∴ப்ட்'டையும் பார்க்க வேண்டும் என்றான். லி∴ப்ட் பகுதி பெரியதாக இருந்தது. மொத்த மொத்தமாக மக்கள் வருவதாக இருந்தால், அங்கேயும், அவள் கூறிய அதே பலன் இருக்கும்தானே?

அவன் சொன்னது போல, எப்போதும் இயங்கத் தயாராக, அங்கே வரிசையாக மூன்று லி∴ப்ட்கள் இருந்தன. கூட்ட நேரத்தில் மூன்றுமே இயங்கலாம்!

லி∴ப்டை விட்டு வெளியே வந்ததுமே கண்ணில் படுகிற மாதிரி இருக்கிறதா என்று, மூன்றிலுமே சென்று பார்த்து

விடலாம் என்று சைதன்யன் சொன்னதற்கிணங்க, இரண்டாவது லிஃப்டில் மேலேறிச் செல்லும் போதுதான் மதுவந்தி அதைக் கவனித்தாள்!

அந்த லிஃப்டின் உட்புறத்தின் ஒரு பக்கம் முழுவதும், நல்ல உயர்ரக முகம் பார்க்கும் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்தது!

ஆரஞ்சும் பச்சையும் அலை அலையாகச் செல்வது போன்ற அமைப்புடைய வண்ண சல்வாரில், அங்கங்கே கல் ஒட்டிச் சிந்தா செய்திருந்த வேலை, அணிந்திருக்கும் போது எப்படித் தெரிகிறது என்று, தன்னைப் பார்க்கத்தான், மதுவந்தி கண்ணாடியைப் பார்த்தாள்.

ஆனால், அவளது பிம்பத்தைச் சைதன்யனும் பார்த்துக் கொண்டிருப்பதை அப்போதுதான் அவள் கவனித்தாள்! கண்ணாடிக்குள்!

அதுவும், அவன் யாரோ போலச் சும்மாப் பார்க்கவில்லை! சமீபத்தில் வழக்கம் போல, அவனது பார்வையில் வெறுப்பு, கோபம், ஏளனம் போலவும் எதுவும் இல்லை! நேர்மாறாக, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த ரசனையும், ஒரு விதத் தாகமும் மட்டுமே, அவனது கண்களில் தென்பட்டன!

அப்படியென்றால், அவன் மனம் மாறவே இல்லையா?

அல்லது, நடுவில் இருந்த கோபம் மாறிப் பழைய நிலைக்குத் திரும்புகிறதா?

பின் ஏன் பேச்சால் சுடுகிறான்?

'ஜிவ்'வென்று பறக்கத் துடித்த மனதைக் கட்டுப்படுத்தி, அவள் யோசிக்க முனைந்தபோது, முதல் மாடியில் லிஃப்ட் நின்று, கதவு திறந்து, நிறையப் பேர் ஏறினர்!



தங்கள் தனிமை கலைந்ததே என்று மதுவந்தி முதலில் எரிச்சல் பட்டாலும், உடனேயே, இதுவே நல்லது என்று புரிந்து கொண்டாள்.

அடுத்தவர் முன்னிலையில் அவன் காட்டுகிற விட்டேற்றியான, யாரோ போன்ற அன்னியமான பாவனை அவ்வளவு விரைவாக முகத்தில் வந்து விட்டிருந்தது!

சைதன்யனின் ஆழ் மனதில் என்ன இருந்தபோதும், அதை மதுவந்திக்குத் தெரிவிக்கும் எண்ணம் அவனுக்கு இல்லை என்பதை, அவன் முகம் வினாடிக்குள் மாறிய விதம், அவளுக்குத் தெளிவாக்கிற்று!

இதுவும்தான், ஏன்?

அவனது செயல்களின் காரணம் என்னவாக இருந்த போதும், மதுவந்திக்கு இப்போது மனதில் மெய்யான நம்பிக்கை உண்டாயிற்று!

இதுவரை, ஞானசேகரனின் ஊக்கத்தையும், வார்த்தைகளையும் மட்டுமே நம்பிக் கொண்டிருந்தது மாறி அந்த நம்பிக்கைக்கு அடிப்படை ஒன்று கிடைத்ததே. அவளுக்குப் பெரும் நிம்மதியை அளித்தது!

முகபாவத்தைச் சட்டென அவன் மாற்றிக் கொண்ட விதத்தைப் பற்றித் தனிமையில் உட்கார்ந்து யோசித்தபோது, சைதன்யன் அவனது மனமாற்றத்தை வெளிகாட்டத் தயங்குகிறான் என்றே மதுவந்திக்குத் தோன்றிற்று.

இருக்கத்தானே செய்யும்?

சும்மா வாயில் வந்தபடி, கடுமையாக, கொடுமையாக என்னென்னவோ சொல்லி விட்டானே! இதுவே இன்னொருத்தி என்றால், அவன் முகத்தில் கூட விழிக்க மாட்டாளே!

அந்த அளவுக்குக் கேவலமாகப் பேசிவிட்டு, அதே வாயால், அன்பு மாறவில்லை என்று எப்படிச் சொல்வது?

கூச்சமாகத்தான் இருக்கும்! கூடவே, அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று தயக்கமாகவும்தான் இருக்கும்!

முகத்தில் அடித்தது போலப் 'போடா' என்று விடுவாளோ என்று கலக்கமாகவும் இருக்கும்!

இப்போது அவளுக்கு இல்லையா? அவன் முகத்தில் ஆசைப் பார்வையைப் பார்த்த பிறகும், வெளிப்படையாக அவனிடம் தன் மனதை, இன்னொரு தரம் தெரிவிப்பதற்கு அவளால் முடிகிறதா?

மூன்று ஆண்டுகளாக அனுபவித்த வேதனையில், மறுபடியும் அவன் நோகப் பேசிவிட்டால் என்ன செய்வது என்று தயக்கமாகத்தானே, அவளுக்கும் இருக்கிறது!

இருவர் மனதிலும் நேசம் இருக்கிறது! ஆனால், அடுத்த அடி எடுத்து வைக்க, இருவருக்குமே தயக்கம்!

இந்தத் தயக்கத்தை உடைத்தாக வேண்டும்!

சினிமாக் கதாநாயகி போல, 'ஐ லவ் யூடா' என்று சைதன்யனிடம் போய் நிற்பதை, மதுவந்தியால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை!

ஆனால், வார்த்தைகளால் சொல்ல முடியாததைச் செயலாளர் தெரிவிக்கலாமே!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நேசம் அவள் மனதில் அப்படியே இருக்கிறது என்பதை, இன்னோரன்ன செய்கைகளால் அவள் காட்டினால், ஆண்மகனாய் அடுத்த அடி எடுத்து வைத்து, அவளை அரவணைத்துக் கொள்ள மாட்டானா, என்ன?



மனதில் முடிவெடுக்கும் வரை தான் செய்கை அறியாத திகைப்பு இருக்கும்!

அந்தக் கட்டத்தைத் தாண்டி விட்டதால், மதுவந்திக்குத் திட்டமிடுவது எளிதாக இருந்தது! திட்டமிட்டபடி செயல்படுவதும்!

மூன்று வருஷங்களுக்கு முன், சைதன்யன் வியந்து பாராட்டிய உடைகள், அணிமணிகள் எல்லாம் வெளியே வந்தன! அவனுக்குப் பிடித்த மாதிரியான அலங்காரம், வாசனைகள், நகைகள், நடை, உடை பாவனை...

வித்யாவுக்கு மகளைப் பார்த்து, மிகுந்த மகிழ்ச்சி!

''வயதுப் பெண்ணாய் இப்படி இருப்பாயா? சும்மா, சாமியாரிணி மாதிரி இருந்தாயே!'' என்று விட்டு, இன்னும் வேண்டியது பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்தாள்!

அத்தோடு நில்லாமல், சிந்தாமணிக்கு வேறு எழுதி, அவளும், இப்போதுதான் தனக்கு மனம் நிம்மதியாக இருப்பதாக எழுதியிருந்தாள்!

மதுவந்திக்கு வாழ்த்துக்கள் வேறு!

அதே சைதன்யன் என்று அறியும்போது அவளுக்கு எப்படி இருக்குமோ என்று லேசாகக் கலங்கினாலும், யாருக்காகவும், இனி இதில் மாற்றமில்லை என்பதில், மதுவந்தி உறுதியாக இருந்தாள்.

துணைவன் என்று ஒருவனை எண்ணிய பிறகு, பெற்ற தாய்கூட, அவனுக்கு அப்புறம்தானே?

இன்னொரு தரம் அவள் சைதன்யனை இழப்பதாக இல்லை!

அதைப் பொறுத்தவரையில், அவளுக்குச் சர்வ நிச்சயம்!

அப்படித்தான், அன்று அவள் நினைத்திருந்தாள்...



# 9

ஆமாம்! சைதன்யனை மணந்து, சந்தோஷமாக வாழப் போகிறோம் என்கிற நிச்சயமே, மதுவந்திக்கு இப்போது ஏற்பட்டிருந்தது!

ஏனெனில், சிலபல நாட்களாகச் சைதன்யன், தன் கடுமையான பேச்சுகளைக் கைவிட்டு, அவளோடு இயல்பாகப் பழகத் தொடங்கியிருந்தான்!

ஒட்டி, உறவாடக்கூட!

ஆனால், அவனும், அவளது மாற்றத்தை உடனேயே ஏற்றுக் கொண்டான் என்று சொல்ல முடியாதுதான்!

அன்று, அவனுக்குப் பிடித்தமான கரு நீலப் பட்டில் ஜரிகை பார்டர் தைத்த சுரிதாரில் அவளைப் பார்த்ததுமே, சைதன்யனின் முகம் மாறிவிட்டது! பொருத்தமான அணிமணிகள் வேறு!

சின்னதாக ஒரு சாக்கோடு, அவனது அறைக்குச் சென்று, முறுவலோடு மதுவந்தி 'குட்மார்னிங்' சொன்னபோது, அவன் ரொம்பவே திகைத்துப் போனான்.

என்ன அழகு! என்ன தைரியம்! என்ன எழில்! என்ன திமிர்! எல்லாமே, மிக அதிகம்!

அவள் மீது வைத்த கண்ணை எடுக்க முடியாமல் அவன் திணறுவதை உள்ளூர ரசித்தபடி, "மதிய உணவுக்கு முன்,



ஒருதரம், அவரது அறைக்கு வந்து போக முடியுமா என்று அங்கிள் கேட்டு வரச் சொன்னார்!" என்று அவள் இனிய குரலில் கேட்கையில், அவன் பற்களை நறநறவென்று கடித்த சத்தம், அவளுக்கே கேட்டது!

வேண்டும் என்று அவள் வந்திருப்பது, அவனுக்குப் புரிந்து விட்டது!

"அப்பா அறைக்குக் கூப்பிட்டாலும், அலுவலகப் பையன் வருவதே இல்லையா அல்லது, ஆபீஸ் பையன் என்ற பேரில் ஒருவன் இருப்பது அவருக்கு மறந்து போயிற்றா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் அவன்!

மீண்டும் முறுவலித்து, "சார் அறைக்கு வரும்போது, ஞாபகமாக அவரிடம் உங்கள் சந்தேகத்தைக் கேட்டு விடுங்கள், சார்!" என்றாள் அவள், "நான் வேண்டுமானால் நினைவுப்படுத்தட்டுமா? ஆனால், அது என் வேலை இல்லையே என்பதுதான் யோசனையாக இருக்கிறது! ஏனென்றால், நான் உங்களுடைய செயலாளர் இல்லை, பாருங்கள்..."

அவள் உள்ளூரச் சிரிப்பது தெளிவாகவே தெரிய, அவனது முகம் கோபத்தில் கன்றியது!

செய்வதெல்லாம் செய்துவிட்டு, இது வேறா?

புன்னகையுடனேயே திரும்பி, அறை வாயிலை நோக்கி ஒயிலாக நடந்தவளை, "ஒரு நிமிஷம்!" என்று அழைத்தான்!

நின்று, உடலை எழிலாகத் திருப்பி, "என்ன, சார்?" என்று விசாரித்தாள் அவள்!

ஒரு தரம் பல்லை இறுகக் கடித்துவிட்டு, "இந்த மாதிரி, மயக்கு மோகினி அலங்காரம் எல்லாம் இந்த அலுவல

கத்தில் தேவையில்லை என்று எச்சரித்திருந்தேனே! உன் உடை, உன் விருப்பம் என்றெல்லாம் சொல்லாதே! அதற்கும் அளவிருக்கிறது என்று தெரியுமல்லவா?'' என்று ஆத்திரத்தை மறையாத குரலில், அதட்டிக் கேட்டான் அவன்!

''மயக்கு மோகினியா?'' என்று கண்களை விரித்தாள் மதுவந்தி! ''மோகினி வந்து ஏமாற்றுவதற்கு, இங்கே அசுரர்கள் யாரும் இருக்கிறார்களா, சைதன்யன் சார்? இதுவரை என் கண்ணில், அப்படி யாரும் படவில்லையே! யார் சார், அது?''

நான்தான் என்று சொல்ல முடியுமா?

''ஆனால், அதிகப்படியாக அலங்கரித்துக் கொண்டிருப் பதை ஒத்துக் கொள்கிறாய்!'' என்று மடக்க முயன்றான் அவன்.

லேசாகத் தோளைக் குலுக்கி, ''எல்லாம் ஞானசேகரன் சாரின் தப்பு!'' என்றாள் மதுவந்தி.

''என்ன உளறுகிறாய்? அப்பா ஒன்றும், உன்னை இப்படி துணிக்கடை பொம்மை மாதிரி வரச் சொல்லியிருக்க மாட்டார்!''

கண்ணால் சிரித்து, ''ஐயோ! நான் தப்பு என்றது, அந்த மாதிரி அர்த்தத்தில் அல்ல, சைதன்யன் சார்! அதுவேறு! ஆனால், அதை நான் சொல்வது நன்றாக இராது!'' என்று இழுத்தாள் அவள்.

''ஏனோ?''

''அதிகப் பிரசிங்கித்தனமாகத் தோன்றும்!''

''இதுவரை, அப்படிப் பேசவே இல்லையா?''



''இல்...'' என்று கண்ணை விரிக்க முயன்றவளுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது!

சைதன்யனோடு, வார்த்தைக்கு வார்த்தை மடக்குவதும், கிண்டலடிப்பதுமாகப் பேசுவது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! மூன்று ஆண்டுகளாக இது இல்லாமல், வாழ்க்கை பாலைவனமாக இருந்ததே!

''சொல்லு. அப்பாவின் தப்பு என்ன?''

அவனுக்கும் தெரிந்துகொள்ள ஆசைதான்! பேச்சை நிறுத்தி, விரட்ட நினைக்கவில்லை!

''என்னவோ, நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் சொல்லு கிறேன்! அதற்காக, நீங்கள் என்னைக் குற்றம் சொல்லக் கூடாது!'' என்று ஏகப்பட்ட பீடிகையுடன் அவள் சொன்னாள். ''உங்களை ஒற்றைப் பிள்ளையாக இருக்க விட்டதுதான், அங்கிள் செய்த பெரிய குற்றம்! அண்ணன் தம்பிதான் வேண்டாம்! விட்டு விடலாம்! குறைந்தது, ஐந்தாறு பெண்களையாவது, பெற்றுப் போட்டிருக்கலாம் அல்லவா? அவர்களைப் பார்த்துப் பார்த்து, பெண்கள் என்ன மாதிரி உடை உடுப்பார்கள். நகை அணிவார்கள்., அலங்காரம் செய்வார்கள் என்று, உங்களுக்குக் கொஞ்ச மேனும் தெரிய வந்திருக்கும்! இப்போது பாருங்கள், துரும்பைத் தூணாக்குகிற மாதிரி, எவ்வளவு அசட்டுத் தனமாகப் பேசுகிறீர்கள்!''

பதில் சொல்வதற்குச் சைதன்யன் ஒரு முழு நிமிஷம் எடுத்துக் கொண்டான்!

எதையோ அடக்குவது போல, உதட்டோரத்தில் அழுத்தம் இருப்பதை மதுவந்தியால் காண முடிந்தது!

அவன் அடக்கியது, கோபத்தையா? அன்றிச் சிரிப்பையா?

பிரிவுக்குப் பின்னர் சந்தித்ததில் இருந்து, அவன் கோபத்தை அடக்கி அவள் பார்க்கவில்லை! குறைந்த பட்சமாக, அவர்கள் இருவரும் தனியாக இருக்கும்போது, ஆத்திரத்துக்குக் கட்டுப்பாடே இருந்தது கிடையாது!

அப்படியானால், அவன் கட்டாயமாகச் சிரிப்பைத்தான் அடக்கியிருக்க வேண்டும்! இது மாறி, அவளோடு ஒன்றுபட்டு, அவன் சேர்ந்து சிரிக்கும் காலம் விரைவிலேயே வர வேண்டும்!

கட்டாயமாக வரும்!

இப்போதே, உள்ளூர அவனுக்குச் சிரிப்பு வரத் தொடங்கி விட்டதே! இதைத் தயக்கமின்றி, அவன் வெளியே காட்டுவதுதானே பாக்கி?

மதுவந்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மனதோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, சைதன்யன் பேசினான்.

"ரொம்பத் துணிச்சலாகப் பேசுகிறாய்?" என்றான் பிசிரற்ற குரலில்.

"பயந்து நடுங்க, நீங்கள் என்ன புலியா, சிங்கமா?" என்றாள் அவள் சற்றுத் துடுக்காகவே!

அவளை அளவிடுவது போலப் பார்த்துவிட்டு, "புலி, சிங்கத்துக்குத்தான் பயப்படுவாயா?" என்று ஒரு மாதிரி சவால் குரலில் கேட்டான் சைதன்யன்!

லேசாக நெஞ்சு படபடத்தது, அவளுக்கு!

உன்னிடம் பயப்படுவானேன்? நீ என் அன்பன் அல்லவா, என்று கேட்டது மனது!



அதை வாய்விட்டுக் கேட்கும் காலம் விரைவில் வர வேண்டும் என்று உள்ளூர வேண்டிக் கொண்டு, தீவிரமாக யோசிப்பது போலப் பாவனை செய்தாள் மதுவந்தி!

"சிங்கம் புலி... வேறு என்ன.. பாம்பு இருக்கிறதே! அப்புறம் தேள்! இன்னும் பல்லி... கடவுளே! கரப்பு! கரப்பான் பூச்சி என்றால், எனக்கு ரொம்பப் பயம் சார்!"

ஒப்புதலாகத் தலையசைத்து, "இருக்கும்!" என்றான் அவன். பேப்பர் வெயிட்டை நகர்த்தி வைத்துவிட்டு, "இங்கே நின்று அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாயே! அப்பா அறையில் வேலையே இல்லையா?" என்று வினவினான்.

அவள் பதில் சொல்லுமுன் அவனாகவே, "அதெங்கே? செயலாளரை வேறு முக்கியப் பணிக்கு அனுப்பி வைத்திருக்கும்போது, தலைக்கு மேலே வேறு வேலை இருந்தாலும், அதையெல்லாம் அவரே செய்துவிட மாட்டாரா?" என்று சற்று வரண்ட குரலில் கேட்கவும், மதுவந்தி திகைத்தாள்.

ஞானசேகரனும் சேர்ந்து, எதையாவது சாக்கிட்டு, அவளையும் சைதன்யனையும் சந்திக்க வைப்பதை அவன் ஊகித்து விட்டதையோ, அது பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவதையோ, அவள் பெரிதாக நினைக்கவில்லை! ஏனெனில், இதைக்கூட ஊகிக்க முடியாத அளவுக்குச் சைதன்யன் முட்டாள் அல்ல!

ஆனால், அவன் குரலில் வெறுப்பு, கசப்பு அல்லது, கைப்பு போன்ற எதிர்மறை உணர்ச்சிகள் இருந்தனவோ என்று சந்தேகம் தோன்றவேதான், அவள் கவலைப் பட்டாள்!

கண்ணில் சிறு கலக்கத்துடன் அவள் நோக்கியபோது, அவன் முகத்தில் எதையும் காட்டாமல், "சரிசரி. அப்பா விடம் போ! அவர் அதிக வேலையை இழுத்துப் போட்டுச் செய்து, உடம்பைக் கெடுத்துக் கொள்ளும்படி விட்டு விடக் கூடாது! மதிய உணவு இடைவேளையின் போது சந்திப்ப தாக, அவரிடம் சொல்லு! அதற்குமுன் அவசியமில்லை தானே?" என்று கேட்டான்.

என்ன அவசியம் என்று அவள் திகைக்கையில், "என்ன மறந்து விட்டதா? அதைக் கேட்கத்தானே, நீ இங்கே வந்தாய்?" என்ற அவனது கேலிக் குரலில், அவளது முகம் சிவந்தது!

ஆமாம்! அப்படி ஒரு சாக்கைச் சொல்லிக் கொண்டுதான், அவள் சைதன்யன் அறைக்கு வந்ததே! பேச்சுக்குப் பேச்சுப் பதில் சொன்னதிலும், அவனது குரல் ஆராய்ச்சியிலுமாக, அதை மறந்தே போனாளே!

"ஆ... ஆமாம்! உ.... உங்கள் பதிலை அங்கிளிடம் சொல்லுகிறேன்!" என்று, எதையோ உளறிக் கொட்டிவிட்டு, அங்கிருந்து வேகமாகச் சென்றாள் மதுவந்தி!

தொடர்ந்த சில நாட்கள், மதுவந்திக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக அமைந்த அணிமணிகளால் மதுவந்தி தன்னை அலங்கரித்துக் கொண்டு வந்தாலும், அவன் அவளைக் குத்தலாக எதுவும் கூறுவதில்லை!

சொல்லப் போனால், முதலில் அவள் அறியாமல் கண்ணால் ரசித்தவன், இப்போது அவளது தோற்றத்தை, அவளிடமே வாய்விட்டே பாராட்டினான்.



புது இடம், முன்பணம் கொடுத்து, அவர்களுக்குத் தேவை யானபடி, மர வேலைகள் நடந்தன. இதைப் பார்ப்பதற்கு, சைதன்யன் தினமும் அவளை அழைத்துச் சென்றான்!

"உனக்குத்தானே எல்லாம் தெரியுமாம்! உன்னை, உடன் கூட்டிக்கொண்டுதான் போக வேண்டும் என்று, என் அப்பாவின் கட்டளை! 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று எந்தக் காலத்திலோ எழுதி வைத்திருக்கிறார்களே! அவரது உத்திரவை மீறுகிற தைரியம் எனக்குக் கிடையாதும்மா! அதனால், தினமும் உன் நேரத்தில் ஒரு மணி அவகாசத்தைத் தயவு பண்ணி, எனக்காக ஒதுக்கி வைத்து விடு, மதுவந்தி!"

வேடிக்கை போலத்தான் சொன்னான்!

ஆனால், அவனுடைய தந்தை, மதுவந்தியின் பக்கம் இருப்பது பிடிக்கவில்லையா என்ற சந்தேகத்தை, அவன் பேச்சு தோற்றுவித்தது!

ஆனால், மற்றபடி, அவனோடு சென்று வருவது, அவளுக்கும் பிடித்தமாகத்தான் இருந்தது! அவன் அருகில் இருப்பதே சுகம்தானே?

அத்தோடு, அவனிடமும் மாற்றம் தெரிந்தது!

முன்னைப் போலக் குத்தலான பேச்சுகள் கிடையாது! வெறுப்பான போக்கு, கிடையாது!

அதற்கும் முந்தி இருந்தது போல, வானத்தின் கீழே உள்ள அத்தனையையும் பற்றி இருவரும் சளசளவென்று பேசிக் கொண்டிருக்கவில்லைதான்!

ஆனால், இப்போதைக்கு, இதுவே சொர்க்கமாக மதுவந்திக்குத் தோன்றியது!

குறைந்த பட்சமாக, அவன் அருகில் இருக்கும்போது!

அவனுக்கும், அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்! ஏனெனில், இருவரும் சேர்ந்திருக்கும் நேரத்தை அதிகரிப் பவனைப் போல, அவனது மற்ற கிளைகளைப் பார்வையிடச் செல்லும்போதும், அவளைக் கூட்டிச் செல்லத் தொடங்கினான்!

நேரில் பார்க்கும்போது, அவனது தொழில் வளர்ச்சியைக் கண்டு அவள் இன்னமும் அதிகமாகப் பிரமிப்பது கண்டு சிரிப்பான்!

அப்புறம், ஒரு காபி ஷாப், அல்லது ஐஸ்கிரீம் பார்லருக்கு அழைத்துப் போனான்!

சில சமயம், அருகில் ஏதேனும் பூங்கா தெரிந்தால், அதன் உள்ளே சென்று சற்று நேரம் நடந்தார்கள்!

நெருங்கி நடந்தார்கள்!

நெருங்கி நடக்கும்போது கைவிரல்கள் கோத்துக் கொண்டன!

இப்படியெல்லாம் சைதன்யனோடு வெகு நேரம் சுற்றி விட்டுத் திரும்பி வந்தால், அவளது மனம் இடிக்கும்! குற்ற உணர்வோடு அவசரமாக அவள் ஓடி வந்தால், ஞானசேகரன் சிரிப்பார்.

''அப்படியெல்லாம், என்னை வேலை செய்ய விட்டு விடுவானாம்மா, உன் சைதன்யன்? எனக்கு உதவிக்கு ஆளை வைத்து விட்டுத்தான், உன்னை அழைத்துச் சென்றான்!'' என்று, அவளது குற்ற உணர்வைப் போக்குவார்!

''அதிருக்கட்டும்! எனக்கு நல்ல சேதி விரைவிலேயே வந்து விடுமா?'' என்று, புன்னகையோடு, ஆவலாகக் கேட்பார்!



அவளைப் போலவே, அவருக்கும் ஆதங்கம்! அவசரம்!

ஆனால், தந்தையின் அவசரம், மகனுக்கல்லவா தெரிய வேண்டும்! வெறுமனே, 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' என்று சொன்னால் ஆயிற்றா? அதைக் கடைப்பிடிக்க வேண்டாமா?

என்னதான் அவளது அருகாமை பிடித்திருப்பதாகச் சைதன்யன் காட்டிக் கொண்டாலும், இன்னோரன்ன வார்த்தைகளால், தன் நேசத்தை இன்னமும் அவன் தெளிவாக அறிவித்தானில்லை!

ஆனால், அந்த நாள், அப்படி அவன் அறிவித்துத் திருமணத்தைப் பற்றி பேசும் நாள் அதிகத் தூரத்தில் இல்லை என்று, அவளுக்கு ரொம்பவே நம்பிக்கைதான்!

எனவே, கன்னங்களில் ரோஜாக்கள் பூக்க, ''சீக்கிரம் வரும், அங்கிள்! நம்பிக்கையோடு இருங்கள்!'' என்று ஞானசேகரனிடம் புன்னகை புரிவாள் அவள்!

நிஜமாகவே, அவளுக்கு நாளுக்கு நாள் நம்பிக்கை அதிகரிக்கத்தான் செய்தது!

ஆனால், கூடவே ஒரு பொறுமையின்மையும்!

எப்போது, சைதன்யனை மணந்து, அவனுடைய மனைவியாகி நிம்மதியாக இருக்கப் போகிறோம்... என்று மனதில் ஒரு துடிப்பு! மீண்டும், ஏதேனும் தவறு நேர்ந்து விடுமோ என்ற தவிப்பு!

அப்படி ஏதும் ஆகிவிட்டால், அதற்குப் பின், தான் உயிர் வாழ்வதே கடினம் என்றுகூட, அவளுக்குத் தோன்றியது!

கிட்டத்தட்ட கைக்கு வந்து தட்டிப் போய் விட்டதாலோ, என்னவோ, அவனுடைய மனைவி என்று ஆகும் வரை,

தனக்கு முழு அமைதி கிட்டாது என்று, திட்டவட்டமாக உணர்ந்தாள் மதுவந்தி!

ஏனெனில், சைதன்யனைப் பார்க்கும்போது, அவன் அருகில் இருக்கும்போது, ஏன், அவன் இருக்கும் கட்டிடத்தில் அமர்ந்து, வேலையைப் பார்க்கும்போதுகூட இருக்கும் திடம், இரவின் தனிமையில் எங்கோ பறந்து போய்விடும்!

என்னென்னவோ பயங்கள், ஏதேதோ அச்சங்கள் தோன்றி, அவளை அலைக்கழிக்கத் தொடங்கி விடும்!

மறுநாள் அவனைக் கண்ணால் பார்க்கும்வரை, நெஞ்சுக்குள் அலைபாய்தல்தான்.

எனவேதான், மதுவந்தியும், ஞானசேகரனை விடவும், அதிகத் தவிப்புடன் காத்திருந்தாள்!

இந்தத் தவிப்புக்கெல்லாம் விரைவிலேயே ஒரு முடிவு வந்தது!




அன்றும், சைதன்யன், அவனது கடையின் நான்கு கிளைகளுக்கும், மதுவந்தியை அழைத்துச் சென்றான்!

மாத முதல் வாரம் என்பதோடு, தவணை முறைகள், குறிப்பிட்ட சிலவற்றைச் சேர்த்து வாங்கும்போது விலையில் சலுகை என்று பல்வேறு உத்திகளைக் கடைபிடித்ததால்,



அவனது நான்கு நிறுவனங்களிலுமே, விற்பனை வெகு சிறப்பாக நடந்திருந்தது! லட்சங்களில்!

அனைத்தையும் கூட்டி அவளுக்குக் காட்டியபோது, மதுவந்திக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது! ஒளிவு மறைவின்றி, எல்லாம் சொல்கிறானே! உரிமைக்காரி ஆகப் போகிறாள் என்பதால்தானே?

"சாதனை, மது! சாதனை! இன்னும் புது 'ஷோ ரூமை'யும் திறந்து விட்டால், விற்பனை இரு மடங்கு ஆகிவிடும்! யாரும், கிட்டே கூட வர முடியாது!" என்றான் அவன் மகிழ்ச்சியோடு!

ஆனந்தமாய், "சந்தோஷமாக இருக்கிறது, சது!" என்றாள் அவளும்.

எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு முடித்துவிட்டு இருவரும் கிளம்பினார்கள்.

காரில் ஏறிய பிறகும் காரைக் கிளப்பவில்லை, அவன்.

"என்ன?"

"மீண்டும் போய், வேலையில் ஈடுபட வேண்டும் என்றால், அவ்வளவாக மனம் வரவில்லை! பார்த்துத்தான் ஆக வேண்டும் என்கிற மாதிரிப் பெரிய வேலையும் ஒன்றும் இல்லை! இருந்தாலும் அப்பா கவனித்துக் கொள்வார்! நாலு கிளைகளுக்கும் போகிறேன் என்றதும், தாமதமானால், தானே பார்த்து முடிப்பதாகச் சொல்லிவிட்டார்! அதனால்..."

சாதித்த சந்தோஷத்தில் இருக்கிறான்! இன்று சொல்வானா?

"அதனால், வேறே எங்கே போக வேண்டும்?"

கடற்கரைக்கு? அங்கே சுண்டலை வாங்கிக் கொறித்தபடி சொல்வானா?

அல்லது, உயர்ரக ஹோட்டலில், விருந்துண்டவாறு சொல்வானா?

''அதை நீதான் சொல்லவேண்டும்!'' என்றான் அவன்! ''ஏனென்றால் அங்கே எனக்குப் பரிசு கொடுக்கப் போகிறவள் நீதானே?''

''அடடா! நான் ஒன்றும் வாங்கி வைக்கவில்லையே!'' என்று பரபரத்தாள் அவள்!

கையை நீட்டி அவளைத் தோளோடு அணைத்துத் தன்புறம் இழுத்தான் சைதன்யன். ''வாங்கித்தான் தர வேண்டுமா? நீயாகவே தரலாமே!''

அவளாக... ஆகா! சொல்லிவிடப் போகிறான்! பாட்டில் வருகிற மாதிரி, பரிசாகக் கன்னத்தில் முத்தமொன்று...

எல்லையற்ற நிம்மதியோடு அவன் தோளில் சாய்ந்தபடி, ''தாராளமாக! நானே, உங்களுடையவள்தானே, சது!'' என்று, உருகினாள் மதுவந்தி!

''குட்!''

சுற்றியிருந்த கையால் ஒரு தரம் அழுத்தி அணைத்து விட்டு, அவளை நேராக அமரச் செய்தான் அவன். காரைக் கிளப்பியவாறு, அவளிடம் கேட்டான். ''சொல்லு எங்கே போகலாம்? உனக்கு ஏதாவது லாட்ஜ் தெரியுமா? அல்லது, ஹோட்டல் எதிலாவது ரூம் போட்டுத் தங்கலாமா?''

மதுவந்திக்குச் சற்று நேரம், தன் காதுகளை நம்ப முடியாத நிலை!

மெ... மெய்யாகத்தான், சைதன்யன் அப்படிக் கேட்டானா?

லாட்ஜ்! ஹோட்டல் ரூம் இதிலெல்லாம் தங்குவது என்றால்...?



அவள் காதில் அப்படித்தானே, விழுந்தது!

ஒருவேளை, ஜோக்கடிக்கிறானா?

இருக்கும்! அப்படித்தான் இருக்க வேண்டும்! சில விஷயங்களைப் பற்றி, லேசாகப் பேசினால் அவனுக்குப் பிடிக்காது!

திருமணம் ஆகுமுன்னதாகவே, 'உங்களுடையவள்' என்று அவள் சொன்னதில் எரிச்சலுற்று, இப்படியொரு குட்டு வைக்கிறான் போலும்!

''சாரி, சது!'' என்றாள் அவள்.

''எதற்கு?'' என்றான் அவன் புரியாதவனைப் போல!'' எனக்கு சந்தோஷம்தான்! இங்கே, புறநகர்ப் பகுதியில் ஒரு பங்களா பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்! ஸ்டார் ஹோட்டல் வசதி இருக்குமாம்! வாடகை அதிகம் என்றாலும், கேள்வியே கேட்க மாட்டார்களாம்...''

''போதும், சைதன்யன்! விளையாட்டுக்கும் ஓர் அளவு உண்டு!, நீங்கள் இப்போது அளவைத் தாண்டுகிறீர்கள்!'' என்று எரிச்சலாகக் கூறும்போதே, அவளது வயிற்றுக்குள் ஏதோ பிசைந்தது!

விளையாட்டுக்குக் கூட, இவ்வளவு மட்டரகமாகச் சைதன்யன் பேச மாட்டானே! இது, ஏதோ வினையாகத் தெரிகிறதே!

காரணத்தை ஊகித்தவளாக, ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், சது! திருமணத்துக்கு முன்பாக, 'நான் உங்களுடையவள்' என்று சொன்னது அதிகப்படிதான்! ஆனால், அதற்காக, இப்படியெல்லாம் பேசி மிரட்டாதீர்கள்!'' என்று, பணிவாகவே அவனை அடக்க முயன்றாள் மதுவந்தி!

சில வினாடி அமைதிக்குப் பின், "திருமணமா? யாருக்கு? யாரோடு" என்று சற்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

மதுவந்தியின் வயிற்றில் பிசைந்தது மாறி, இப்போது உள்ளே ஒன்றும் இல்லாமல் காலியான உணர்வே வந்து விட்டது!

நெஞ்சுக் கூடும் அப்படித்தான்! அதனுள் எதுவுமே இல்லை என்பது போலத்தான்!

ஆனால், எதுவுமே இல்லை என்றால், தாங்க முடியாத பெரும் பாரம் தூக்குவது போல, இறக்குவது எப்படி?

"சது, சது... ப்ளீஸ்! தயவு பண்ணி, என்னென்னவோ சொல்லாதீர்கள்! ப்ளீஸ்..." என்றபோது, அவளது குரல் ரொம்பவே பலவீனப்பட்டு விட்டது!

அவன் ஏராளமாக நகைத்தான்!

"ஏன்? உண்மையைச் சொன்னால், தாங்க முடிய வில்லையா? ஆனால், திருமணமே செய்வேன் என்று எதிர்பார்க்க, நீ ஒன்றும், அவ்வளவு முட்டாள் அல்லவே! என்னதான் உன் மனது மட்டரகம் என்றாலும், உன் உடம் புக்குக் கவர்ச்சி அதிகம்! அந்தக் கவர்ச்சியை, இன்னமும் அதிகப் படுத்தும் விதத்தில், ஆடை, அணிமணிகள் வேறு! பக்கத்திலேயே வைத்துக் கொண்டு, ரொம்பத் தொல்லை யாகத்தான் இருந்தது. ஆனால் அதற்குத் திருமணம் என்கிற விலை மிகவும் அதிகமாக, உனக்கே தோன்றவில்லை?"

கடவுளே! இவன் மனதில் எண்ணுவதைத்தான் சொல்லு கிறான்! சும்மா அவளை மிரட்டுவதற்காகப் பேசவில்லை!

ஒவ்வொரு நாளும், இரவின் தனிமையில், பலதும் எண்ணித் தூக்கமின்றித் தவித்தாளே! அதுதான், அந்தப் பலதும்தான் நிஜம்!



அவைகளைச் சின்ன விஷயங்கள் என்று அவள் ஒதுக்கியதுதான் முட்டாள்தனம்!

உள்ளே வஞ்சம் வைத்து, அவன் சிரித்துச் சிரித்துப் பேசியதை நம்பி, என்னமாக ஏமாந்து விட்டாள்!

யாருக்கும் இந்தச் செல்லச் சுருக்கம் தோன்றியிராது, இது எனக்கே உரியது என்று சொல்லிச் சொல்லிக் கொஞ்சுவானே! அந்த வார்த்தையை, இவன் ஒரு தரம்கூடப் பயன்படுத்தாத போதே, அவளுக்குப் புரிந்து போயிருக்க வேண்டாமா?

தற்செயலாகப் படுவது போலத் தொட்டானே! அவளுடைய சைதன்யன் அப்படித் தொடமாட்டானே என்று அவளுக்கு ஏன் தோன்றவில்லை?

நினைத்தாள் தான்! 'விடியா இரவே' என்று விழித்துக் கிடந்த தருணங்களில் இந்தத் தொடுகைகள் பற்றி அவள் யோசித்தது உண்டுதான்! மூன்று ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்த ஆசைகளின் சிறு வெளிப்பாடு என்று அதற்குச் சமாதானமும் கண்டு பிடித்தாளே! அதுதான் பிழையாகி விட்டது!

ஒருவேளை, அவன் அதையே தொடர்ந்திருந்தால்... கூடக் கொஞ்சம் அத்து மீறியிருந்தால், தப்பாக நினைக்கத் தோன்றியிருக்குமோ, என்னவோ? ஆனால், அவன் அப்படிச் செய்யாததால், அவன் தன்னைப் பரிசோதிக்கிறான் என்பதே புரியாமல், அவனை நியாயப்படுத்துவதிலேயே இருந்து விட்டாள்!

ஆசை கொண்ட மனதின் ஊகமாக இருக்கலாமே என்று, அவனுடைய தந்தைக்குச் சொன்னவள் அவள்தான்! ஆனால், தன் விஷயத்தில் அவள் ஏன், அதைப் பயன்படுத்தி யோசிக்கவில்லை?

இப்படிக் கேவலப்படுத்துவதற்காக?

இத்தனை காலம், இத்தனை காலம், ஆழ் மனதில் அழியாத சித்திரமாக இவனை வைத்திருந்தாளே! கடைசியில் தீக்கோலம், எரிதீயால் அழியாத கோலம் போட்டு விட்டான்!

நல்ல பரிசுதான்!

அழியாத சித்திரத்துக்கு, அழியாத கோலம் பரிசு!

சகோதரியே போன்றவள்! அவள் சொன்ன பிறகும், அதை உள்ளூர ஒத்துக் கொள்ள முடியாமல் தவித்தாளே. அடச்சீ என்று தூக்கிப் போட்டுவிட்டு, இன்னொரு வழி போகாமல், அவளுடைய தாயார் சொல்லுவது போல, சாமியாரிணி போல வாழ்ந்ததற்கு, மிகப் பொருத்தமான பரிசு!

லாட்ஜுக்கா அழைக்கிறான்? என்ன ஒரு பாதகம்!

இந்த மூன்று ஆண்டுகளாகக் கரம் வைத்து, அவளைப் பழி வாங்கியிருக்கிறானே! இவனுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா?

கொடுக்க வேண்டும்! இந்த வலி இவனுக்கும் புரிய வேண்டும்! இவனும் அனுபவிக்க வேண்டும்!

எப்படி என்று யோசிக்கும்போதுதான், கார் சென்று கொண்டே இருப்பது புரிந்தது!

"காரை நிறுத்துங்கள்!"

"எதற்கு? இன்னும் அந்த இடம் வரவில்லை."

"உங்களோடு அந்த இடத்துக்கு வர, எத்தனையோ பேர் தயாராக இருப்பார்கள்! ஆனால், எனக்கு வேறு வேலை இருக்கிறது!" என்றாள் அவள், பல்லைக் கடித்து!



"ரொம்பவும் பிகு பண்ணாதே!" என்றான் சைதன்யன்.

தொடர்ந்து கார் ஓடவும், "இப்போது நீங்கள் காரை நிறுத்தாவிட்டால், கண்ணாடியை இறக்கி, உதவி கோரிக் கத்துவேன்! செய்ய மாட்டேன் என்று நினைக்க வேண்டாம், மிஸ்டர் சைதன்யன்!" என்று எச்சரித்தாள் மதுவந்தி!

நிறுத்துவதற்காகக் காரை வேகம் குறைத்து, ஓரமாகச் செலுத்தியபடி, "என்ன பெரிய அலட்டல்?" என்று, அப்போதும் அலட்சியமாகவே கேட்டான் அவன்!

"அலட்டல்தான்!" என்று, உடனே ஒத்துக் கொண்டாள் அவள். "ஆனால், இப்போதல்ல! மூன்று நீண்ட ஆண்டுகளாக, நான் நடந்து கொண்ட விதம்தான் அலட்டல்! உங்களை நம்பாததால், எனக்கு உங்களிடம் அன்பில்லை என்று நீங்கள் சொன்னீர்கள்! இப்படிக் கேவலமான முறையில் பழி வாங்க எண்ணுகிறீர்களே, உங்களுக்கு மட்டும் என்னிடம் அன்பிருக்கிறதா? எனக்கு அன்பு இல்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்! உங்களுக்கு அன்பு இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது! இல்லாத அன்புக்காக ஆண்டுக் கணக்கில் ஏங்கிக் கிடந்தது, எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! தொடுவானத்துக்கு அப்பால் பெரும் செல்வம் இருப்பதாக நம்பி ஓடிய முட்டாளுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

"நல்ல காலம்! காலம் கடக்கும் முன்பாகவே, தொடு வானம், என்றுமே தொடாத வானம்தான், அதற்கு அப்பால் ஒன்றுமே கிடையாது என்று புரிந்து கொண்டேன்!

"சிரமம் பாராமல் பெற்று, அருமையாகப் பேணி வளர்த்த பெற்றவர்கள்! அவர்களுக்குத் தெரியாததா? மூன்று ஆண்டுகளுக்கு முன்பான அந்த அதிர்ச்சியின் பிறகே,

என்னிடம் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள்! நான்தான் மனதில் ஒருவரை வைத்துக் கொண்டு, இன்னொருவரை மணப்பது, வேசித்தனம் என்று நினைத்துத் தட்டிக் கழித்தேன்! ஆனால், நீங்களே அதற்குத்தானே அழைத்தீர்கள்?

"ஆனால், அதுவும் நல்லதுதான்! தொடுவானத்துக்கு அப்பால் இருப்பது என்ன என்று அனுபவ ரீதியாகப் புரிந்து போயிற்று! பட்டறிவு என்பார்களே! அதுபோல! சந்தேகத்துக்கே இடமற்ற தெளிவு!

"சிந்தா கணவர் வழியில், ரொம்பக் கேட்கிறார்களாம்! ரொம்ப உயர்ந்த இடமாம்! மறுக்கிறேன் என்று, அப்பாவுக்கே மிகவும் வருத்தம்! இப்போது போய், அப்பாவிடம் சரியென்று சொல்லிவிடப் போகிறேன்!

"காதல் தோற்று, இன்னொருவனை மணந்து, நல்லபடியாகவே வாழ்வதாக, எத்தனை படங்களில் பார்த்திருக்கிறேன்! எனக்கும் அதுபோல, எல்லாம் சரியாகிப் போகும்!

"தெரிந்தவர் என்கிற முறையில், அப்பா உங்களையும் கூப்பிடுவார்! வராதிருந்தீர்கள் என்றால், உங்களுக்கும் நல்லது! எனக்கும் அப்படித்தான்!

"இப்போது... இனி நாம் சந்திக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். அதனால்... போகிறேன்" என்றவள், மெதுவாக வந்து நின்றிருந்த காரின் கதவைத் திறந்து கொண்டு, வேகமாக இறங்கினாள்.

சைதன்யன் தடுப்பானோ என்று அஞ்சினாள் போலும்! ஆனால், சிலையாக அமர்ந்திருந்த அவன் அசையக் கூட இல்லை!



அவனைத் திரும்பியும் பாராமல், வேகமாக நடந்தவள், எதிர்புறமாக வந்த ஆட்டோவைக் கை நீட்டி நிறுத்தி, ஆட்டோ அருகில் வந்ததும் ஏறிக் கொண்டாள்.

சிரமப்பட்டு, செல்ல வேண்டிய இடம் சொன்னதோடு சரி!

அதற்குமேல், சரியாக மூச்சு விடக்கூட முடியாமல், அவள் மிகவும் தவித்துப் போனாள்!

இடையில் ஒரு தரம், இந்த ஆட்டோவில் இருந்து உயிரோடு இறங்கிப் போய்ப் பெற்றோரைப் பார்ப்போமா என்று கூட, மதுவந்தி நினைத்தாள்! அந்த அளவுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்து, அவளுக்கு!

கொஞ்சம் கதறி அழ முடிந்தால்...

காரில், அவன் முன்னே அழுது கேவலப் படக் கூடாது என்பதோடு, அவனுக்குத் திருப்பிக் கொடுக்கும் வேகமும் இருந்தது!

இப்போது, ஆட்டோவில் இருந்து கொண்டு, எப்படி விம்மி விசும்புவது?

ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, வீட்டுக்குள் செல்லும் வரை சமாளித்தவள், அதற்குமேல் முடியாமல் ஏங்கி அழுதபடியே அறைக்குள் ஓடினாள்.

ஹாலில் அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்த பெற்றவர்கள் வரவேற்பாக மகளைப் பார்த்து முறுவலிக்கு முன், விம்மலும் விசும்பலுமாக அவள் உள்ளே விரையவும், இருவரும் பதறிப்போய், அவளைத் தொடர்ந்தனர்!

அங்கே கட்டிலில் விழுந்து, மதுவந்தி பரிதாபகரமாக அழுவதைக் காணவும், இருவரும், மேலும் பதறிப் போயினர்!

என்ன, ஏது என்று அவர்கள் கவலையுடன் கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாமல் அவள் ஏங்கி அழவும், இருவருமே பயந்து போயினர்.

"என்னடீ, என்ன விஷயம்? சொல்லிவிட்டுத்தான் அழேன்! இப்படிச் சும்மா அழுது கொட்டினால், நாங்கள் என்னதான் நினைப்பது?" என்று வித்யா அதட்டிக் கேட்டதற்கும் பதில் கூறாமல், மதுவந்தி மேலும் அழுதாள்.

சொல்லப் போனால் அவளது அழுகை அதிகமாயிற்று என்று சொல்லலாம்!

இந்தக் கேவலத்தைப் பெற்றோரிடம் சொல்லக்கூட முடியாத அவலம், மகளின் வேதனையை அதிகப்படுத்திற்று எனலாம்!

மதுவந்தி பொங்கி அழுவதைக் கவனித்துவிட்டு, அவளிடம் கேள்வி மேல், கேள்வி கேட்டுக் கொண்டிருந்த மனைவியைக் கேசவன் கையமர்த்தினார்.

மகளின் ஒருபுறமுமாக அமர்ந்து முதுகைத் தடவி, தோளை வருடி, அவளுக்குச் செய்கைகளால் ஆறுதல் அளிக்க முயன்றார்!

மனைவியிடமும் கை காட்ட, அவளும் அதையே செய்த போதும், இடையிடையே மனம் பொறுக்காமல், என்ன நடந்தது என்று விசாரிக்கவும் செய்தாள்!

மகளின் உடம்பில் அடிபட்ட அடையாளம் இல்லை என்று கண்டு, "என்னடா? யாருக்கு, என்ன ஆயிற்று என்று சொல்லேம்மா?" கவலையுடன் வினவினாள்!

யாருக்கா?



தனக்கென்று சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தவள், அதைப் பிடித்து, "தெ... தெ.. தெரிந்தவள், அம்மா! அவளுக்கு, மரண காயம் பட்டு விட்டது! எ.... என் வயதுதான்! அந்தத் துடிப்பு... துடிப்பைப் பார்த்துத் தாங்க முடியவில்லை, அம்மா!" என்று தாயின் மடியில் முகம் புதைத்துக் கதறினாள்!

"தாங்க முடியவில்லையே, அம்மா! தாங்கவே முடியவில்லையே!"

உள் விஷயம் புரியாமல், மகளின் முதுகைத் தடவி, "உலகில் என்னென்னவோ நடக்கிறது, கண்ணு! ஏன், எதற்காக என்று, நமக்கு என்ன தெரிகிறது? எல்லாம், அவரவர் கொடுப்பினை! பிறக்கும் போதே, கடவுள் நம் தலையில் எழுதியது! இதற்கு, நாம் என்னடா செய்யலாம்? சும்மா அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே, செல்லம்!" என்று தானறிந்த வகையில் மகளை ஆறுதல் படுத்த முனைந்தாள் பெற்றவள்!

ஆனால், தாயின் வார்த்தைகளில், மகளின் அழுகை அதிகமாவதைக் கவனித்து, "இவளுக்கு அதிர்ச்சிதான் அதிகம் என்று தோன்றுகிறது, வித்யா! அதனால், மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை! போய்ச் சூடாக டீ போட்டு, நிறையச் சர்க்கரை கலந்து எடுத்து வா! அதிர்ச்சிக்கு, அது மிகவும் நல்லது! அது போல, எதையாவது குடித்தால்தான், இப்போது, இவளுக்குச் சரியாகும்!" என்று கூறி, மனைவியை அங்கிருந்து அனுப்பினார் கேசவன்!

சமையல் அறையில், வித்யா பாத்திரங்களை எடுத்து வைக்கும் சத்தம் கேட்ட பிறகு, 'மரண காயம் யாருக்கம்மா பட்டது' என்று மெல்ல வினவினார் தந்தை!

"அப்பா..." என்று நிமிர்ந்து பார்க்குமுன், மதுவந்தியின் கண்களில், கண்ணீர் பொங்கி வழிந்தது! "அப்பா..." என்று மறுபடியும் விசும்பினாள் மகள்.

"சைதன்யனின் வேலையா? உலகின் எந்த ஒரு ஆண் மகனும், இந்தக் கண்ணீருக்குத் தகுந்தவனே கிடையாது! விடும்மா! அவருக்கு அதிருஷ்டம் இல்லை! அவ்வளவு தான்! அதற்கு, அவரல்லவா அழ வேண்டும்? நீ கண்ணீர் விடலாமா? சேச்சே! என் தங்கம் இவ்வளவு கோழையானது எப்போது? ம்?"

"அப்பா!" என்று அவரது கையைப் பற்றி, நெற்றி மீது வைத்துக் கொண்டாள் பெண்!

பெற்றவள் தயாரித்துக் கொணர்ந்த இனிப்பான டீயைக் குடித்ததும், மதுவந்தி சற்றே தெம்பு வந்தது போலப் படுக்கையை விட்டு எழுந்து, சோஃபாவில் வந்து அமர்ந்தாள்!

ஆனால், அதுவும் தவறோ என்பதுபோல, காயம் பட்ட பெண்ணின் ஊர், பேர் எல்லாவற்றையும் வித்யா விசாரிக்கத் தொடங்கவும், மகள் திணறிப் போனாள்!

அவளது கண்கள் மறுபடியும் கலங்கத் தொடங்கவும், கேசவன் குறுக்கிட்டார்!

"வித்தி, சிந்தாவுக்கு ஏதோ அனுப்ப வேண்டும், எவ்வளவு எடை அவரால் கொண்டு போக முடியும் என்று அவளுடைய சின்ன மாமனாரிடம் கேட்பதற்குப் போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே! இப்போது போய்க் கேட்டு விட்டு வந்து விடேன்! நாளைக்கு அவர், வேறு எங்கேயோ போகப் போவதாகச் சொன்ன ஞாபகம்!" என்றார் மனைவியிடம்!



"ஆனால், மதுவுக்கு மனது சரியில்லையே!" என்றாள் வித்யா. "அவளை விட்டு எப்படிப் போவது?"

"அவளுக்குத்தான், நான் துணையிருக்கிறேன்! நீ சீக்கிரமாகக் கிளம்பு! அப்புறம், அவர்கள் சாப்பிடுகிற நேரத்தில் போய் நிற்கக்கூடாது! வினு டூர் போயிருப்பதால், நீ ஸ்டாண்ட் ஆட்டோவிலேயே போய் விட்டு, அதை நிறுத்தி வைத்து, அதிலேயே வந்து விடு!" என்று சொல்லி, அவளைக் கிளப்பி அனுப்பி வைத்தார்!

"அம்மா திரும்பி வருவதற்குள், உன்னைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும், பாப்பா!" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாயிலில் கார் நிற்கும் ஓசை கேட்டது!

அழைப்பு மணியும்!

"யார்?" என்று கேசவன் கதவைத் திறந்தால், அங்கே ஞானசேகரன் நின்றார்.

கேசவன் மௌனமாக வழி விலகவும், அவசரமாக உள்ளே வந்து, ஓய்ந்து கிடந்த மதுவந்தியிடம் பேசினார்.

இவர் பேச்சைக் கேட்டு, சைதன்யனிடம் நெருங்க முயன்றதால் அல்லவோ, இந்த வேதனை! இனி ஒருபோதும்...

ஞானசேகரன் பெரும் பதைப்பில் இருந்தார்! "மது, உடனே கிளம்பி வாம்மா! அங்கே, சைதன்யனுக்கு விபத்து நேர்ந்து விட்டது! கார் மரத்தில் மோதி... இன்னும் சுய நினைவு திரும்பவில்லை! இந்த நிலையில், அவன் உன்னைத்தான்... உன்னை மட்டும்தான் தேடுகிறான் என்று

நினைக்கிறேன்! திரும்பத் திரும்ப, அதே புலம்பல்! நீ உடனே வாம்மா! அவனுக்கு ஆபத்தான நிலைதான் என்கிறார், டாக்டர். அவர் தேடுகிற, அந்த மதியை அழைத்து வாருங்கள், பார்ப்போம் என்று, அப்போதும் சந்தேகமாகத்தான்...''

பெரும் கேவலுடனும் எழுந்து விட்டாள் மதுவந்தி!




மதி!

மதுவந்தியை 'மது' என்று எல்லோருமே கூப்பிடுவார்கள். நான் அழைக்கும் பெயர் தனித்தன்மையோடும், அதே சமயம் புத்திசாலியான உனக்குப் பொருத்தமாகவும் இருக்க வேண்டும் என்று யோசித்து, இந்தப் பெயரைக் கண்டு பிடித்து இருக்கிறேனாக்கும் என்று சைதன்யன் பெருமையோடு அவளை அழைக்கும் செல்லப் பெயர் அது!

இருவருக்கும் மட்டுமான ரகசியமும் கூட! அதே போல, அவள், அவனைச் 'சது' என்பாள்!

மூன்றாண்டுப் பிரிவின் பின், அவளுக்கு, அவன் 'சது'வாகவே தோன்றியபோதும், அவன், அவளை 'மதி' என்று அழைத்ததே இல்லை!

அதாவது, அவன், அவளை, அவனுடைய 'மதி'யாகப் பார்க்கவே இல்லை என்பது, மதுவந்தி பிறகு வேதனையோடு கண்டு பிடித்தது!



ஆனால், சுய நினைவற்றுக் கிடக்கும் நிலையில் அந்தப் பெயர்தான் அவனது வாயில் வருகிறது என்றால், சைதன்யனின் உள் மனதிலும் மாற்றம் இருந்ததே இல்லை என்றுதானே, பொருள்!

ஞானசேகரன் நடந்ததைச் சொல்லச் சொல்ல அவரது பதைப்பு, மதுவந்தியையும் பற்றிக் கொண்டது!

''நடந்த விபத்தில் தப்பு சைதன்யனுடையதுதான்!

எதையோ யோசித்தபடி வந்திருப்பான் போலும்! சாலை விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை! ஏதோ கடைசி நிமிஷத்தில் கவனித்து, வேகமாகக் காரைத் திருப்பி சமாளித்ததில், இந்த அளவுக்கேனும் உருப்படியாகத் தப்பினான்!

இல்லாவிட்டால் டாங்கர் அடியில்...''

மேலே சொல்ல முடியாமல், உடல் விதிர்த்தார் ஞானசேகரன்.

மதுவந்திக்கும் அதே நிலைதான்!

இன்னமும் அதிகம் என்றும் சொல்லலாம்! அவன் எதை யோசித்துக் கொண்டு, காரை ஓட்டுவதில் கவனமற்று இருந்தானோ என்பதில் ஓர் ஊகமும், அவளுக்கு இருந்ததே!

அதிலும், சைதன்யனுக்குக் கார் ஓட்டுவது கைவந்த கலை! கார் தனக்கு ஓர் அங்கம் போல, கைகளால் எல்லாம் சேர்ந்து, உடம்பைச் சமநிலைப்படுத்தி நடக்க வைப்பது போல, அவனது உறுப்புகளே காரையும் சரியாக ஓட்டி விடும் என்பான்!

ஒரு வேளை அதனால் தான் கடைசி வினாடியில், கைகளால் வேகமாகச் செயல்பட்டுத் தப்பிக்க முடிந்ததோ?

ஆனால், உயிர் தப்பி விட்டதாக ஞானசேகரன் சொல்லவில்லையே! உருப்படியாகத் தப்பினான் என்றுதானே...

"அங்கிள், அவருக்கு அவர் உயிருக்கு..." என்றவள் மேலே கேட்க முடியாமல் திகைத்தாள்!

"தெ... தெரியவில்லையேம்மா!" என்று நெற்றிப் பொட்டை, தலையை அழுத்தியபடி தீனமாகச் சொன்னார் அவர். "எல்லாம் நன்றாகி விடப் போகிறது என்று எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறபோது, இப்படி ஆகி விட்டதே!"

முனகலுக்கும் புலம்பலுக்கும் இடைப்பட்ட மாதிரி அவர் கூறிய விதத்தில் மதுவந்தி இன்னமும் நொந்தாள்!

நன்றாக ஆவதா? நன்றாக ஆகவே இல்லை என்பதோடு, முழு மோசத்துக்கும் வழி வகுத்து விட்டதே!

சைதன்யனை ஐசியுவில்தான் வைத்திருந்தார்கள்!

வந்திருப்பவர் யார் என்று அறிந்ததும், "பாரம்மா, உள்ளே இருப்பவர்கள் எல்லோருமே, மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பவர்கள்தான்! மதில்மேல் பூனை நிலை! அடிக்கடி உன் பெயரைச் சொல்கிறாரே, உன்னை உணர்ந்தால், இந்தப் பக்கம் வருவதற்கு அது ஓர் உந்துதலாக இருக்கக் கூடும் என்றுதான், உன்னை உள்ளே அனுப்புகிறேன், உணர்ச்சி வசப்படுதல், அலட்டல் எதுவும் காட்டாமல், உன்னை அவருக்கு உணர வைக்க முடிகிறதா என்று பார்!" என்று எச்சரித்து, அவளை உள்ளே அனுப்பினார் மருத்துவர்!

அலட்டல்!

இதையேதான் அவனும் சொன்னான்!

அதற்கு, அவள் கொடுத்த விளக்கம், அவனுக்குக் காலனாகி விடுமா?

ஆனால், அவன் பேசிய விதம்...



உடல் முழுவதும் பல்வேறு இடங்களில் கட்டுகளோடு படுக்கையில் கண் மூடிக் கிடந்த சைதன்யனைப் பார்த்ததும், மதுவந்திக்கு, மற்றது எல்லாமே மறந்து போயிற்று!

கட்டு இல்லாதிருந்த' ஒரு கையைத் தொட்டு, "உங்கள் மதி வந்திருக்கிறேன், சது!" என்றாள் அவள்!

சைதன்யனின் மூடியிருந்த கண்ணிதழ்களில், லேசான அசைவு தெரிந்தது!

கண்களைத் திறக்க முயற்சிக்கிறான் என்று மதுவந்தி ஆவலோடு பார்க்கும்போதே, அந்த அசைவு நின்றே போயிற்று!

ஆனால் படுக்கையின் அருகில் இருந்த மானிட்டரைப் பார்த்துக் கொண்டிருந்த நர்சின் முகத்தில் புன்னகை மலர்ந்தது!

மதுவந்தியின் அருகாமையா, மருத்துவமனையின் சிறந்த சிகிச்சை முறையோ, சைதன்யனின் உடல்நிலை அதற்குப் பிறகு, சிறிதும் பின்னடையவில்லை!

இரண்டு நாட்களில் ஐ.சி.யுவில் இருந்து வெளியேறித் தனி அறைக்கு வந்து, அங்கிருந்தும், பத்தே நாட்களில் வீட்டுக்குச் செல்லலாம் என்றார்கள்!

ரொம்பவும் மோசமான நிலையில், ஐ.சி.யு.வில் இருந்த போது, சற்று நேரம், அவள் தொடர்ந்து கண்ணில் படா விட்டால், 'மதி, மதி' என்று சைதன்யன் தவித்ததோடு, அவனது உடல் நிலையில் பின்னடைவும் ஏற்படவே, அவனுக்குக் குணமாகிற வரையிலேனும், அவள், சைதன்யனின் அருகிலேயே இருக்க வேண்டும் என்று, மருத்துவர் சொல்லியிருந்தார்!

அதன்படி, அவளும் பெரும்பாலும் மருத்துவமனையிலேதான் இருந்தாள்!

அதுவும், அந்த ஒரு பின்னடைவுக்குப் பிறகு, அவள் குளிப்பது, சாப்பிடுவது கூட, அவன் உறங்கும் வேளை களில் தான்!

ஞானசேகரன் என்ன சொல்லிக் கேட்டாரோ, கேசவனும் அதற்குச் சம்மதித்ததோடு, அவரும் அங்கேயே இருந்து உதவிகள் பல செய்தார்!

சைதன்யன் தனியறைக்கு வந்த பிறகு, மதுவந்தி குளிக்க, தூங்க வீட்டுக்குப் போகலானாள்!

அன்று மருத்துவமனைக்கு, அவள் கிளம்பிக் கொண் டிருந்தபோது, "அப்படியென்ன சிநேகிதம்? நாள் முழு வதும் மருத்துவமனையில் கிடந்து ஊழியம் பார்க்கிறாயே, உன் உடம்பு கெட்டு விடாதா?" என்று தாயார் எரிச்சல் பட்டபோதுதான், அன்னையிடம், தந்தை என்ன சொல்லி வைத்திருக்கிறார் என்பது, மதுவந்திக்குப் புரிந்தது!

ஊழியம் பார்ப்பது சைதன்யனுக்கு என்று தெரிந்தால், பெற்றவள் என்ன சொல்லக் கூடும்?

எச்சரிப்பது போல மகளைப் பார்த்துவிட்டு, "ஓர் அவசியம் என்று வரும்போது, அதையெல்லாம் பார்க்க முடியாது, வித்யா!" என்று சற்று அழுத்தமான குரலில் கேசவன் கூறவும், அதற்கு மேல் வித்யா பேசவில்லை!

மதுவும், அன்னையிடம் வாயே திறக்கவில்லை!

மூன்று நாட்களிலேயே, சைதன்யனின் கட்டுகள், பிளாஸ்திரிகளாக மாறின.

தொழிலைப் பற்றித் தந்தையிடம் இப்படிப் பண் ணுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்று அன்றன்றைய வேலைகளைச் சரியாகவே சொல்லி அனுப்பிக் கவனிக்க வைத்தான்! அதேபோல, நாலு கிளைகளின் பொறுப்பாளர் களையும் வரவழைத்து, அவர்களிடமும், செய்ய வேண்டிய பணிகள் குறித்துத் தெளிவாகவே கூறி அனுப்பினான்!



தொழில் துறையில் இவ்வளவு தெளிவு இருந்தபோதும், சொந்த வாழ்வு பற்றி, அவனுக்குப் பெரும் குழப்பம் இருந்தது, விரைவிலேயே தெரிய வந்தது!

அவ்வப்போது மதுவந்தியை யோசனையாக நோக்குவான்!

அன்று பத்திரிகையை வாங்கிப் பார்த்த சைதன்யன் சற்று நேரம் யோசித்தபடி உட்கார்ந்திருந்தான்.

பிறகு அவளை அழைத்து, "எனக்கு வேறு எந்தப் பிரச் சனையும் இல்லை, மீண்டும் ஒரு முழு செக்கப் செய்துவிட்டு, வீட்டுக்குப் போகலாம் என்று டாக்டர் சொன்னார்! நாம் ஏன் உடனே திருமணம் செய்துகொள்ளக் கூடாது, மதி?" என்று வினவினான்.

என்ன பதில் சொல்வது என்று புரியாமல், சற்று நேரம், மதுவந்தி திணறிப் போனாள்.

வெகு சில நாட்களுக்கு முன்பாக, உரிமை கிடையாது, உல்லாசத்துக்கு மட்டுமாகக் கூட வா என்று கூப்பிட்டவன் அவனே அல்லவா?

எவ்வளவு கொடிய வார்த்தைகள்!

பதிலுக்குக் கொடுத்தாள்தான்!

ஆனால், அடுத்து நடந்த விபத்தும் நினைவு வரவே, அவளது மனம் கலங்கியது!

இப்போது, அவனுக்கு அது நினைவில்லையோ, என் னவோ? உடம்பு முழுதாகக் குணமாகாத நேரத்தில், அதை நினைவுப்படுத்தவும் அவளுக்கு மனமில்லை!

எனவே, "இப்போது எதற்கு, அந்தப் பேச்சு?" என்றபடி, அங்கிருந்த குட்டி அலமாரியைத் திறந்து, அதில் உள்ள வற்றை அடுக்கி வைக்கலானாள் அவள்.

"அதில்லை, மதி! இந்தப் பத்திரிகைத் தேதியைப் பார்த்தால், நம் திருமணம் நடந்து, மூன்று ஆண்டுகளுக்கும் மேலே ஆகியிருக்க வேண்டும்! ஆனால், நமக்குத் திருமணமே ஆகவில்லை!.... ஆகவில்லைதானே?" என்று கேட்டு, அவளது எதிர்மறைத் தலையாட்டலில் சந்தேகம் தெளிந்து கொண்டு, மீண்டும் தொடர்ந்தான்.

"என்ன காரணத்தினாலோ, நீ என்னைப் பிரிந்து விட்டிருக்கிறாய்! இப்போதும், இந்த விபத்து காரணமாகவே திரும்பி வந்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. அந்த வகையில் இந்த விபத்து நடந்தது பற்றி எனக்கு மகிழ்ச்சி தான், மதி! ஆனால், இன்னொரு தரம், இதே போலப் பிரிந்து போக மாட்டாய் என்று, எனக்கு என்ன நிச்சயம்? மீண்டும் உன்னை இழக்க, என்னால் முடியாது, கண்மணி! அதனால், நாம் உடனே மணந்து கொண்டால், மறுபடியும் என்னை விட்டு போய்விட மாட்டாய் என்று, எனக்கு நிம்மதியாக இருக்கும்! செய்து கொள்வோமா?" என்று, காரண காரியத்தோடு விளக்கி, அவளிடம் மீண்டும் கேட்டான் சைதன்யன்!

இப்படி மறுக்க முடியாத விளக்கங்களைக் கொடுத்துக் காரியம் சாதிப்பது, அவனுக்கு வழக்கம்தான்!

ஆனால், அவன், அப்படி விளக்கமாகச் சொன்ன போதுதான், விபத்தில் அடி பட்டதில், சைதன்யனுக்கு சில விஷயங்கள் மறந்து போயிருக்கிறது என்பது, மதுவந்திக்குத் தெரிய வந்தது!

அவர்கள் இருவரும் சம்பந்தப்பட்டது! அவர்களது பிரிவு, பிரிவின் காரணம், மீண்டும் மனம் வேறுபட்டு ஒருவர் நெஞ்சை மற்றவர் கீறிக் கிழித்துக் கொண்டது எல்லாம்!

இந்த விபத்தின் காரணமும், அதனோடு பின்னிப் பிணைந்த மற்ற மற்றவையும் சேர்ந்து மொத்தமாக மறந்திருப்பதற்கு, மனநிலை மருத்துவத்தில் காரணங்கள் இருக்கலாம்!



ஆனால், இந்த மறதி ஏன் வந்தது?

சைதன்யனது மூளையில் ஏதோ பாதிப்பு இருப்பதால்... மூளையை ஏதோ பாதித்திருப்பதால்தானே, இந்த அம்னீஷியா அவனைத் தாக்கி இருக்கிறது!

அப்படியானால், மருத்துவர்கள் நினைத்ததை விடவும், சைதன்யனுக்குத் தலையில் பெரிய அடியா?

இந்த மறதி நோய் குணமாகுமா, ஆகாதா என்பதை விடவும், தலையில் அடி படுவது, பிற்பாடு பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.திடுமென உயிருக்கே ஆபத்தாகி விடலாம் என்பார்களே என்று, அதுதான், அவளுக்கு மிகவும் கவலையாக இருந்தது!

முதலில், இது பற்றி, டாக்டரிடம் கேட்க வேண்டும்! அத்தோடு, இரு பெரியவர்களிடமும் சொல்ல வேண்டும்!

"பாருங்கள் சது, இப்போதைக்கு, இந்தப் பேச்சு வேண்டாம்! ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருந்து கொண்டா, திருமணம் பற்றிப் பேசுவார்கள்? நினைக்கவே சகிக்கவில்லையே! முதலில், நன்கு குணமாகி, வீடு செல்கிற வழியைப் பாருங்கள்! மற்றது அப்புறம்!" என்று இயன்ற அளவு கண்டிப்பாகக் கூறி, அப்போதைக்கு அந்தப் பேச்சை நிறுத்தி வைத்தாள்!

நிறுத்தி வைத்திருப்பதாகத்தான் அவள் நினைத்தாள்.

ஆனால், சைதன்யன் எதையும் சும்மா பேருக்கு முயற்சிக்கிறவன் அல்ல!

மதுவந்தியிடம் கேட்டதோடு நிறுத்திக் கொள்ளவும் இல்லை.

அவளுடைய தந்தையிடமும், "உங்கள் பெண்ணை எனக்குக் கட்டிக் கொடுங்கள்! இந்த விபத்தின் விளைவாக, எனக்கு உடல் ரீதியாக எந்த விதக் குறைபாடும் இல்லை, இந்தக் கடைசிப் பரிசோதனை, சற்றுப் பெரிய விபத்துக்கு ஆளான நோயாளியை வீட்டுக்கு அனுப்புமுன் செய்யும் வழக்கமான 'செக்கப்'தான் என்று, டாக்டர் சொன்னார்! பெரிய மருத்துவரிடமே கேட்டுவிட்டேன், அங்கிள்! இந்த மறதியைக் கூட, மற்றபடி மூளை சிறப்பாகச் செயல் படுவதால், பெரிய பிரச்சனையாகக் கருத வேண்டியது இல்லை என்றும் அவரே சொல்லிவிட்டார். கொஞ்ச காலத்தில், தானாகவே, மெல்ல மெல்ல, அதுவும் சரியாகி விடும் என்றார்! எதற்கும், நீங்களும் உங்களுக்கு நம்பிக்கை உள்ள மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! மற்றபடி, மதுவந்தியை எனக்கு மணம் செய்து கொடுப்பதில் உங்களுக்குத் தடை ஒன்றும் இல்லையே?" என்று, ஓர் இதமான வற்புறுத்தலோடு கேட்டான்.

இவனிடம், மகள் மனதைப் பறிகொடுத்தது எப்படி என்று புரிந்தது போல இருந்தது, கேசவனுக்கு! தோற்றப் பொலி வோடு, இப்படியொரு வாய்சாமர்த்தியமும் இருக்கிறதே!

ஆனால், விபத்துக்கு முன்பாக, அன்று மதுவந்தி அழுததும் அவருக்கு நினைவு வரவே, "திருமண விஷயத் தில், மதுவந்திக்கு, நான் முழு சுதந்திரம் கொடுத்திருக் கிறேன், மாப்பிள்ளை!" என்றார், சிறு தயக்கத்துடன் அவர்!

'ஸ்விட்ச்' போட்ட மாதிரி, சைதன்யனின் முகம் மலரவும், தன்னையறியாமல் நழுவவிட்ட வார்த்தை புரிய, அவர் முகத்தில் அசடு வழிந்தது!

அவசரமாக யோசித்து, "என்னைப் பொறுத்த வரையில் ஆட்சேபனை கிடையாதுதான்! ஆனால், முடிவு செய்ய



வேண்டியவள் மதுதான், சைதன்யன்!" என்று சமாளித்தார் அவர்!

ஆனால், பசி, தூக்கம், இரவு பகல் எதுவும் பாராமல், சைதன்யனுக்கு மதுவந்தி பணிவிடை செய்வதைக் கண் ணுக்கு நேராக பார்த்திருந்ததால், மகளின் முடிவு பற்றி, அவருக்குச் சந்தேகமும் இல்லைதான்.

அதே போலவே, அவனுடைய தகப்பனாரிடமும், "எப் படியாவது மதுவந்தியை எனக்குச் சீக்கிரமாகக் கல்யாணம் செய்து வையுங்கள், அப்பா." என்று கேட்டுக் கொண்டான், சைதன்யன்!

அவரிடமும், அவன் சொன்ன காரணம் இதுதான்! இன் னொரு தரம், அவளைப் பிரிந்து வாழ, அவனால் முடியவே, முடியாது!

"நீயும் அவளும் அப்படிப் பிரிந்து வாழ்வது, எனக்கும் பிடிக்காதுதான், நீங்கள் இருவரும் ஒருவருக்காக ஒருவர் என்று பிறந்தவர்கள் என்பதே என் கருத்து! அதனால், விரைவிலேயே மிஸ்டர் கேசவனிடம் உங்கள் திருமணம் பற்றிப் பேசுகிறேன்!" என்றார் ஞானசேகரன்.

மருத்துவமனையின் சுத்தமான கான்டீனில் அமர்ந்து காபி அருந்தியபடி, நடந்ததைப் பரிமாறிக்கொண்ட இரு தந்தையரும், மகிழ்ச்சியோடு கை குலுக்கிக் கொண்டனர்.

மிக விரைவிலேயே, இருவரும் சம்பந்திகள் ஆகப் போவது பற்றி, இரவு போய்ப் பகல் வருவது போல, இருவருக்குமே அவ்வளவு நம்பிக்கை இருந்தது!

ஆனால், நம்புவது எல்லாமே நடப்பது இல்லை என்று அவர்களும் அறிய நேர்ந்தது!




அன்று இரு பெரியவர்களுமாக மகிழ்ச்சியோடு மதுவந்தியிடம் இது பற்றிப் பேசியபோது, முதலில், அவள் அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை!

சைதன்யனது மறதி நோய்ப் பற்றி முதலில் அவர்களிடம் கூறி, அதைப் பற்றி மருத்துவரிடம் தெரிவிக்கச் சொன்னாள்.

கேசவன் உடனே, அது பற்றி சைதன்யன் தன்னிடம் கூறியதை எடுத்துரைத்தார். "மெல்ல மெல்ல எல்லாம் நினைவு வந்துவிடும் என்று மருத்துவரே சொன்னாராம்!" என்றார்.

"அப்படியா?" என்று கேட்டு, ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, இந்த அம்னீஷியாவின் காரணம் பற்றித் தன் ஐயத்தையும், பயத்தையும் அவர்களிடம், மதுவந்தி எடுத்துரைக்கவும், இரு தந்தையருக்குமே உள்ளூரப் பயம் வந்தது!

இருவருமாக ஓடிச் சென்று, உரிய மருத்துவரிடம் பேசிவிட்டுச் சிரித்த முகமாகத் திரும்பி வந்தனர்.

"நீ பயப்படுவது போல, ஒன்றும் இல்லை, மதும்மா! விபத்தில் அடிபட்டு, சுய உணர்வு இல்லாமல் போனதால், அப்போதே, மூளையை நன்றாக 'ஸ்கேன்' செய்து பார்த்து விட்டார்களாம்! மூளையைப் பொறுத்தவரை, எந்தவித அச்சத்துக்கும் இடமே கிடையாது என்று டாக்டர் சொல்லி விட்டார்!" என்று, சந்தோஷமாகச் சொன்னார் ஞானசேகரன்!

"சற்று நேரம் எங்களையும் காபுராப் படுத்திவிட்டாயே, பாப்பா!" என்று சிரித்தார் கேசவன்.



ஆனால், அவ்வளவு இலகுவாக, மதுவந்தி திருப்தி அடையவில்லை! "பின்னே, ஏன் இந்த அம்னீஷியா ஏற்பட்டிருக்கிறதாம்? அதைக் கேட்டீர்களா?" என்று மீண்டும், அது பற்றியே விசாரித்தாள்.

"கேட்டோம்மா! அது, மன நிலை தொடர்பானது! மூளையின் ஆரோக்கியத்துக்கும், அதற்கும் ஒன்றும் இல்லை என்று டாக்டர் சொன்னார்!" என்று கேசவன் தெளிவுபடுத்தினார்.

"புரியவில்லையே! நினைப்பதும், மறப்பதும், மூளையின் செயல்தானே? அப்படியென்றால், மனநிலை என்பது மூளையைப் பொறுத்ததுதானே? மறதி நோய் என்பதும்..."

அன்றைய மகளின் கதறல் கேசவனுக்கு ஏனோ நினைவு வந்தது! அவரது சிரிப்பும் மறைந்தது.

அவர் கலக்கத்துடன் பேச்சின்றிப் பார்த்துக்கொண்டிருக்க, ஞானசேகரன் விளக்கலானார்.

"மறப்பதை நோயோடு சேர்க்க முடியாது, மது! வயதாவதில், சோர்வில், களைப்பில், யோசனையில் என்று மறதிக்கு எத்தனையோ காரணங்கள்! அதையெல்லாம், மூளையின் பாதிப்பு என்று கொள்ள முடியாதும்மா!"

"ஆனால், உங்கள் மகனின் பிரச்சினையை, இவற்றுள் எதனோடும் சேர்க்க முடியாதே! ஒரு குறிப்பிட்ட விஷயம் மட்டுமல்லவா, அடி முதல் நுனி வரை மறந்திருக்கிறது!" என்றாள் அவள் விடாமல்.

"இது மனிதனின் 'சைக்காலஜி'யோடு சேர்ந்தது, மதும்மா! பிடிக்காத விஷயத்தை மனம் அடியோடு ஒதுக்கி..." என்று சொல்லிக்கொண்டே போன ஞானசேகரன், சட்டெனப் பேச்சை நிறுத்தி, அவளைக் கூர்ந்து நோக்கி, "மது, நீ என்ன சொல்ல விரும்புகிறாய்?" என்று கேட்டார்.

''ஏனென்றால், நீ எதையோ எங்கள் மூளைக்குள் ஏற்ற முயல்வது, எனக்கு நன்றாகத் தெரிகிறது! எனக்கு முன்னே, உன் அப்பாவுக்கும் தெரிந்து போயிற்று என்று தோன்றுகிறது!'' என்றார் சற்று வறண்ட குரலில்!

மெல்ல நிமிர்ந்து, இரு பெரியவர்களின் முகங்களையும் பார்த்தாள் மதுவந்தி.

ஒரு பெருமூச்சுடன், ''சற்றுமுன் சொன்னீர்களே அங்கிள், பிடிக்காத விஷயத்தை, மனம்அடியோடு ஒதுக்கி விடுவது பற்றி! நானும், அது பற்றிப் படித்திருக்கிறேன்! தாயின் விதவைக் கோலத்தைப் பார்க்க விரும்பாததால், ஒரு பையனுக்குக் கண்ணே பார்வையிழந்து போயிற்றாம்! சைதன்யனுக்கும் அது, எவ்வளவு தூரம் பிடிக்காமல் போயிருந்தால், அவர் அதை எவ்வளவு வெறுத்திருந்தால், அவருக்கு, அதில் ஓர் அணுவளவு... ஓர் இணுக்கு கூட, நினைவில் இல்லாமல் போயிருக்கும்! இப்போது அடியோடு மறந்து போயிருந்தால், அது என்ன என்பதோடு, அந்த வெறுப்பின் அளவும் அவருக்குப் புரியாதிருக்கலாம்! ஆனால்.. ஆனால்'' என்றவளின் பேச்சு ஒரு கணம் தடைப்பட்டது!

தந்தையார் இருவரும் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க, தொண்டையில் அடைத்ததை விழுங்கிச் சமாளித்துக் கொண்டு, அவள் தொடர்ந்தாள். ''அந்த வெறுப்பு எத் தகையது என்று எனக்குத் தெரியும், அங்கிள்! என் அன்பில், அவருக்குக் கொஞ்சமும் நம்பிக்கையே கிடையாது என்பதும் தெரியும்! அவர் நிறையச் சம்பாதித்துவிட்ட தால், இப்போது அவரோடு ஒட்டிக்கொள்ள வந்ததாக எண்ணுகிறார். கா... காசுக்கு வரும் பெண்களைப் போல...''

அன்று மகள் அழுத காரணம் கொஞ்சம் புரிபட்டுக் கேசவன் இறுக, ஞானசேகரன் அவசரமாகக் குறுக்கிட்டார்.



''ஏதோ ஒரு கோபத்தில், அவன் அளவு மீறிப் பேசியிருக்கலாம், மது! நாம் எல்லோருமே, செய்வதுதானே? எதிரியின் மனதைக் காயப்படுத்துவது ஒன்றே குறியாக, இல்லாததைக்கூடப் பேசிவிடுவது இல்லையா? அதே போலக் கோபத்தில், உன்னை வருத்தவென்று, சைதன்யனும், எண்ணாததையே சொல்லியிருக்கலாம்! அதைப் பெரிதாகக் கருதாதே! அவனது, ஆழ்மனம் அப்படி நினைத்திருந்தால், இப்போது உன்னை மணக்க, அவன் இப்படித் துடிக்க மாட்டான்! ஒன்று சொல்கிறேன், கவனி! ஒருவருக்கு அம்னீஷியாவால் எவ்வளவு பாதிப்பு இருந்தபோதும், தன் தீவிர நம்பிக்கைகள், கோட்பாடுகளுக்கு மாறாக, அதனால் பாதிக்கப்பட்டவர் எதையும் செய்யமாட்டார் என்று நான் படித்திருக்கிறேன்! அவன் உன்னை மணக்க விரும்புவதே, அந்த வார்த்தைகளை, அவன் நம்பிச் சொல்லவில்லை என்பதற்குச் சான்று. நன்கு யோசித்துப் பார்! உனக்கே விளங்கும்'' என்றார் அவர்.

கேசவனும் இறுக்கம் மறைந்து, ஒப்புதலாய்த் தலையாட்டி, ''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறதும்மா!'' என்று, ஞானசேகரனை ஒத்துப் பேசினார்.

''இல்லை அப்பா!''என்று மறுத்தாள் மகள். ''எனக்கு, இந்த விஷயத்தில், அவ்வளவு நிச்சயமில்லை! எப்படியும், அங்கிள் சொல்வதை உறுதியாக நம்ப, என்னால் முடியாது! விபத்துக்கு முன்னால், சைதன்யன் என்னை மிகவும் வெறுத்தார் என்பது எனக்கு நிச்சயம்! இப்போது, இந்த மாதிரி தெளிந்துவிட்டால், மீண்டும் அதே வெறுப்பு வந்துவிடும் என்பதிலும், எனக்கு ஐயமில்லை. அங்கிள்!'' என்று ஞானசேகரனிடம் திரும்பினாள் மதுவந்தி.

''அங்கிள், உங்கள் மகன், காரண காரியம் அலசி, ஆராய்ந்து முடிவெடுக்கிறவர். அப்படி எடுத்த முடிவை

லேசில் மாற்றிக் கொள்ளமாட்டார் என்பதும், உங்களுக்கும் தெரிந்துதான் இருக்கும்! இந்த மறதி நோய் குணமாகி, அவரது மனம் தெளிகிறபோது விபத்து நேர்ந்தபோது இருந்த அந்த வெறுப்பும், அவருக்கு அப்படியே நினைவு வரப் போகிறது! குறையாமல், அப்படியே இருக்கப் போகிறது! அந்த மாதிரி வெறுக்கிறவரோடு சேர்ந்து வாழ்வது கடினம், அங்கிள்! எவ்வளவு கடினம் என்றும் எனக்குத் தெரியும்! ஓர் ஐந்து நிமிஷம் என்னால் தாங்க முடியாததை, வாழ்நாள் முழுவதும், எப்படிச் சகிப்பது? அதனால்தான் சொல்லுகிறேன்! இந்தத் திருமணப் பேச்சைத் தயவு பண்ணி, இனி எடுக்காதீர்கள்! வேண்டாம்!'' என்று முடித்தாள் அவள்.

நீளமான பேச்சு!

ஆனால், அவள் சொன்னது எதையும் மறுக்க முடியாத விதமான, ஆணித்தரமான பேச்சு!

முன்னெப்போதையும்விட, சைதன்யனும், மதுவந்தியும் ஒருவருக்கொருவர் எவ்வளவு பொருத்தமானவர்கள் என்று, ஞானசேகரன் உள்ளூர வியந்தார்!

முன்பெல்லாம் இருவருக்குமே பொலிவான தோற்றப் பொருத்தம், படிப்பு, பண்பு, இளமை என்று, தேவையான எல்லாப் பொருத்தங்களும் இருக்கின்றன என்று நினைப்பார்!

ஆனால், இப்போது பார்த்தால், மனதில் உறுதி, தெளிவான பேச்சு, ஆராய்ந்து முடிவெடுக்கிற விதம், அதைத் தெளிவாக வெளிப்படுத்துகிற பாங்கு என்று, அவர்கள் இருவரும் நடந்துகொள்கிற விதத்திலும் பெரும் ஒற்றுமையை அவரால் காண முடிந்தது!

இருவரும் இணைந்தால், பல பேருக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்வார்கள்!

ஆனால், இவர்கள் இருவரையும் ஒன்று சேர்ப்பது எப்படி?



முன்பு இவள் தவறு செய்த வருத்தத்துடன் உருகி வந்தபோது, சைதன்யன் விறைத்துக் கொண்டு போனான்!

இப்போது, அவன் ஒரு மாதிரி இளகி வரும்போது, இவள் மறுக்கிறாளே!

ஆனால், மதுவந்தியின் பேச்சைத் தப்பு சொல்லவும், அவரால் முடியவில்லை!

சைதன்யனுக்குக் கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்பது, அவர் அறியாதது அல்ல!

மதுவந்தியும், பிடிவாதத்தில் ஒன்றும் குறைந்தவள் அல்ல என்று, அவளுடைய தந்தையே கூறுகிறாரே!

இரு துருவங்களையும் பார்த்தவாறு நிற்கும் இவர்கள் இருவரும் இணைவதானால், அது கடவுள் கிருபையால் மட்டும்தான் நடக்கும்!

நடந்துதான் தீரவேண்டும் என்று வேகத்துடன் நினைத்தார், அந்தத் தகப்பனார்!

''சைதன்யன் மாத்திரை சாப்பிடுகிற நேரம் ஆயிற்று! சாப்பிட்டாரா என்று பார்க்கப் போகிறேன்!'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றாள் மதுவந்தி.

அவள் கண்ணுக்கு மறையும் வரை பார்த்திருந்த ஞானசேகரனுடைய கண்களில் நம்பிக்கையின் ஒளி தெரிந்தது!

கேள்வியாய் நோக்கிய கேசவனிடம், ''முடியாது என்பதற்கு, இவ்வளவு பேசினாளே! அவனுக்கு மருந்து கொடுக்கிற நேரத்தை மறக்காமல் நினைவு வைத்து ஓடுகிறாள் பாருங்கள்!'' என்று மகிழ்ச்சியோடு உரைத்தார் மற்றவர்!

ஆனால், கேசவன் அப்படி ஒன்றும் மகிழ்ந்து போய் விடவில்லை! உங்களது உற்சாகத்தைக் குறைப்பதாக எண்ணாதீர்கள்! ஆனால், மதுவைப் பொறுத்தவரையில், அன்பும் கருணையும் வேறுவேறு. அவள் அம்மா ஒரு தரம்

என்னவோ கடுப்பாகச் சொன்னாள் என்று, அவளிடம் இரண்டு மாதங்கள் பேசாமலே இருந்தாள். அந்தச் சமயத்தில், மனைவிக்கு, உடம்பு சரியில்லாது போயிற்று! கருப்பையில் கட்டி வந்து, அறுவை சிகிச்சை நடந்தது! இப் போதுகூட, வித்யா அதுபற்றிச் சொல்வதுண்டு! 'வல்லரக்கி! என்ன வேண்டும், ஏது வேண்டும் என்று, பார்த்துப் பார்த்து அவ்வளவு செய்தவள். மனதுக்கு ஆறுதலாக, கோபத்தை மறந்துவிட்டேன் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், வீம்பு பிடித்துக் கொண்டு இருந்துவிட்டாளே' என்பாள்! இரக்கம், பரிவு, பாசம் எல்லாமே நிறையவே இருந்தாலும், ஓர் அளவுக்கு மேல், மது அதிகமாக வளைந்து கொடுக்க மாட்டாள்! நானும், பிள்ளைகளின் முதுகெலும்பை உடைத்து, அடக்கி ஒடுக்கி வளர்த்திருக்கவில்லை!'' என்றார் அவர் கவலைக் குரலிலேயே.

''அப்படித்தான் வளர்க்க வேண்டும்! சொல்லப் போனால், பாரதியார் பாடலில் வருவது போல, மதுவந்தியின் நேரான பார்வையும், நிமிர்வும்தான், தன்னை ஈர்த்ததாகச் சைதன் யனே சொல்லியிருக்கிறான்!'' என்றார் ஞானசேகரனும், ''ஆனால், இப்போதைய பிரச்சனைக்குத் தீர்வு என்ன என்றுதான் புரியவில்லை!'' என்றார் தொடர்ந்து!

''எனக்கும் அதே கவலைதான்!'' என்று ஒத்துப் பாடினார் கேசவனும்!

மறுபடியும் இரண்டு பேருமே மதுவந்தியிடம் தனித் தனியாகப் பேசிப் பார்ப்பது என்று முடிவு செய்தார்கள்.

மருந்து எடுத்துக் கொடுப்பதற்காக மதுவந்தி அறைக்குள் சைதன்யன் ஆவலாக அவளைப் பார்த்தான்!

தந்தையார் இருவரும், குறைந்தபட்சமாக ஒருவரேனும் அவளிடம் பேசியிருப்பார்கள் என்பது, அவனுக்கு நிச்சயம்!



சாதகமான பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தவனுக்கு, அவள் முகத்தில் எந்த விதமான மாறுபாடும் தெரியாதது, ஏமாற்றமாக இருந்தது!

ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''என்ன, ரொம்ப நேரமாக ஆளையே காணோமே!'' என்றான் அவன்.

லேசாக முறுவலித்துவிட்டு, அவள் பேசாமலே மாத்திரையை எடுக்கவும், ''எனக்கு மிகவும் போரடித்தது தெரியுமா?'' என்று குறைப்பட்டான்.

''இன்னும் ஓரிரு தினங்கள். அப்புறமாக வீட்டுக்குப் போய்விட்டால், எல்லாம் சரியாகிப் போகும்! போரடிக் காது!'' என்று மாத்திரையை நீட்டினாள் மதுவந்தி!

மாத்திரைகளை வாங்கிக் கொள்ளாமலே, ''போரடிக்காது என்று, எப்படிச் சொல்லுகிறாய்? நீயும் கூட வரப் போகிறாயா?'' என்று கேட்டான் சைதன்யன்.

''உங்கள் வீட்டுக்கு நீங்கள்தான் போகவேண்டும்! நான் எப்படி வர முடியும்? மாத்திரையைப் போட்டுக் கொள் ளுங்கள்!'' என்றாள் அவள்.

''உன் வீடும் அதுவாக ஆகிவிட்டால், வந்துவிடலாம் தானே? சொல்லு, நம் திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்? முதலில் எளிமையாகக் கோவிலில் கல் யாணத்தை முடித்துவிட்டு, அப்புறமாக வரவேற்பைப் பெரிதாக வைத்து விடலாம்!'' என்று திட்டமிடலானான் அவன்.

சைதன்யனின் பார்வை தன் முகத்திலேயே இருப்பதை, மதுவந்தி கவனியாமல் இல்லை!

எனவே, முகம் மாறாமல் காத்து, ''மருத்துவமனையில் இந்தப் பேச்சு வேண்டாம் என்றேனே. அதற்குள் மறந்து விட்டதா? இந்த நிலையில் இருந்து கொண்டு, வாழ்க்கை முழுவதற்கும் திட்டமிடுவது, எவ்வளவு பெரிய்ய தப்பு!

முதலில் மாத்திரையை போட்டுக் கொண்டு, சீக்கிரமாக, நூறு சதவீதம் குணமாகிற வழியைப் பாருங்கள், சார்'' என்று கேலி போலப் பேசி, மாத்திரைகளை அவன் கையில் வைத்தாள் அவள்.

''எதனாலோ, என்னை உனக்குப் பிடிக்கவில்லை! அதுதானே?'' என்று புரியாத எரிச்சலுடன் கூறி, அவள் கையில் தந்த மாத்திரைகளைப் படுக்கையில் போட்டு விட்டு, தலையைப் பலமாகத் தட்டிக் கொண்டான் அவன்.

அவசரமாக, அவன் கையைப் பிடித்துத் தடுத்து, ''அச்சோ, என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி? பிடிக்காவிட்டால், இப்படி, இங்கே வந்து கிடப்பேனா?'' என்று கேட்டாள் மதுவந்தி!

பிடித்த கையைத் தன் மறு கரத்தால் பற்றி, ''உண்மையைச் சொல்லு, மதி! உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா, இல்லையா?'' என்று அவளது கண்களை நேரே பார்த்து வினவினான் சைதன்யன்.

''அதுதானே சொன்னேனே, பிடிக்காவிட்டால்...''

''ஊகூம்! இந்த நழுவல் எல்லாம் வேண்டாம்! நேர்ப் பதில் சொல்லு! பிடித்திருக்கிறதா, இல்லையா?''

''பிடித்திருக்கிறது!''

''பின்னே திருமணம் செய்துகொள்ள வேண்டியதுதானே?''

கையை விடுவித்துக்கொண்டு, தலை சரித்து அவனைப் பார்த்தாள் அவள். ''உங்களுக்குச் சிகிச்சை செய்கிற பெரிய டாக்டரைக் கூடத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது! அலட்டிக் கொள்ளாமலே, நம்பிக்கையூட்டும் விதமாக, என்னமாய்ப் பேசுகிறார்!'' என்று சிலாகித்தாள்.

அதே விதமாக அவளைப் பார்த்து, ''இந்த மாத்திரை களைச் சாப்பிட மாட்டேன் என்று தூர எறிந்துவிட்டால் என்ன செய்வாயாம்?'' என்று கேட்டான் அவன்.



''நோயாளி முரட்டுத்தனம் பண்ணுகிறார், அதனால், ஊசி மருந்தாய் உள்ளே செலுத்தி விடுங்கள் என்பேன்!'' என்றாள் அவள் அலட்டிக் கொள்ளாமல்!

''பாவி! என்னைச் சல்லடைக் கண்ணாகத் துளை போடு வதில், உனக்கு அப்படி, என்னதான் ஆசையோ?''

''பின்னே, தொல்லை பண்ணாமல், மாத்திரைகளைச் சாப்பிடுங்கள்!'' என்று எடுத்துக் கொடுத்தாள் அவள்.

மேற்கொண்டு பிரச்சனை பண்ணாமல், மாத்திரைகளை யும் தண்ணீரையும் வாங்கி, விழுங்கி வைத்தான் சைதன்யன்.

எடுத்தவை எல்லாவற்றையும், மறுபடியும் பழையபடி அவள் அடுக்கி வைப்பதைப் பார்த்தபடி, ''நான் என்ன மாவது பண்ணி, உனக்கு வெறுப்பேற்றி விடவில்லையே, மதி?'' என்று விசாரித்தான்.

''இப்போதுதானே, இதற்குப் பதில் சொன்னேன்!''

''அதில்லை! மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, நாம் திரு மணத்துக்கு எவ்வளவு ஆசைப்பட்டோம் என்று எனக்கு நினைவு இருக்கிறது! இப்போதும், எனக்கு ஆசை தான்! ஆனால், நீ தட்டிக் கழிப்பதைப் பார்த்தால்... நான் ஏதோ தப்பு செய்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது!''

இல்லையே! அவன் தப்பே செய்யவில்லையே! தப்பே செய்யாதவனைத் தவறாகக் கருதி, இன்றையத் தவிப்புக்குப் பிள்ளையார் சுழி போட்டவளே அவள்தான்! அப்புறம், தப்பு மேல் தப்பாக, எல்லாம் தப்பாகிப் போயிற்று!

அந்தப் பிள்ளையார் சுழியை, இவன் மன்னிக்கவே இல்லை என்று, இவனிடமே யார் எடுத்துச் சொல்வது?

ஆனால், அன்று அவன் பேசிய பேச்சு!

''என்ன, அப்படித்தானா?'' என்று கேட்டான் அவன்!

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறான்! இவன் முன்னிலையில், கண நேரம்கூடக் கவனம் கலையக் கூடாது போல! உடனே கண்டுபிடித்து என்னமாகக் கேட்கிறான்!

இத்தனைக்கும் பத்து நாட்களுக்கு முன்பாகப் பயங்கரமாக அடிபட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டு கிடந்தவன்!

"சீக்கிரமாகக் குணமாகி, வீட்டுக்குப் போவதோடு, அன்றாட அலுவலையும் முன்போல முழுசாகப் பார்க்கத் தொடங்குங்கள்! 'சும்மா இருக்கும் மனம், சாத்தானின் உலைக்களம்' என்பதுபோல, அங்கிளிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு, இங்கே சும்மாவே இருக்கிறீர்கள் அல்லவா? அதுதான், இப்படி இல்லாததையெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது!" என்றாள் மதுவந்தி.

"அப்படியானால், இல்லாததுதான்" என்று அவன் தொடங்கவும் பொறுமையிழந்து இடைமறித்தாள் அவள்!

"இப்படி வார்த்தைக்கு வார்த்தை, ஆராய்ச்சி பண்ணாதீர்கள், சது! அப்படியெல்லாம், ஒவ்வொரு வார்த்தையையும் எண்ணிப் பார்த்து, அளந்து பேச என்னால் முடியாது! அப்புறம், இன்னொன்று! நாளையிலிருந்து, நான் மாலையில் மட்டும்தான் வருவேன்..."

இப்போது, அவன் இடை மறித்துக் கேட்டான். "ஏன்?"

"ஏன் என்றால், நான் வேலைக்குப் போக வேண்டாமா? இப்போதே, பத்து நாட்களுக்கு மேல் லீவு போட்டாயிற்று! அதனால்..."

மீண்டும் இடைமறித்து, "அதனால் என்ன? அப்பாதானே உன் முதலாளி? எனக்கு உதவி செய்வதற்காக உனக்கு இன்னும் சில நாட்கள் லீவு தரமாட்டாரா, என்ன?" என்றான் சைதன்யன்!

பிரமிப்புடன், அவனைப் பார்த்தாள் மதுவந்தி! கூடவே, ஒரு திகைப்புடன்!






மதுவந்தியின் கண்களில் பிரமிப்பைப் பார்த்ததும், சைதன்யன் குழம்பினான்.

வியந்து, "என்ன மதி? ஏன் அப்படிப் பார்க்கிறாய்?" என்று விசாரித்தான்!

"உங்களுக்குப் புரியவில்லை? நான், உங்கள் அப்பாவிடம் வேலை செய்வது பற்றிச் சொன்னீர்களே! அது உங்களுக்கு நினைவு மறந்ததோடு, சேர்ந்த விஷயம்! இப்போது, அது நினைவு வந்தது என்றால் எல்லாமே, சீக்கிரமாக நினைவு வந்துவிடும் என்றுதானே, அர்த்தம்? இதை முதலில் அங்கிளிடம் சொல்ல வேண்டும்! சந்தோஷப்படுவார்!" என்றாள் அவள் பரபரப்புடன்.

"சொல்லு! ஆனால், அப்பா சந்தோஷப்படமாட்டார்!"

"ஏனோ? உங்களது நினைவு மண்டலம் சரியாக இயங்கத் தொடங்கியது, அவருக்குச் சந்தோஷமாக இராதென்றால், வேடிக்கையாக இல்லை?"

"நீ அப்பாவிடம் வேலை செய்வது, தானாக நினைவு வந்திருந்தால் அப்படித்தான்! அவரே அதைச் சொல்லியிருந்தால், அதில் சந்தோஷப்பட என்ன இருக்கிறது?"

"ஓ! ஏற்கனவே, அங்கிள் சொல்லிவிட்டாரா?" என்றாள் அவள் சிறு ஏமாற்றத்துடன்!

ஏமாற்றத்தை மீறி, உள்ளூர ஒரு நிம்மதி பரவுவதையும், அவளால் உணர முடிந்தது!

இது சரியில்லையே! விட்டால், இதிலேயே, சுகம் காணக்கூடத் தோன்றிவிடும்!

விளைவு எண்ணவாக ஆனாலும், சைதன்யனுக்கு முழுமை யாகக் குணமாகித்தான் தீர வேண்டும். அதற்கு முன்ன தாகவே, அவளும், சைதன்யனிடம் இருந்து, விலகிச் சென்றுதான் தீர வேண்டும். ஏனெனில், இன்னொரு தரம், அந்தப் பேச்சு தாங்க முடியாது என்று தனக்குத்தானே, மதுவந்தி அழுத்தமாக அறிவுறுத்திக் கொள்ளுகையில், அவன் பேசிக் கொண்டிருந்ததைத் தொடர்ந்தான்.

"பின்னே? உன் தகுதிகளைப் பற்றி அறிவிப்பதற்கு ஒரு வாய்ப்பாயிற்றே! சொல்லாமல் இருப்பாரா? விட்டால், வேலையில் நீ எவ்வளவு கெட்டிக்காரி என்று, ஒரு முழுப் பாட்டே பாடியிருப்பார்!"

"உங்களுக்குப் போரடித்தது போல!" என்றாள் அவள் எங்கோ கவனம் போல.

"போரா? உன்னைப் பற்றிய பேச்சாயிற்றே! தெவிட்டாத தேவ கானமாக இருந்ததும்மா! பாவி நர்ஸ்! ஆசை தீரக் கேட்கவிடாமல், ஏதோ பரிசோதனைக்கு என்று என் ரத்தத்தை உறிஞ்சி எடுக்க, சிரிஞ்சோடு வந்துவிட்டார்கள்!" என்றான் அவன் சோகமாக.

"உங்கள் சிகிச்சைக்கு உதவியாக ரத்தம் எடுக்க வந்தால், பாவி என்றா சொல்வது?"

"வந்த நேரம் அப்படி! அயனான நேரத்தில் குறுக்கிட் டால், கவர்னராக இருந்தாலும் அப்படித்தான்! 'பூஜை வேளைக் கரடி' என்பதில்லையா? இப்போதுகூட, ராஜாவும் ராணியும் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருப்பது புரியாமல், அப்படி ஒரு கரடி குறுக்கிடப் போவதாகத் தோன்றுகிறது!" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, அறைக் கதவு தட்டப்பட்டது!



கதவைத் திறந்து கொண்டு, பெரிய டாக்டரோடு, ஒரு கும்பலே வந்தார்கள்!

எல்லோருமே மருத்துவர்கள் என்பது, நன்றாகவே தெரிந்தது!

"என்ன யங் மேன், எப்படி இருக்கிறாய்?" என்றபடி, சைதன்யனின் மெடிக்கல் சார்ட்டை எடுத்துப் பார்த்துவிட்டு, "மனவலிமைக்கு, இவர் ஓர் எடுத்துக்காட்டு! மருத்துவர் களோடு ஒத்துழைப்பதிலும், அப்படித்தான்! பத்து நாட்களுக்கு முன், இவர் உயிர் பிழைப்பதே சந்தேகமாக இருந்தது என்றால், நம்ப முடிகிறதா? ஓ.கே. யங்மேன்! எல்லாம் சரியாக இருக்கிறது! மற்ற டெஸ்ட் முடிவுகள் நாளை வந்துவிடும் காட்டிவிட்டுக் கிளம்பலாம்! இதே போல, உடம்பை பராமரித்து வா!" என்றவர், மதுவந்தியை கவனித்து, "ஓ, நீயாம்மா? இவருடைய 'மதி' அல்லவா? குணமாகும் துடிப்பு எங்கிருந்து வந்தது என்று இப்போது புரிகிறது! ஓகே, ஓகே! அழைப்பு அனுப்ப மறந்து விடாதீர்கள்!" என்று சிரித்துவிட்டுப் போனார்!

"எப்போது என்று கேட்டிருந்தால், நன்றாக இருந் திருக்கும்!" என்று தெளிவாக முணுமுணுத்தான் சைதன்யன்.

அவன் பேச்சைக் கவனியாதது போல, "கரடிப் பிடி என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! உங்கள் கரடி பாராட்டுகிறதே!" என்றாள் அவள்.

"கரடியின் பாராட்டைச் சாதாரணமாக நினையாதே, மதி! இராமாயணம் நினைவிருக்கிறதா? அதில், ஜாம்பவான் என்கிற கரடியின் பாராட்டுதான், கடலைத் தாண்ட அனுமாருக்குத் திடம் கொடுத்ததே! திரையுலக ஜாம்பவான், எழுத்துலக ஜாம்பவான் என்பார்களே! திறமை அறிந்து பாராட்டக் கூடியவர், திருவாளர் கரடியார்தான்!" என்று டீ, ஷர்ட் டில் இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான் அவன்.

பழைய சைதன்யன் திரும்பிக் கொண்டிருக்கிறான்!

கேட்பவர் முகத்தில் புன்னகை தோன்றுமாறு, இலகுவான பேச்சு! ரசித்தபடி, கூட இருந்து கேட்டுக் கொண்டே இருக்கத் தோன்றும்!

ஆனால், இந்த ஈர்ப்பு அவளுக்கு நல்லதில்லையே! பிரிவை, மேலும் கடினமாக்குமே!

ரொம்பவும் உறுதி குலைந்து போகுமுன், விலகிப் போகிற வழியைத் தேடவேண்டும்! வேலையில் இருந்தும்!

சத்தமின்றி விலகுகிற வழியை மதுவந்தி தேடியபோது, பெரிய தலைகள் இரண்டும், அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கும் நோக்கத்தோடு, அவளிடம் வந்து பேசலாயினர்.

மகளை அறிந்து தந்தை, அதிகம் பேசாமல், ஆனால் ஞானசேகரனை ஆதரிப்பதைத் தெளிவாகக் காட்டியபடி, பெருமளவு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க, மற்றவர் அவளது மனதை மாற்ற முயற்சி செய்தார்!

'தாலி மகிமை' என்று ஒன்று இருக்கிறதாம்! அதன்படி, திருமணம் ஆகிவிட்டால், மற்ற பிரச்சனைகள் எல்லாம் மறைந்து போய்விடுமாம்!

"அப்படியானால் ஏன் அங்கிள், நிறைய விவாகரத்துகள் நடக்கின்றன?" என்று, சாதுவாய் வினவினாள் அவள்.

"அது... அதில் ஏதாவது தப்பு இருக்கும்மா! பொய், ஏமாற்று, குணக்கேடு..." என்று அவர் அடுக்குகையில், மதுவந்தி குறுக்கிட்டாள்.

"சைதன்யனுக்கு முழு நினைவும் இல்லாத நிலையில், நான் அவரை மணந்து கொண்டால், அதுவும் பொய் ஏமாற்று, குணக்கேடுதானே, அங்கிள்?"



"என்னம்மா, நீ? எதனோடு, எதைப் போய், சேர்த்துப் பேசுகிறாய்? நாம் செய்வது, பையனது நன்மைக்காக!"

"அப்படியென்று, அவர் நினைக்க வேண்டுமே! நினைவு தெளிவில்லாமல் நோயுற்று இருக்கும்போது, கபடமாக நான், அவரை மணந்ததாய் எண்ணினால்? ஏற்கனவே, பணத்துக்காகவே மறுபடியும் அவரது வாழ்வில் குறுக்கிட்டதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்!"

"உளறல்!"

"ஆனால், அவர் நூறு சதவீதம் புத்தி தெளிவோடு இருக்கும் போது, சொன்ன வார்த்தை அது. அப்படி இருக்கும்போது..."

"கேசவன், நீங்கள் மதுவை இந்தக் காலத்துப் பெண்ணாக வளர்க்கவில்லை!" என்று பொறுமையிழந்து கூறினார், ஞானசேகரன்.

மற்ற இருவரும் சற்றுத் திகைத்து நோக்கவும், அவர் சொன்னார்.

"பின்னே என்னம்மா? உனக்கு, அவன் மேல் அன்பிருக்கிறது, ஆசையும் இருக்கிறது! அவனோடு சேர்ந்து வாழ்ந்து, குழந்தை குட்டி பெறுவது பற்றிக் கனவும் கண்டிருப்பாய்! இப்போது, அது நிறைவேறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால், இரு கை கொண்டு, அதைப் பற்றிக் கொள்ளாமல் நீதி நியாயம் பார்த்துக் கொண்டிருக்கிறாயே! இது நிலைக்குமா, அவனுக்கு முழு நினைவு வந்ததும் வெட்டிவிட்டால் என்ன ஆகும் என்கிறாயா? அப்போதும்தான் என்ன? ஒன்றும் இல்லாததற்கு, அரை ரொட்டி லாபம்தானே என்று எடுத்துக் கொள்ள தெரியவில்லையே!" என்றார் அவர்!

"அரை ரொட்டி கிடைத்தாலும் போதும் என்று ஏங்கும் அளவு அன்பு எனக்கு இல்லை என்றால்..."

''பொய் என்பேன்!'' என்றார் அவர், சற்றும் தயங்காமல்!

''பாரம்மா, நீங்கள் இருவரும் ஒருவர் மீது, ஒருவர் முழுமையாக ஆசைப்பட்டவர்கள்! ஒன்றாக வாழ, ஒரு வேகத்தோடு நினைத்தவர்களும்கூட! இடையில், ஏதோ பிரிவு வந்தபோதும், இப்போதும், அந்த நெஞ்சம் கொஞ் சமும் குறைந்து விடவில்லை... இல்லை என்று சொல்லாதே! எனக்குத் தெரியும்! அன்றைக்கு, உண்மை தெரிந்து நீ வந்த போது, உங்கள் இருவர் முகங்களையும் பார்த்தவன் நான்!

''இப்போதும், பிழைப்பானா, மாட்டானா என்கிற நிலையிலும், அவன் உன்னைத்தான் தேடினான். உன்னைத் தான் அறிந்து கொண்டான்! நீயும் உங்கள் தகராறில், அப் போது நீ மரணகாயம் பட்ட மாதிரி துடித்துக் கொண்டிருந்த தாக, உன் அப்பா சொன்னார். அந்த நிலையிலும், வினாடி கூடத் தயங்காமல், அப்படியே எழுந்து ஓடி வந்தாய், ஊண் உறக்கம் பாராமல், கூடவே இருந்து காப்பாற்றினாய்!

''இப்போதும், உனக்கு நேசமோ, அது நிறைவேற வேண்டும் என்ற ஏக்கமோ இல்லை என்று சொல்லப் போகிறாயா?'' என்று கேட்டார் பெரியவர்!

எப்படிச் சொல்லுவாள்?

அவள் மௌனமாகத் தலையசைக்கவும் அவர் தொடர்ந்தார்!

''உனக்கு மட்டுமல்ல! அவனுக்கும் இருக்கிறது என் பதும், தெளிவே! உங்களிடையே ஆசை இருக்கிறது! நேசம் இருக்கிறது! இதெல்லாம் இல்லாமலே, எத்தனை திருமணங்கள் நடந்து, வெற்றியடைந்தும் இருக்கின்றன? கணவன் மனைவி உறவு என்பது, காமத்தில் தொடங்கி, அக்கறையிலும் நட்பிலும் வளர்ந்து, கருணையில் நிறைவு பெறுவது என்று ஒரு பெரியவர் எழுதியிருக்கிறார்! கருணை என்றால் என்ன? குறைகளைப் பொறுத்துப் போவது! குறையற்றவர் யார்? கணவன் மனைவிக்கிடையே உள்ள



பாசம், குறை நிறைகளோடு, அடுத்தவரை ஏற்றுக்கொள்ளப் பழகிவிடும்! இப்போது பெரிதாகத் தோன்றும் குறைகள், அப்போது கடுகாய்க்குறுகி, பொறுத்துக் கொள்ளக் கூடி யவையாகத் தோன்றிவிடும். அதனால்தான், என் மகன் விரும்புகிற மாதிரி, இப்போதே அவனை மணந்துகொள் என்று கேட்கிறோம்!'' என்று முடித்தார் ஞானசேகரன்.

பிரமிப்புடன் நோக்கி, ''சார், நீங்கள் வக்கீலாக இருந் திருக்க வேண்டும்! என்ன பிரமாதமாக, என்ன தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டீர்கள், தெரியுமா?'' என்று, உளமாரப் பாராட்டினார் கேசவன்.

''பொறுங்கள், கேசவன்! கேஸ் ஜெயிக்கட்டும்!'' என்று, யோசனையில் இருந்த மதுவந்தியைக் காட்டினார் ஞான சேகரன்.

ஞானசேகரன் கோவையாகப் பேசி முடித்துவிட்டார்தான்!

ஆனால், இதிலும் குறைகள் இருந்தன.

வெளியே பளபளவென்று இருந்தாலும், சில மாம்பழங் களில் உள்ளே வண்டு இருப்பதில்லையா? அதுபோல!

அவனே வேண்டாம் என்றது! நினைவு மறந்த நிலை யில், அதை வேண்டும் என்றால், அதுவே சாக்காக மேலே போய் விழுந்துவிட முடியுமா? கேவலம் என்பது, ஏன் இவர்களுக்குப் புரிய மாட்டேன் என்கிறது?

காமத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்க, சைதன்யனும் அவளும், முன்பின் அறியாத, புதுத் தம்பதியர் அல்ல!

இருவருக்கும் இடையே, பாசமும், நேசமும் இன்னமும் இருந்தபோதும், அதற்கு மேலும் நிறைய நடந்துவிட்டது!

அந்தப் பாசத்தையும் நேசத்தையும் கூடப் பேச்சாலும் செயலாலும் குத்திக் குதறி எறிந்துவிட்டார்கள்!

அந்தக் குதறலில் ஆசையின் பெயரே மறந்துவிட்டிருந்தது!

ஆனால், இதையெல்லாம் சொன்னால், மறுபடியும் தாரக மந்திரம் மாதிரி, திருமணமானால் சரியாகிப் போய்விடும் என்பார்கள்! இதேபோல, மீண்டும், மீண்டும் நீண்ட பேச்சுக் களும் நடக்கும்!

வாதங்களும், பிரதி வாதங்களும்!

கேட்கக் கேட்க, இன்னும் இன்னும் வேதனைதான்!

இதைத் தொடர விடாமல், முற்றுப்புள்ளி வைக்க விரும்பினாள் மதுவந்தி!

ஞானசேகரனை நேராகப் பார்த்தாள் அவள்.

''அங்கிள், நீங்கள் சொல்லுகிற மாதிரி, சைதன்யனை நான் மணந்து கொள்வதாகவே வைத்துக் கொள்வோம்! அவர் எல்லோரையும் போலச் சாதாரணமானவர் அல்ல என்பது, உங்களுக்கே தெரியும்! மன உறுதி, அதிகம் உண்டு! அதிகப்படிப் பிடிவாதம் என்றும் சொல்லலாம்! திருமணம் ஆன பிறகு, அவருக்கு நல்லபடியாக நினைவு வந்து, பழைய பிடிவாதத்தில், அவர் பழைய மாதிரியே பேசினால், அரை ரொட்டிதான் கிடைத்ததே என்று சந்தோஷமாகப் பிரிந்து செல்ல, என்னால் முடியாது! அப்புறம் நான் செத்து விடுவேன்... சம்மதமா? சம்மதம் என்றால், சொல்லுங்கள்! இப்போதே, இந்தத் திருமணத்துக்கு எனக்கும், சம்மதம்!'' என்றாள் அவள் தெளிவான குரலில்!

''என்னம்மா, திடுக்கென்று இப்படிச் சொல்லிவிட்டாய்?'' என்றார் கேசவன் பதட்டத்துடன்!

ஒரு நெடுமூச்சுடன், ''இத்தோடு இந்தப் பேச்சை விட்டுவிடலாம்!'' என்றார் ஞானசேகரன்!






மதுவந்தி உயிரைப் பணயம் வைத்து நிபந்தனை யிடவும், கேசவன் பயந்துவிட, ஞானசேகரனும் பணிந்து விட்டார்.

மகனுக்கு மறதி நோய் குணமானதும், பழைய பேச்சைப் பேச மாட்டான் என்று, அவரால் எப்படி உத்திரவாதம் கொடுக்க முடியும்?

மதுவந்தியும், சும்மா மிரட்டுவதற்குச் சொல்லவில்லை என்பது, அவளது குரலிலேயே தெரிந்து போயிற்று!

மதுவந்தி யாரோ்வாக இருந்தாலுமே, ஓர் உயிர்!

அதிலும், மகனளவே பாசம் வைத்துவிட்ட பெண்ணின் உயிர், எவ்வளவு முக்கியம்!

மருமகளாக அவள் வந்தால், எவ்வளவோ மகிழ்ச்சிதான்.

ஆனாலும், அவள் வெகு காலம் உயிரோடு இருப்பது, அதை விடவும் முக்கியம் அல்லவா? அதனாலே, திரு மணப் பேச்சை அத்தோடு விட்டுவிட, அவர் முடிவு செய்தார்!

''கேஸ் தோற்றுவிட்டது, பார்த்தீர்களா?'' என்று கேச வனிடம் வருத்தத்துடன் சொல்லிவிட்டு, மகனைப் பார்க்கப் போனார்.

மனதில் நினைத்ததையே, மகனிடமும் சொன்னார்.

அவன் காரணம் கேட்டான்.

''பழசு நினைவு வரும்போது, எல்லாம் தப்பாகி விடு மாம்! ஏதேதோ சொல்லுகிறாள்! மொத்தத்தில், மதுவுக்குப் பிடிக்கவில்லை என்று, நன்றாகவே தெரிகிறது! அப்புறம்... நானும், அவள் அப்பாவும் ரொம்ப எடுத்துச் சொல்லிக் கேட்டோம்! எந்தக் காரணமும் காட்டி மறுக்க முடியாத அளவுக்குப் பேசினோம்! ஆனால், அவள் செத்து விடுவேன் என்றெல்லாம் சொல்லுகிறாளப்பா! அதுவரை, கேசவன் என்கூடச் சேர்ந்துதான் பேசிக் கொண்டிருந்தார்! ஆனால், இந்த வார்த்தை கேட்டால், பெற்ற தகப்பனுக்கு எப்படி இருக்கும், பார்! எனக்கே ஒரு மாதிரி ஆகிவிட்டது! பாவம்! வேலைக்கு லீவு போட்டுவிட்டுப் பத்து நாட்களாக இங்கே கூடவே கிடந்தார். போதும், வேலையைப் பாருங்கள் என்று, நான்தான் இன்று அனுப்பி வைத்தேன்! நாமும்தான் நாளை, நாளன்னறு கிளம்பி விடப் போகிறோமே...''

''இல்லை!'' என்றான் சைதன்யன்.

''முதலில், நான் மதுவந்தியிடம் பேசவேண்டும்! அவள் எங்கேப்பா?''

''க.... கடைசி அறையில், ஒரு நாலு வயதுப் பையன்... அவனுக்குக் கதை சொல்லிச் சாப்பாடு ஊட்டிக் கொண் டிருக்கிறாள்!''

''ஆமாம், பெரிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்! இவள் ஊட்டாவிட்டால், அந்தப் பையன் பட்டினியில் செத்து விடுவானாக்கும்?'' என்று சைதன்யன் எரிந்து விழ, அவனுடைய தந்தை தவிப்புடன் கண்டித்தார்!

''என்ன வார்த்தை இது, சைதன்யா? நமக்கு எத் தனையோ குறைகள்! இது வேறா.''

தப்புதான்! அதிலும் நோயாளியைப் போய், அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது!



''சாரிப்பா! எனக்கு இருந்த எரிச்சலில், ஏதோ சொல்லி விட்டேன்! வாய் வார்த்தைகளை, இன்னமும் அடக்கத் தெரியவில்லை! இல்லையாப்பா?'' என்றபோது, அவனது குரல் இறங்கியிருந்தது!

மகனது கழிவிரக்கம், தற்போதைய பேச்சுக்காக மட்டு மானது அல்ல என்பதுபோல, அவருக்குத் தோன்றியது!

ஆனால்... வேறு மாதிரி இருக்க முடியாதே!

குழப்பத்துடன் பார்த்தபோது, மகனின் இறுகியிருந்த முகத்திலிருந்து, அவரால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை!

அவனாகச் சொல்லாதபோது, எதையும் கேட்கவும் வழியில்லை! என்னதான் நண்பனைப்போலப் பழகி வளர்த்திருந்தாலும், அதற்கும் எல்லை உண்டுதானே?

''அப்பா, முதலில் நான் மதுவந்தியுடன் தனியே சற்றுப் பேச வேண்டும்! அவளை வரச் சொல்லுங்கள்!'' என்றான் மகன்.

இதயத்தில் ஓட்டையுடன் அறுவை சிகிச்சைக்காக வந்திருந்த சிறுவனோடு, அவனுடைய பெற்றோரையும் உற்சாகப்படுத்திப் பேசிக் கொண்டிருந்த மதுவந்தி, ஞானசேகரனைப் பார்த்ததும், அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள்.

''என்ன அங்கிள்?''

''பையன் உன்னுடன் பேசவேண்டுமாம். வரச் சொன் னான்!'' என்றார்.

கூட நடந்தபடி, ''அவரிடம் எல்லாம் சொல்லியிருப் பீர்கள்?'' என்றாள் அவள், ஓரக் கண்ணால் பார்த்து.

அலுப்புடன் உச்சுக் கொட்டினார் அவர்! ''என்னத்தைச் சொல்லுவது? நீ கடைசியாகச் சொன்னதுதான், இதற்கு மேல், விட்டுவிடு என்றேன்.''

அவன் விடாமல் வரச் சொல்லியிருக்கிறான்!

இரு தந்தையாரிடமும் சொன்னது போல, சாவைப் பற்றிச் சொல்லி, சைதன்யனை மிரட்ட முடியாது! 'வா, நாம் இருவரும் சேர்ந்தே போவோம்' என்று ஏதாவது சொன்னால், ஆபத்து! சொல்லக் கூடியவன் என்பதோடு சொல்வதைச் செய்யக் கூடியவனும்கூட!

எனவே, அந்த மிரட்டல், சைதன்யனிடம் செல்லாது!

ரொம்பக் கேட்டால், அவன் பேசியது பற்றிச் சொல்லி விட வேண்டியதுதான் என்று முடிவு செய்தாள் மதுவந்தி!

பெரியவர்களிடம்தான், அந்த நிகழ்ச்சி பற்றிச் சொல்ல முடியாது!

இவனிடமும், பழைய நினைவுகள் தானாக வரட்டும். சஞ்சலம் தரும் விஷயங்களை, நீங்களாக நினைவூட் டாதீர்கள். அது, அவர் குணமாவதைத் தாமதப்படுத்தும் என்று மருத்துவர் சொல்லியிருக்கிறார்தான்!

ஆனால், இருவருக்கும் வேதனை தரக்கூடிய, மாற்ற முடியாத ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்வதை விட, அவனது மறதி நோய், சற்றுத் தாதமாகக் குணமாவது, மேல்!

தனக்குள் இந்தத் தீர்மானத்துடன்தான், சைதன்யனைச் சந்திக்க, மதுவந்தி சென்றது!

ஆனால், கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த சைதன்யன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்து, ''வாவா!'' என்று ஆவலாக வரவேற்றபோது, பாதி விஷயம், அவளுக்கு மறந்துகூடப் போயிற்று!

பதிலுக்கு முறுவலித்தபடி அவள் அருகில் வரவும், முன்னே குனிந்து, அவள் கையைப் பற்றி, லேசாக உதடுகளில் ஒற்றி,



''நீ வரமாட்டாயோ என்று பயந்து போயிருந்தேன்!'' என்று அவன் கூறவும், அவள் ஓரளவு சுதாரித்தாள்.

அவனது அச்சத்துக்குக் காரணம் இருந்ததல்லவா?

தன் மறுப்பைப் பற்றி, அவனுக்கு மெல்லவே விளக்க முயன்றாள் மதுவந்தி.

ஆனால், குறிப்பாகக் கூடப் பழைய கதை எதையும், அவன் காது கொடுத்துக் கேட்பதாகவே இல்லை!

''பார், மதி! ஏதோ வேகத்தில், என்னென்னவோ நினைத்து, நாம் எண்ணாததையெல்லாம் பேசியிருக்கலாம்! அதெல் லாம் நடந்து முடிந்த கதை! இப்போது, என் நெஞ்சத்தைத் தொட்டுப் பார்!'' என்று, அவள் கையைத் தன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான், அவன்!

''கேட்கிறதா? 'லப்டப்' என்பதற்குப் பதிலாக 'மதி, மதி' என்றுதானே, துடிக்கிறது? உன்னைப் பிரிந்தால், இது என்ன சொல்லித் துடிக்க முடியும்? துடிப்பையே நிறுத்திவிடும்...'' என்றவன், மேலே பேச விடாமல், அடுத்த கையால், அவள் அவனது வாயைப் பொத்தவும் அப்படியே, அவளை லேசாக அணைத்தான்!

''விடுங்கள், சது! இது மருத்துவமனை'' என்று அவள் விலக முயன்றபோது, அவன் தடுக்கவும் இல்லை!

ஆனால், முழுசாக விலகுமுன், இரு கைகளாலும், அவளது முகத்தை வருடி, ''எனக்கு, இந்தப் பூமுகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், மதிம்மா! இல்லா விட்டால், நான் பிழைத்ததிலேயே அர்த்தம் இல்லை! எனக்கு, நீ வேண்டும், கண்ணம்மா!'' என்றான் கொஞ்சலாக!

அவளுக்கும் அவன்தான் வேண்டும்!

ஆனால்...

மழுங்கிப் போன மூளையைச் சிரமப்பட்டு உலுக்கி, "நம்மிடையே, நிறைய நடந்துவிட்டது, சது! இப்போது மறந்திருந்தாலும், அதெல்லாம் உங்களுக்கு நினைவு வரும்போது... வரும்போது, வாழ்க்கை ரொம்பவும் மோசமாகிவிடும்! ஏனென்றால் நீங்கள் என்... என்னை மிகவும் கேவலமாகப் பேசினீர்கள்! நானும்..." என்று, அவள் திக்கித் திணறிச் சொல்ல முயன்றபோது, அவன் குறுக்கிட்டான்.

"விட்டுவிடு, மதி! அது எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், முடிந்து போன பழைய கதையை விட்டு விடுவோம். செத்த குழந்தைக்கு ஜாதகம் பார்ப்பது போல, அதைப் பற்றிய ஆராய்ச்சியும் அவசியம் அற்றது. அதை இழுத்து வைத்து ஆராய வேண்டாம் என்றுதான் ஏற்கனவே சொன்னேனே!"

"உங்களுக்கு நினைவு இல்லாததால் அப்படிச் சொல்லுகிறீர்கள்! நினைவு வரும்போது, வேறு மாதிரியாகத் தோன்றலாமே!"

மீண்டும் குறுக்கிட்டான் சைதன்யன்!

"நீ சொல்லுகிற மாதிரி ஏதாவது மோசமாக நினைவு வந்தால், நான் என்ன செய்வேன் தெரியுமா? நேரே, உன்னிடம் ஓடி வந்து, இந்த அழகான முகத்தை இப்படி ஏந்திக் கொள்வேன்! இந்த முகத்துக்கும் எனக்கும் இடையே வருவதற்கு, இறந்த காலத்தைச் சேர்ந்த, இறந்துவிட்ட சம்பவத்துக்கு என்ன தைரியம் என்று அதை விரட்டி விடுவேன். அப்புறம், இந்த நெற்றியில்... கண்ணிமைகளில்... கன்னங்களில்... என்று வரிசையாக முத்தமிடுவேனா, அப்புறம், எனக்கு மட்டுமல்ல, நம் இருவருக்குமே,



இந்த உலகம் மறந்துபோகும்! வேண்டுமானால், ஒரு சின்ன சோதனை செய்து பார்ப்போமா? நான் சொன்ன வைத்தியத்தில் உலகம் நமக்கு மறக்கிறதா, இல்லையா என்பது பற்றி?" என்று சைதன்யன் சரசமாகக் கண் சிமிட்டிக் கேட்கவும், மதுவந்தியின் முகம் குங்குமமாகச் சிவந்து போயிற்று!

"ச்சு! சுத்த மோசம் நீங்கள்!" என்றவள், சட்டென்று அவனை விட்டு விலகி நின்றாள்.

யாரோ, உள்ளே வருவதற்காகக் கதவைத் தட்டினார்கள்.

உள்ளே வரச் சொல்லிவிட்டு, அவளைப் பார்த்து முறுவலித்தான் அவன்.

"அப்பாவிடம், திருமணத்துக்குச் சம்மதம் சொல்லிவிடு, கண்மணி!" என்று அவளிடம் சொல்லிவிட்டு, இரவு உணவுக்காக 'ஆர்டர்' எடுக்க வந்த ஆளிடம், தன் தேவையைச் சொல்லலானான் சைதன்யன்.

மதுவந்தி சட்டெனத் திகைத்தாள்!

சைதன்யன் ஒன்றை நினைத்தால் சாதிக்கிறவன் என்று அவளுக்குத் தெரியும்தான்! ஆனால், காரண காரியத்தோடு வாதாடி, செயல்பட்டு ஜெயிக்கிறவன் என்று எண்ணியிருந்தாள்!

ஆனால், இப்போது சரசமாடி அல்லவோ, அவளை வெல்ல முயற்சித்திருக்கிறான்!

அப்படியானால், பேச்சினால், அவளை ஜெயிக்க முடியாது என்று, அவனுக்குத் தெரிந்து போயிருக்கிறது! அதாவது, அவன் பக்கம் நியாயம் இல்லை என்பதும், அவனுக்கு நிச்சயம்! அதனால்தான் இந்த வழியைத் தேடியிருக்கிறான்!

என்னவோ குழம்பியது அவளுக்கு!

அது எப்படி அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்?

அவனுக்குத்தான், அதெல்லாம், மூன்று ஆண்டுகளுக்கு முந்தையப் பிரிவு. அதன் பின் அவள் தொடர்பான நினைவு எதுவுமே இல்லையே!

அல்லது... அவனது வழக்கம் போல ஆராய்ந்து, ஏதாவது பெரிதாக தேர்ந்திராவிட்டால், மதுவந்தி இப்படிப் பிடிவாதமாக மறுக்க மாட்டாள் என்ற முடிவுக்கு வந்திருப்பான்! அவளைச் சம்மதிக்க வைப்பதற்கு வேறு வழி தெரியாமல், இப்படி முயன்றிருப்பான்!

ஆனால், இப்போது அது முக்கியம் அல்ல!

அவனது சரசத்தில், அவள் சற்று நேரம் மயங்கிப் போனாளே, அதுதான் முக்கியம்!

அவனது பேச்சும், சிரிப்பும், தொடுகையும்!

சற்று நேரம், அவளும் தேவலோகத்தில்தானே இருந்தாள்!

இது தொடராது என்று, என்ன நிச்சயம்?

ஏதோ, இந்த முறை மூளை விழித்துக் கொண்டது! விஷயமும் புரிந்து போயிற்று!

ஒவ்வொரு தரமும், விழிப்பு வருமா?

அதுவும், மயக்கம் அவ்வளவு சுகமாக இருக்கையில்!

அவன் தந்தை சொன்ன அரை ரொட்டிக்கு ஏங்கி அவனை மணந்து வாழ்ந்துவிட்டு, அவன் முன், ஒரு நாள் இழிந்து போய்க் கேவலப்பட்டு நிற்கப் போகிறாளா?

அப்போது, அவன் என்னவெல்லாம் சொல்லுவான்! வலிக்கப் பேசுவதிலும், அவன் வல்லவன் ஆயிற்றே!



எல்லாவற்றையும் விட, அன்று தான் அப்படி அழைத்த பிறகும், நம்மைப் பற்றிய நினைவு எனக்கு இல்லை என்று தெரிந்தும், மறந்திருந்த அந்த நேரத்தில் கேட்டதைச் சாக்கிட்டு, என்னோடு வாழ வந்திருக்கிறாயே, இதுவே, என் பேச்சுக்கு நிரூபணம் அல்லவா? அம்னீஷியா தெரியும் வரை காத்திருக்கும் கண்ணியம் கூட இல்லை என்றும் காட்டி விட்டாயே... கடவுளே! என்னவெல்லாம் சொல்லுவான்!

அவன் பேச்சு வளம் உடையவன்!

இன்னின்ன காரணத்தால் இவ்வளவு கேவலம் நீ என்று அவன் சொல்லி முடிக்கும்போது, யாராலும் மறுக்கவும் முடியாது. அவளால், அதைத் தாங்கவும் முடியாது!

இன்றைய இந்த மறுப்பைப் பற்றிப் பெரியவர் சொன்னால்கூட, நடிப்பு என்றுதான் எண்ணுவான்!

அன்று சொல்லவில்லையா, பிகு பண்ணுவதாக!

இப்போது அவள் பிகு பண்ணவில்லை. உண்மையிலேயே அவனை மணக்க மறுக்கிறாள் என்பதை அவன் ஒத்துக் கொள்ள வேண்டுமானால், அவள், அவனது பார்வை வட்டத்துக்குள் இருக்கவே கூடாது!

உண்மையைச் சொல்லப் போனால், அவளது மறுப்பை உண்மை என்று சைதன்யன் ஏற்பதற்காக மட்டுமாய், அவள் ஊரை விட்டு ஓட எண்ணவில்லை! தொடர்ந்து, சைதன்யன் இந்த மாதிரி சரசமாடி முயற்சி செய்தால், தான் அதில் மயங்கிவிடக் கூடாது என்பதற்காகவும்தான், அவனிடமிருந்து விலகி ஓட மதுவந்தி முடிவு செய்தாள்!

இந்த ஊரிலேயே அவன் இல்லாதபோது, அவளால் என்ன செய்ய முடியும்?

பழைய காலத்து நாடு கடத்தலைப் போல, அவள் தானாகவே, இந்தச் சென்னை மாநகரத்தை விட்டு, கண் காணாத தூரம் சென்றாக வேண்டும்!

எங்கே போவது?

மதுவந்தி குழம்பிக் கொண்டிருக்கையில், அவளது உதவிக்கு வந்தாள், சிந்தா! சிந்தா என்கிற சிந்தாமணி!

இந்தப் பிரச்சனைக்குத் தொடக்க விழா நடத்தியவள்!

இப்போது மூடுவிழாவும் அவளாலேயே நடக்கப் போகிறது போலும்!




சிந்தாமணியின் வாழ்வு, மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது!

கணவன் ஜெயந்தன், அவளிடம் மிகுந்த அன்புடன் நடந்து கொண்டான்.

புதுமண வாழ்வை, அணு அணுவாக ரசித்து மகிழ்ந்த அவளுக்கு, அன்பான சகோதரியாக, கூடவே வளர்ந்த மதுவந்திக்கும், அதே மகிழ்ச்சி கிடைக்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது!

தாய் வழிப்பாட்டியாரின் பேச்சைக் கேட்டு, மதுவந்திக்கு அவள் செய்த பிழை, முதலில் அவள் மனதில் பெரிதாக உறுத்தியது இல்லை!



ஒரு தப்பைத் தடுத்ததாக, உள்ளூரப் பெருமை கூட இருந்தது!

ஆனால், சிறிய தந்தை ஒரு நல்ல மணமகனைத் தேடித் தேர்ந்தெடுத்து அவளுக்கு மணம்புரிந்து வைத்ததைக்கூட, இயல்பாகத்தான் ஏற்றியிருந்தாள்!

ஆனால், கணவனின் அன்பினால், நெகிழ்ந்திருந்த போது, பாட்டியின் பொய்மையும் தெரிய வரவே, அவள் உள்ளூரக் கலங்கிப் போனாள்.

இயல்பாக நல்ல பெண்ணே என்பதோடு, குடும்பத்தில் எல்லோரிடமும் பாசமும் இருந்ததால், மதுவந்தியிடம் தன் தப்பைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

கூடவே, கணவன் வகையிலேயே, மதுவந்தியை விரும்பிக் கேட்கவும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது!

ஆனால், மதுவந்தி சம்மதிக்கவில்லை என்று சிறிய தந்தை மூலம் அறிந்தபோது, வருத்தமே!

அதற்குள், ஜெயந்தன் அவளுக்கு நேசம் என்றால் என்னவென்று கற்றுக் கொடுத்திருந்தான்!

அந்த சைதன்யனோடு, மதுவுக்கு அத்தகைய நேசம் தானோ, என்று எண்ணியவள், அந்த நல்ல சேதிக்காகவும் காத்திருந்தாள்!

அதுவும் வந்த பாடில்லை!

செய்த தவறைத் திருத்துகிறவளாகி, கணவனின் ஆலோசனையோடு, நீண்ட கடிதம் ஒன்று எழுதினாள்.

அங்கே அமெரிக்க வாழ்வில் பொருந்தி முடிக்கையில், கணவன் குடும்பத்தில் மீண்டும், மதுவந்தியைப் பற்றிப் பேச்சு எழுந்தது!

தன் சித்தியிடம், சிந்தா அது பற்றிப் பேசினாள்.

மதுவந்தியின் திருமணம் பற்றி வேறு ஏற்பாடு எதுவும் நடக்கிறதா என்று கேட்டுக் கொண்டு, அப்படி எதுவும் இல்லை என்று தெரிந்ததும், ஜெயந்தனுடைய சித்தப்பா மகனைப் பற்றி, மறுபடியும் சித்தியிடம் பேசினாள்.

"பையன், இவரைப் போலவே பார்க்க நன்றாக இருப்பார் சித்தி! நல்ல பணமும் கூட! ஜெயந்தன் குடும்பத்தை விடக்கூட, அதிகப் பணம் ஊட்டியில் பங்களா இருக்கிறது! கோயம்புத்தூரிலும் நிறைய சொத்து இருக்கிறதாம்! சின்ன மாமனார் இப்போது அங்கேதான் இருக்கிறார். நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் சித்தி! இங்கே மசாலாத் தூள் அனுப்பச் சொன்னேனே, அவர்தான். இன்னும் பத்து நாட்களில், கிளம்பி, இங்கே வருவார்! உன் சித்தப்பா குடும்பத்தை வேண்டுமானால், ஊட்டியில் போய்ப் பார்க்கச் சொல்வேன் என்கிறார் ஜெயன். மதுவைக் கூட்டிப்போய்க் காட்டினால், நன்றாயிருக்கும் என்று, எனக்குத் தோன்றுகிறது!" என்றாள் சிந்தாமணி.

இன்னோர் அமெரிக்க மாப்பிள்ளை! சொத்துக்காரன் வேறு என்றால், வித்யாவுக்கு அடித்துக் கொண்டது!

ஆனால், அவளுக்குத்தான் மனம் அடித்துக் கொண்டதே தவிர, அப்பாவும் மகளும், விபத்தில் மாட்டிக் கொண்ட யாரோ ஒருத்திக்காக, மருத்துவமனையில் தவம் கிடந்தனர்!

வீட்டுத் தலைவி என்று ஒருத்தி சொல்லுகிறாளே என்று, நின்று கேட்கக் கூட, யாரும் தயாராக இல்லை!

எரிச்சலுடன் அவள் முணுமுணுத்துக் கொண்டிருந்த போதுதான், அன்று மருத்துவமனையில் இருந்து, மதுவந்தி வந்து சேர்ந்தாள்!



வந்ததும், வராததுமாக, மகளைப் பிடித்து நாலு திட்டுத் திட்டினாள் வித்யா!

"யாரோ ஒருத்தி! வெறுமனே தெரிந்தவள் என்றுதானே, அன்று அழுதபோது சொன்னாய்? அவளுக்காக, ஆஸ்பத்திரியிலேயே உட்கார்ந்திருக்க வேண்டுமா? இந்த வெய்யிலில், ஊட்டிக்கு 'வாவா' என்று கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள்! நாலுநாள், எல்லோருமாய் அங்கே போய் இருந்துவிட்டு வரலாம் என்றால், அதைச் சொல்லக்கூட, நீயும் உன் அப்பாவும் வீட்டில் இல்லை! இப்போது, நான் மட்டுமாவது, நாளைக்குக் கிளம்பிப் போய்விட்டு வரப் போகிறேன்! வினு திரும்பி வர, இன்னும் ஒரு வாரம் ஆகும்! இந்த நாலுநாள், நீயும், உன் அப்பாவும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்!" என்று படபடத்து முடித்தாள் வித்யா!

வெளியூர்! குறைந்தது நாலு நாட்கள்!

"ஊட்டியா?" என்று கண்ணை விரித்தாள் மகள். "அம்மம்மா, உங்கள் கூட நானும் வருகிறேன்மா!" என்றாள் கெஞ்சலும், கொஞ்சலுமாக!

"நிஜமாகவா?" என்று வித்யாவுக்கு, வாயெல்லாம் பல்! அட என் கண்ணே! நீயும் வரவேண்டுமே என்றுதானே, கடவுளை வேண்டிக் கொண்டிருந்தேன்!" என்றாள் மகிழ்ச்சியோடு!

என்னவோ என்று புரிந்தபோதும், இன்றைய நிலையில், அதுவும் நல்லது என்றே, மதுவந்திக்குத் தோன்றியது!

"என் சினேகிதி வீட்டுக்காரரின் 'டிராவல்'சில் சொன்னால், இன்றைக்குக் கூட, டிக்கெட் எடுத்துத் தந்துவிடுவார்.

நாளைக்கே கிளம்பலாம், மதும்மா! அப்பாவிடம், நீதானே சொல்லிவிடு! அவரும் வருகிறாரா என்று கேள்..."

சற்றுப் பொறுத்து வீடு திரும்பிய கேசவன், "உங்கள் இஷ்டம்! போய் வாருங்கள்!" என்று விட்டு ஒதுங்கிக் கொண்டார்!

"சிந்தா சொந்தக்காரர்கள் வீடுடி! கொஞ்சம் நல்லதாகவே எல்லாம் எடுத்து வை! சம்பந்தி வீட்டில் மட்டமாக நினைத்துவிடக் கூடாது" என்று பார்த்துப் பார்த்து, மக ளுக்கு மிகவும் பாந்தமாகத் தோன்றும் உடைகளை எடுத்துக் கொடுத்துப் பெட்டியில் அடுக்கச் சொல்லி விட்டுத் தன் பெட்டி வேலையைப் பார்க்கப் போனாள் வித்யா.

வாயிலில் கார் வந்து நின்றதோடு, அழைப்பு ஓசைக்குப் பதிலாகக் கதவை யாரோ மெல்லத் தட்டும் ஒலி கேட்கவும், வித்யா சற்று மிரண்டு நின்றாள்.

"இந்த நேரத்தில் யார்? சட்டென்று கதவைத் திறக்காதீர்கள்" என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "எல்லாம் வேண்டியவர்களாகத்தான் இருப்பார் கள்!" என்று கதவைத் திறந்தார் கேசவன்.

"மதி, அவள் அறையில்தானே?" என்று வேகமாக அங்கே சென்றவனைப் பார்த்ததும், "ஐயோ, இவனா? என்று வித்யா அதிர்ந்தாள்!

சற்றே திகைப்பு அடங்கியதும், "ஐயையோ! சிந்தா விடம் தப்பாக நடந்தவன்தானே? எங்கே போயிருக்கிறான் பாருங்கள்! முதலில், அவனை இழுத்து வந்து, வீட்டை விட்டு வெளியேற்றுங்கள்" என்று பதறினாள் அவள்.



"ஷ்! சத்தம் போட்டுப் பேசாதே!" என்று எச்சரித்தார் கேசவன்." சைதன்யன் பேரில் தப்பு இல்லை, வித்தி! நம் சிந்தாதான் அனாவசியமாக அவரைத் தப்பாக நினைத்து விட்டாள்! அன்றைக்கு ஒரு நாள், பிள்ளைகள் இரண்டு பேரும், ஒரே மாதிரி உடை அணிந்திருக்கிறார்கள்! அப்போது வந்தவர், பின்னாலே மட்டும் பார்த்துவிட்டு, மது என்று நினைத்து, சிந்தாவைக் கட்டிப் பிடித்து... தப்பு தெரிந்தும், அசிங்கப்பட்டுக் கொண்டு ஓடிவிட்டார்! ஆனால், சிந்தா, ஒரேயடியாகத் தப்பாக நினைத்து, இந்த ஆளிடம் மது மாட்டிக் கொண்டு விடக் கூடாதே என்று, கலாட்டா பண்ணிவிட்டாள்! மற்றபடி, அவர் ஒரு தப்பும் செய்யவில்லை!" என்று, மனைவிக்கு ஏற்றபடி, கேசவன் விளக்கினார்!

அப்போதும் சமாதானம் அடையாமல், "என்ன சொல்லு கிறீர்கள்? கல்யாணத்துக்கு முன்னால் கட்டிப் பிடிப்பது, தப்பு இல்லையா?" என்று ஆட்சேபித்தாள் வித்யா.

"இந்தக் காலம் வேறு, வித்தி! இப்போதெல்லாம் என்னென்னவோ நடக்கிறது! இதைப் போய்த் தப்பு என்கிறாயே! விடு!" என்றார் கேசவன்.

"ஆனால், அவள் அறைக்குள் போய்... நன்றாக இல்லையே!"

"அவர்களுக்குள் குழப்பம்! இங்கே நம் முன்னிலை யில் பேசித் தீர்க்க முடியுமா? நல்ல பிள்ளைகள், தப்புத் தண்டாவுக்குப் போக மாட்டார்கள்! அதனால், கவலையற்று இரு!" என்று, மனைவியை அமைதிப்படுத்தினார் அவர்!

அறைக் கதவைத் திறந்து கொண்டு, சைதன்யன் உள்ளே வரவும், மதுவந்தி முதலில் பிரமித்துப் போனாள்.

ஆனால், உடனே புரிந்து, ''அப்பா வேலையா?'' என்றாள் அவள்.

''பின்னே? என்னை விட்டுப் போய் விடுவாயா?'' என்றான் சைதன்யன். குற்றம் சாட்டும் குரலில்!

''போகாமல் உங்களுக்குப் புரியாது என்றால், போய்த் தானே தீர வேண்டும்!''

''மதி, ப்ளீஸ்! நான் சொல்வதைக் கேள்!'' என்று அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான் சைதன்யன்!

''அங்கேயே நின்று பேசுங்கள்! இது வீடு! மருத்துவ மனையில் நடந்தது, இங்கே செல்லாது!'' என்றாள் அவள் குரலில் அழுத்தத்துடன்!

லேசாக முகம் கன்ற, சைதன்யன் பெருமூச்சு விட்டான்!

அருகில் கிடந்த நாற்காலியைக் காட்டி, ''உங்களுக்கு இன்னும் முழுப் பலம் வரவில்லை! ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால், உட்கார்ந்து சொல்லுங்கள்!'' என்றாள் அவள் கறாரக் குரலில்!

நாற்காலியில் அமர்ந்து, கண்மூடித் திறந்து, ''எ... எனக்கு வேறு வழி தெரியவில்லை, மதி! நீ திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை! மேலே கேட்டுப் பயன் இல்லை, கேட்பதற்கு வழியும் இல்லை என்று அப்பா சொன்னார்! உயிரை விட்டுவிடுவதாகக் கூடச் சொன்னாயாம்! உன்னை இழந்து விடுவேனோ என்ற பயத்தில்... மன்னித்துவிடு!'' என்றான் அவன்.

''திருமணத்துக்கு அவ்வளவு அவசரப்பட்டது ஏன் என்று எனக்கும் இன்னமும் புரியவில்லை!''



அவளை ஒருதரம் பார்த்துவிட்டு, ''உன்னிடம் என்னை ஒப்புக் கொடுக்க வந்திருக்கிறேன், மதி!'' என்றான் அவன், ஒரு மாதிரி அமர்ந்தக் குரலில்.

இது உண்மை சொல்லும் குரல்!

அவள் பேசாமல் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்க, ''அப்பா சொன்ன தாலி மகிமையில் நம்பிக்கை வைத்து, நான் போட்ட திட்டம் அது! மணமாகிவிட்டால், அதுவே ஒரு பிணைப்பு! அப்புறம் குழந்தை வந்துவிட்டால், மற்றதன் முக்கியத்துவம் இன்னமும் குறைந்து போகும்! இன்னும் குழந்தைகள் வந்தால், அவர்கள் வளர, வளர வேறு எதுவுமே பெரிதாகத் தோன்றாது என்று நினைத்தேன்! அதனால்தான் சீக்கிரமாகத் திருமணம் நடப்பது, அவ்வளவு முக்கியமாகத் தோன்றிற்று!'' என்றான் அவன் இறங்கிய குரலில்!

குரலில் குன்றல் ஒலித்ததோ?

ஏதோ உறுத்த, ''எவ்வளவு காலம் இது நடக்கும் என்று எண்ணம்?'' என்று கேட்டாள் அவள்.

''குறைந்தது ஏழெட்டு ஆண்டுகள்! பிறகும், உனக்கே அதில் ஆர்வம் மறைந்துவிட்டது என்றால், ஐம்பது வருஷங்கள்!''

குன்றலோடு, ஒரு சுய பரிகசிப்பும்!

விழிகள் விரிய, ''அவ்வளவு காலம் நினைவு வராமல் எப்படி... அப்படியானால், உங்கள் அம்னீஷியாவே நிச்சயமாக ஒரு நாடகம்தான்!'' என்றாள் மதுவந்தி!

''இல்லையில்லை!'' என்று அவசரமாக மறுத்தான் சைதன்யன். ''முதலில் நினைவு இல்லாமல்தான் இருந்தது! ஆனாலும், மூளை நல்ல நிலையில் இருந்ததால், விரைவி லேயே எல்லா நினைவும் வந்துவிட்டது...''

சட்டென அவளுக்கு ஞாபகம் வர, ''அன்றைக்கு! உங்கள் அப்பாவிடம் வேலை செய்வது பற்றி வாய்விட் டீர்களே, அப்போதே நீங்கள் நன்றாகி விட்டீர்கள்...!'' என்றாள்.

ஒப்புதலாய்த் தலையாட்டினான் அவன். ''நீ இவ்வளவு புத்திசாலியாக இல்லாமல் இருந்திருந்தால், எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்!'' என்றான் குறை கூறும் குரலில்!

இது குறையாமா? ஐஸ்!

தன்னை மீறி வந்த முறுவலை அடக்கிக் கொண்டு, ''அன்றைக்கு உயிரை விடுவேன் என்று, உங்கள் அப்பா விடம் கூறினேனே, அப்போதே, இதை வெளிப்படுத்தி இருக்கலாமே!'' என்று கேட்டாள் மதுவந்தி.

''தான் திருடி, பிறரை நம்பான்' என்று ஒரு பழமொழி இருக்கிறது, மதி! அதைப்போல, அப்போது, நான் உன்னை நம்பவில்லை! ஊகூம், அந்தச் 'செத்துடுவேன்' பகுதியை அல்ல! அன்று நடந்தது நினைவு வந்துவிட்டது என்று சொன்னால், அப்புறம், 'இவ்வளவு கேவலமாகப் பேசி னாயே, உன்னோடு எப்படி வாழ்வது' என்று கேட்டு விலகி விடத் திட்டமிட்டிருக்கிறாயோ என்று பயந்துவிட்டேன்! அதனால், இந்த அம்னீஷியாவை வைத்தே உன்னைச் சமாளித்து விடலாம் என்று திட்டமிட்டேன்! ஆனால் நீ பொல்லாத ராட்சசி... இப்படியெல்லாம் உன்னை மசிய வைக்க முடியாது என்பதை மறந்து போனேன்!''



தமிழ் இலக்கியத்தில், வஞ்சகப் புகழ்ச்சி அணி என்று ஒன்று உண்டு! ஒருவரைத் திட்டுவது போலப் புகழ்வது! அதே மாதிரி, அவளைத் திட்டுவது போல ஐஸ் வைக் கிறான்!

ஆனால், அதில் மயங்குமுன், அன்றைய நினைவில், அவள் முகம் மாறியது!

''ஆனால், அன்று அவ்வளவு பேசினீர்களே! லாட்ஜில்...''

''அந்தப் பெயர் சொல்லாதேயேன், மதி! ப்ளீஸ்மா! ரொம்பவும் அவமானமாக இருக்கிறது!'' என்றான் அவன், குன்றிப்போய்!

''ஆனால், அன்று உண்மையாக, உள்ளம் உணர்ந்து தானே, சொன்னீர்கள்?'' என்றாள் அவள் விடாமல்.

அவன் உதட்டைக் கடித்துப் பேசாதிருக்க, ''இன்று ஏன் திடீர் மாற்றம்?'' என்று தொடர்ந்து கேள்வி கேட்டாள் மதுவந்தி!

எதையோ திரும்பவும் மனதால் அனுபவிப்பவன் போன்று சிறிது நேரம் கண்மூடி அமர்ந்திருந்தான் அவன்.

பிறகு, ''அந்த விபத்து, மதி!'' என்றான் பழைய அமர்ந்த குரலில்.

''அவ்வளவு பேசி, உன்னை வெகு கேவலமாக அவ மதித்த பிறகும், உன் தந்தையின் விருப்பம்போல மணம் புரியப் போவதாக நீ சொன்னதை, என்னால் ஏற்க முடிய வில்லை! வேறு யாரையும் கணவனாக ஏற்க உன்னால் முடியாது என்பது எனக்கு நிச்சயம்தான்! ஆனால், உனக்கும்

எனக்கும் குணத்தில் சில ஒற்றுமைகள் உண்டு! என்னைப் போலவே பழி வாங்கும் வெறியில்... வண்டியை எப்படி ஓட்டினேனோ? விபத்து நடந்தது. அப்புறம்... ஒரே இருட்டு!

''தேடித் தேடிப் பார்க்கிறேன். இருட்டு தவிர வேறு ஒன்றுமே இல்லை! ஒலி, ஒளி ஒன்றுமே இல்லை! தனிமை வேறு! சின்னப் பிள்ளை மாதிரி, அந்த இருட்டும் தனிமையும், எவ்வளவு பயமாக இருந்தது, தெரியுமா?'' என்றவனின் கை தன்னிச்சையாய், ஏந்தினாற்போல, அவள் புறமாக நீண்டது!

மறுக்கத் தோன்றாமல், அவன் கை மீது, அவள் தன் கையை வைக்க, ஆதாரம் போலப் பற்றிக் கொண்டான் அவன்.

கண நேர அமைதியின் பின், சைதன்யன் மீண்டும் தொடர்ந்தான். ''வேண்டுமே, வேண்டுமே என்று, ஒரே தவிப்பு! என்ன வேண்டும் என்றுகூடத் தெரியவில்லை! யோசிக்கவும் முடியவில்லை! அப்போது, தூரத்தில் முணுக்கென்று, ஒரு சின்ன வெளிச்சம்! அகல் விளக்கின் தீபம் மாதிரி! மதி... சொன்னால், உனக்கு நம்பத் தோன்றுமோ, என்னவோ? அது நீதான்!

''இந்த ஒளி நீதான் என்று தெரிகிறது! எனக்கு வேண்டியது நீதான் என்பதும் புரிந்துவிட்டது! ஆனால், ஏனோ பக்கத்தில் வராமல், அவ்வளவு தூரத்திலேயே நின்றாய்! மதி, மதி என்று கதறிப் பார்த்தேன்! என்குரல் உன் காதுகளை எட்டவே இல்லை...''



'அவர் தேடுகிற மதியைக் கூட்டி வாருங்கள் பார்ப்போம்' என்று அப்போதும் சந்தேகமாகத்தான்... டாக்டர் சொன்னதாக, ஞானசேகரன் கூறியது, மதுவந்திக்கு நினைவு வந்தது!

அது, அந்த நேரம்தான் போலும்! பாவம்! அந்த நேரத்தில் எப்படித் தவித்திருப்பான்!

இறுகப் பற்றியிருந்த கையை விலக்காமலே, எழுந்து, அவன் அருகே வந்து, தரையில் அவனை ஒட்டி அமர்ந்தாள் அவள்!

அவனும் நாற்காலியை விட்டிறங்கி, அவள் அருகே அமர்ந்து மேலே சொன்னான்.

''கடைசியாக, ஒன்றும் முடியாமல் ஓய்கிற நேரம்! திடுமென ஒரே வெளிச்சம்! கண் தெரிகிறது! காதுகேட்கிறது! நீ பக்கத்தில் இருந்து, சது என்று அழைக்கிறாய்! அப்பாடி என்று நிம்மதியாக... தூங்கிவிட்டேன் என்று நினைக்கிறேன்?'' என்று கேள்வியாய் அவளைப் பார்த்தான் அவன்.

அவள் அருகே சென்று, அவனைத் தொட்டதும், உடனே அவன் அலட்டல் நின்று, அசைவற்றுப் போக, அவள் அஞ்சியது, தூங்குகிறார் என்று, மானிட்டரைப் பார்த்துக் கொண்டிருந்த நர்ஸ் சொன்னது...

அந்த நிலையிலும், அவள் அவனை எப்படிப் பாதித்திருக்கிறாள்!

அவள் வியந்து நோக்குகையில், அவன் லேசான வருத்தத்துடன் முறுவலித்தான்.

"அந்த அம்னீஷியா, இப்போதுதான் வருகிறது! சுற்றுப் புறம் புரிந்தது! என்ன நடந்திருக்கக் கூடும் என்று ஊகிக்க முடிந்தது! ஆனால், எனக்காக எல்லாமே செய்தாலும், சாதாரணமாகப் பேசிப் பழகினாலும், உன் கண்களில் இருந்த வலி! ஏன் எதற்காக என்று ஒன்றுமே புரியவில்லை! யோசித்துப் பார்த்தும், எதுவுமே நினைவு வரவில்லை! எனக்கு அடிபட்ட வருத்தமோ என்றால், பிழைத்ததில் அது மறைந்து போயிருக்க வேண்டுமே! ஏதோ பெரிதாக நடந்திருக்கிறது என்று புரிந்தது! ஆனால், அதைப் பற்றிக் கேட்க, ஏனோ பயமாக இருந்தது! எனவே, யாராவது ஏதாவது சொல்கிறார்களா என்று கூர்மையாகக் கவனித் தேன். ஐசியுவில் இருந்து, அறைக்கு வந்த பிறகு, பத்திரிகையைப் படிக்கும்போதுதான், மூன்று ஆண்டுகள் இடைவெளி பற்றித் தெரிந்தது!

"நம் திருமணம் ஏன் நடக்கவில்லை? அது பற்றி உன்னிடம் கேட்டபோது, மெய்யாகவே, எனக்கு அம்னீஷி யாவின் தாக்கம்தான்! ஆனால், காரண காரியங்களோடு, ஒவ்வொன்றாகச் சம்பந்தப்படுத்தி ' யோசித்தபோது, எல்லாம் நினைவு வந்துவிட்டது! நம் திருமணம் நின்றது, நீ உண்மை அறிந்ததும் வந்தது, என் கோபம்... வெறுப்பு... எல்லாம்!

"கடவுளே! உன்னை என்ன மாதிரி நடத்தினேன்? என்ன வார்த்தை சொன்னேன்? நீயும், என்னைத் தவறாக நினைத்தாய்தான்! ஆனால், கேவலமாக ஒரு வார்த்தை சொல்லவில்லை..."

"தவறாக நினைக்கவும் முடியவில்லை, சது! சிந்தாவின் வார்த்தை பொய்யாக இருக்க முடியாது என்ற எண்ணம்



தான். ஆனால், அவள் அந்த மாதிரி நினைத்தது தவறு. எதனால் அந்த மாதிரி அவள் நினைத்திருக்கக்கூடும் என்று, உங்கள் வழக்கப்படி விளக்குவீர்கள் என்றுதான் முதலில் காத்திருந்தேன்! ஆனால், நீங்கள் ஒன்றும் சொல்லாமல் போன பிறகுதான் அது உண்மையா என்று சந்தேகம் வந்தது! சந்தேகப்பட்டதும், நீங்கள் சொன்னது போலத் தப்புதானே? அப்போதும், இன்னொரு பெண்ணோடு, உங்களைக் கற்பனை கூடப் பண்ண முடியாமல், எப்படித் தவித்தேன். தெரியுமா? ஒரு தரம், கற்பனையிலேனும், அப்படிக் கண்டுவிட்டால், உங்கள் நினைப்பிலிருந்து விடுதலை கிடைக்கக்கூடும் என்று எவ்வளவோ முயன்றிருக்கிறேன்! ஆனால், ஒவ்வொரு கற்பனையிலும், கடைசியில், அந்தப் பெண் நானாகி விடுவேன்!" என்று மதுவந்தி சொன்னபோது, இருவருக்குமே சிரிப்பு வந்தது!

தன் மனதை, அவனுக்குத் தெளிவுபடுத்த முடிந்ததில், அவளுக்கு ஆறுதலும்கூட!

அவனுக்கும் அந்தப் பொறுப்பு இருந்ததே! தொடர்ந் தான். "நான் சொன்ன வார்த்தைக்கு, இன்னொருத்தி என்றால், திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டாள். நீ வந்து என்னைப் பிழைக்க வைத்தாய்! ஆனாலும், மணம் புரிவது வேறு அல்லவா? ஆனால், நீ இல்லாமல் ஒன்றுமே இல்லை என்று ஆன பிறகு, உன்னை எப்படி விடுவேன்? அதனால் தான், முகத்தில் அடித்தாற்போல, என் பிழையைச் சொல்லிவிட்டு வெளியேற முடியாதபடி, மறதி நாடகத்தைத் தொடர்ந்தேன். எல்லா வகையிலும் உன்னைப் பிணைக்க முயற்சித்தேன்! ஆனால், எல்லாவற்றுக்கும் அடிப்படை,

உன் மீது கொண்ட அன்புதான் கண்மணி! அளவுகடந்த அன்பு.

''அவ்வளவு அன்பு வைத்ததால்தான், என்னை நம்ப வில்லையே என்று ஆத்திரம் வந்தது! நம்பாதவளின் காதல் பொய் என்ற எண்ணம் வந்தது! பணம்தான், உன்னை ஈர்க்கிறது என்ற ஆத்திரமும், அதற்காகப் பழி வாங்க வேண்டும் என்கிற வெறியுமாக, அநியாயமாகப் பேச வைத்தது!

''மருத்துவமனையில் படுத்துக் கிடந்து யோசிக்கும் போதுதான், நான் உன்னைச் சொன்ன குற்றத்தையே நானும் செய்திருக்கிறேன் என்று புரிந்தது...!'' என்றவன், அவள் கேள்வியாய் நோக்கவும் அது என்னவென்று சொன்னான்.

''உன்மீது, என் பெரும் குற்றச்சாட்டு என்ன மதி? எந்த நிலையிலும், நீ என்னை, என் அன்பை நம்பியிருக்க வேண்டும் என்பதுதானே? நான் நம்பினேனா? நம்பி யிருந்தால், நீ பணத்துக்காக என்னிடம் திரும்ப, வந்தாய் என்று என்னால் எப்படி நினைக்க முடியும்? அதற்குப் பழிவாங்குவதாகக் கண்ட கேவலமான பேச்சு எப்படிப் பேச முடியும்?''

சைதன்யனின் அந்தப் பேச்சை ஒரு நாளும் மன்னிக்க முடியாது என்று மதுவந்தி நினைத்தது உண்டு! ஆனால், அவன் உண்மையாகவே உருகி வருத்தப்படுவது தெரிந்தபோது, அவனைத் தேற்றவே, அவள் மனம் துடித்தது!



அவனது கையை அழுத்தி, ''விடுங்கள், சது! எல்லா
சிந்தாவின் பாட்டி ஏற்றி விட்டதை நம்பி, அவ
முட்டாள்தனமாக..., ஐயோ! அவள் என்ன என்ன
வாளோ? பாவம்! உங்கள் முகத்தைப் பார்க்கவே, கூசி
குறுகப் போகிறாள்!'' என்று, அவர்களுக்குள் எல்லா
சரியாகிவிட்டது என்பதை அவள் சொல்லாமல் சொல்
அதைப் புரிந்து கொண்டு அவன் முகம் மலர்ந்து நகை
தான்!

''அவளுக்காக ரொம்பவும் வருத்தப்படாதே! த
தப்பை உணர்ந்து, மன்னிப்புக் கேட்டு, எனக்கு ஏற்கனவே
நீளமாய் ஒரு கடிதம் எழுதியிருக்கிறாள்! அதில் உன்னை
பற்றி ரொம்பப் பயங்கரமாக வர்ணித்திருக்கிறாள் பா
படித்ததும்...''

''ஓ! அதனால் வந்த மன மாற்றம்தானா?''

''மண்ணாங்கட்டி!'' என்றான் அவன்.'' கடிதம் வந்த
விபத்துக்கு முந்திய நாள். உன்னை என் தலையில்கட்
முயற்சி! எல்லாம் உன் ஏற்பாடு என்று, அன்று, அ
வேறு ஆத்திரத்தில் இருந்தேன்! எல்லாமாகச் சேர்ந்து
சாரிடா!''

அவன் மீண்டும் நோவது பிடிக்காமல், ''ஊகூ
இனிமேல், இந்த சாரி, பூரி எல்லாம் நமக்குள் வரவே
கூடாது! அன்பு என்பது என்ன? ஒருவரை ஒருவர் புரிந்
கொள்வதுதானே! புரிந்து கொண்டாயிற்று! இடைப்பட்
சோதனைகள் நம் அன்பைப் புடம் போட்டுத் தந்து விட்ட
சுத்தத் தங்கமாய் தூய அன்பு கிடைத்த பிறகு, புடம் போட்

தீச்சூடு பற்றி, யாராவது பேசுவார்களா?'' என்று கேட்டாள், அவள்.

''கூடாது கண்மணி!'' என்றான் அவன் பணிவாக! ''அதுவும் நீ சொன்ன பிறகு, கூடவே கூடாது!''

''ஆனால் எனக்கு இன்னொரு சந்தேகம்!'' என்று, யோசிப்பது போலப் பாவனை செய்தாள் மதுவந்தி.

''என்ன அது?'' என்று கண்ணில் எதிர்பார்ப்புடன் கேட்டான் அவன்!

''என்னமோ, என்னை உங்கள் தலையில் கட்ட முயற்சி என்றீர்களே! தாங்குமா? சும்மாவே, விபத்தில் மாட்டிய தலை!''

''தூக்கிக் கொண்டு போய், உன் பெற்றோர் முன் விடுகிறேன்! பார்க்கிறாயா?'' என்று, அவளைக் கரம்பற்றி எழுப்பினான் சைதன்யன்.

கலகலவென்ற சிரிப்புடன் இருவரும் வருவதைப் பார்த்து மனம் பூரித்தார் கேசவன்!